Sangathamil

சங்கத்தமிழ்


யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 10 | இருவாரத்திற் சர்வதேச மின் செய்தித்தாள் | 01 அக்டோபர் 2021









தர்மச் சக்கரம்?



உணமைக்கென அரிச்சந்திரன் எனும் கதாபாத்திரத்தை வடித்து, அதில் பெருமை காணும் நாடு இந்தியா. இளம் வயதில் தான் பார்த்த அரிச்சந்திர நாடகம் தான். அக்காலத்தில் தனது கொள்கையை வகுக்கக் காரணமாய் இருந்ததென மஹாத்மா காந்தி தனது சுயசரிதையில் கூறியுள்ளார்.

ஆனால் தமிழீழ மண்ணில் ராஜீவ் தலைமையிலான ஆட்சியாளர்கள் புரிந்த அனர்த்தங்களும். இந்தியாவின் தொலைக்காட்சி, வானொலி என்பன எழுப்பிய உண்மைக்குப் புறம்பான அலறல்களும் அரிச்சந்திரனையும், மஹாத்மா காந்தியையும் கேள்விக்குறியாக்கிவிட்டன.

இதன் உண்மையை உணரும் தேசபக்திமிக்க ஒவ்வொரு இந்தியனும், அல்லது குறைந்த பட்சம் மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு இந்தியனும் வெட்கித் தலைகுனிவான் என்பது வெளிப்படை.

இந்திய ஆட்சியாளர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாம் எதிர் அர்த்தம் தான் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எமது மக்கள் மத்தியில் இப்போது தோன்றியுள்ளது என்பதை இந்திய தேச பக்தன் ஒருவனுக்கு வேதனையுடன் எடுத்துக்கூற வேண்டியுள்ளது.

கடந்தகாலம் முழுவதும் இந்திய ஆட்சியாளர்கள் இலங்கை தீவின்மீதும், எங்களம் மீதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் எமக்கு இதனைத்தான் வற்புறுத்தி நிற்கின்றன.

இந்தியத் தேசியக் கொடியில் "தர்மச் சக்கரம்" இரப்பதைக் கண்டு ஒரு காலத்தில் எமது மக்கள் உள்ளூர மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டார்கள். ஆனால், எமது மண்ணில் இந்திய இராணுவம் புரிந்த அனர்த்தங்களைப்பார்த்த போது, தர்மச் சக்கரத்தின் மீது எமது மக்களுக்கு பலத்த சந்தேகம் எழுந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தி, தர்மச்சக்கரத்தைத் தனது சின்னமாக ஏந்திய வரலாற்றையும், பௌத்த தர்மப்பரம்பல் என்ற அழகிய பசுமையான பெயரால், இலங்கைத் தீவில் தனது ஆதிக்கத்தை விஸ்தரித்த விதந்தையும் எண்ணிப்பார்க்கின்றோம்.

தம்ம விஜயத்தை மேற்கொள்ளுமாறு "மகிந்ததேரோ" தலைமையில் இலங்கைக்கு ஒரு தூதுக் குழுவை அசோகச் சக்கரவர்த்தி அனுப்பிவைத்ததாகவும், அப்போது இலங்கையில் இனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த "திஸ்ஸ" எனும் மன்னனை "மகிந்த தேரோ பௌத்தனாக மதம் மாற்றி, "தேவநம்பிய" என்ற பட்டப் பெயருடன் மீள்முடிசூட்டியதாகவும், அதற்குப் பதிலாக தேவநம்பிய திஸ்ஸ மன்னன் அசோகச் சக்கரவர்த்திக்குச் சில பரிசுப்பொருள்களைக் கொடுத்து அனுப்பியதாகவும் அப் பரிசுப் பொருள்களுள் ஒன்று "இளமையின் இதழ் விரியும் பருவக் கன்னி ஒருத்தி", என "மஹாவம்சம்' XI ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. பௌத்த தர்மத்தை பெரு விருப்புடன் ஏற்றக்கொண்ட ஒரு மன்னன், பௌத்த தர்மத்தை பெருவிருப்புடன் பரப்பும் ஒரு சக்கரவர்த்திக்கு அனுப்பிவைக்கக்கூடிய ஒரு பரிசுப் பொருளா இது? உண்மையில் இவை பரிசுப் பொருள்களல்ல; திறைப் பொருள்கள் என்றே வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஆகவே தர்மம் என்ற பெயரில் ஓர் ஆதிக்கப் பரவலே இங்கு நிகழ்ந்துள்ளதெனலாம்.

1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொது நூலகம் உட்பட யாழ். நகரின் பல பகுதிகள் இலங்கைப் பொலிசாரால் எரிக்கப்பட்டதையும், இராணுவ அனர்த்தங்களையும் தொடர்ந்து, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், அப்போது இந்தியா சென்று, அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தியைச் சந்தித்து எமக்கு ஏற்பட்ட துயரங்களை விளக்க முற்பட்டார். அந்த வேளை அமிர்தலிங்கத்தை நோக்கி, இந்திரா காந்தி அம்மையார் ஒரு குளிர்ந்த வார்த்தையை உதிர்த்தார். அதாவது "நீ தென்னாசியாவிலுள்ள ஒரு தலை சிறந்த இராஜதந்திரி" என்பதே அந்த வார்த்தையாகும்.

அமிரிடமிருந்த தமிழீழக் கோரிக்கையை கைவிடப் பண்ணி அவரைத் தனது கைக்குள் போடும் நோக்கத்துடன் இந்திரா சூடிய புகழார மகுடத்தை அமிர் நம்பி, தலையிற் சுமக்கலானார். திஸ்ஸ மன்னனுக்கு அசோகச் சக்கரவர்த்தி "தேவநம்பிய" என புகழாரம் சூடியது போலவே அமிருக்கும், இந்திராகாந்தி "தலைசிறந்த இராஜதந்திரி" எனப் பொய் மகுடம் சூட்டினார்.

உணவுப் பொட்டலங்களை வானத்திலிருந்து போட்டபோது, எம்மைப் பாதுகாக்க இந்தியா வந்துவிட்டதாக தமிழீழ மக்கள் முதலில் நம்பினர். உணவுப் பொட்டலங்கள் பின்பு குண்டப் பொட்டலங்காளக வெடிக்குமென அவர்கள் நினைத்துப் பார்க்கவேயில்லை. இப்போது இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் போது பின்வரும் முடிவுகளுக்கே நாம் வரமுடிகின்றது.

இந்திய ஆட்சியாளரின் அகராதியில்

தர்மப் பரம்பல் என்பது
ஆதிக்கப் பரம்பல் என்றும்
தேவநம்பிய...
அடிமையானவன் என்றும்
சிறந்த இராஜதந்திரி என்பது
அசல் ஏமாளி என்றும்
உணவுப் பொட்டலம் –
குண்டுப் பொட்டலம் என்றும்
தர்மச் சக்கரம் –
கொலைச் சக்கரம் என்றும்
உண்மை –
படுபொய் என்றும்

இவ்வாறு அர்த்தம் கொள்ள வேண்டிய வேதனை மிகுந்த நடைமுறையினை இந்திய ஆட்சியாளர்கள் எம்முன் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். ஆனால் இந்தியத் தேசியக் கொடியிலுள்ள தர்மச் சக்கரம் ஆட்சியாளரால் மாசுபடுத்தப்பட்டுள்ள நிலையைக் களைந்து, தர்மச் சக்கரத்தை அதற்கே உரிய புனிதமான நிலைக்கு உயர்த்த – தேசபக்தியும், மனச்சாட்சியும் நிறைந்த ஒவ்வொரு இந்தியனும் முயல வேண்டும். இந்தியக் கொடி புனிதமாகட்டும். எமக்கு இழைத்த அநீதிகளைக் கழைந்து, எமது மனதில் ஏற்பட்டுள்ள புண்ணை ஆற்ற இந்திய தேசபக்தர்கள் இனியாவது முயல்வார்களென நம்பவோமாக.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
◆ Purchasing a Residential Property
◆ Selling a Residential Property
◆ Residential Mortgage Refinancing
◆ Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
விருகள், கொண்டோக்கள், வாடகை வசியபிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in Jewellery Making & Tailoring Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA
TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின்
மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு
$100 மட்டும்
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
சாரா தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி சரஸ்வதி பாலராசா
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs
• Basement Renovation
• Carpet Installation
• Drywall Installation
• Hardwood Flooring Installation
• Washroom Remodeling
• Kitchen Cabinets
• Kitchen Cabinets Installation
• Painting
• Plumbing
• Tiling
100% SATISFACTION GUARANTEED
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We've definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

முக்கிய அறிவித்தல்
உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கின்றது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலங்காலமாக நிலைத்திருந்த பழமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகின்றது. எமது மனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய வழிப்புணர்வு தோன்றிவருகிறது. சமூக உறவுகளில் புரட்சி கரமான மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக் கின்றது. எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாகப் பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புற்றுவருகிறது.





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி (TP)
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
முகநூல் (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய் யப் படுகிறது. எந் தவொரு குறைபாடுகளுக் கும் பிழைகளுக் கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



வரலாற்றில் முதல் பெண்புலி

"அப்ப காயத்திற்கு என்ன சொல்வது?" என் றேன். "உனக்குத் தடி குத்திவிட்டது என்ற கூறுகிறேன். எனது காயத்தை யாருக்கும் காட்டமாட்டேன்" என்றாள். அதேமாதிரி மடித் திருந்த சேட் கையை இழுத முடிவிட்டாள். முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே அதே மாதிரியே கூறினாள். இருவரும் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை யாருக்கும் சொல்லவில்லை. ஒருநாள் எனக்கு எதற்கோ அடித்தவிட்டாள். இருவருமே துரத்துப்பட்டுச் சண்டை செய்ய, பொறுப்பாளர் வந்து விலக்குப் பிடித்து விட்டு, இருவருக்கும் தண்டனை தந்து, "உங்கள் இரண்டு பேரையும் மேய்க்க எனக்கு பிறம்பாக ஒருநாள் வேணும்" எனக் கூறி. "போங்கோ" என்று விட்டார். மாலதி அடித்த கோபத்தில் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை எமது பொறுப்பாளரிடம் கூறிவிட் டேன். "சொல்லிப் போட்டாய்" இஞ்சால வா, உனக்கு நல்லாத் தாறன்" என்றாள். இவள் நினைத்ததைச் செய்தே முடிப்பாள். இதனால் அவளின் மோட்டடிக்குப் பயந்து, பொறுப் பாளருக்குப் பின்னாலேயே திரிந்தேன். அன் றிரவு நித்திரையில் வைத்து "நம்பிக்கைத்து ரோகி" எனக் கூறி, எனக்கு அடித்து விட்டாள். நான் நல்ல நித்திரையில் இருந்ததால் திருப்பி அடிக்காமலேயே படுத்து விட்டேன்.

ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளர் எமக்குப் புதிய சயனைட்டுகள் தருவதற்காகச் சயனைட் டைக் கறுப்பு நூலால் கட்டிக்கொண்டிருந்தார். நானும் மாலதியும் பொறுப்பாளருக்கு அருகில் இருந்தோம். "நாங்களும் கறுப்பு நூல் கட்டு றம், தாங்கோ" என்றோம். பொறுப்பாளர் "இரண்டு பேரும் ஒரிடத்தில் வந்தால் நன்மை நடக்காது. அநியாயம் தான் நடக்கும். இரண்டு பேரும் சும்மா இருங்கோ" என்றார். கெஞ்சிக் கேட்டதால் எனக்குச் சயனைட்டில் கறுப்பு நூல் கட்ட அனுமதிகிடைத்தது. நான் சயனைட் கழுத்தில் நூலைப் போட்டு இறுக்கிக்கொண் டிருந்தபோது, இவள் "இறுக்காவிடில் கழண்டு விடும், நல்லா இறுக்கு" என்றாள். நான் இறுக்கியபோது, "இன்னும் இறுக்கி இழு மணி. இறுக்கி இழு மணி" என எனக்கு உற் சாகம் மூட்டியதால், நான் பலமாக இழுத்த போது, சயனைட் கழுத்தோடு உடைந்து விட்டது. எனக்குத் தூள் பறநந்ததால் சாது வான மயக்கம் ஏற்பட்டது. அவள் உடைந் ததை எடுத்து மணந்தபோது, அவளும் சாதுவான மயக்கமுற்றாள். பொறுப்பாளர் ஏசினார், "அநியாயப் படுவார் செய்கிற வேலைகள் ஓன்றா, இரண்டா...?"

கோட்டையிலும் தொலைத்தொடர்பு நிலையத்திலும்

1987ல் மன்னாரை விட்டு யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் கோட்டையைச் சுற்றிக் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இக்காலப்பகுதியில் பீச் றோட்பக்கமாகக் காவற் கடமையில் நின்றோம். ஒருநாள் நாங்கள் வேறு பகுதியில் கண்ணிகள் வைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். மாலதி மட்டுமே காவல் கடமையில் நின்றாள். அப் போது எதிர்பாராதவிதமாகக் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் முன்னேறி மாலதி யின் காவல் நிலைக்கு முன்னால் வந்து விட்டனர். மாலதி சிறது நேரம் தனித்து நின்றே இராணுவத்தினருக்கு எதிராக ரவைகளைப் பொழிந்து தள்ளினாள். சிறது நேரத்தில் மேஜர் சோதியாக்காவும், எமது பொறுப்பாளர்களும் சென்று சண்டை செய்தனர். மூன்று, நான்கு பேர் மட்டுமே சண்டை செய்வதைக்கண்ட இராணுவத்தினர் மேலும் முன்னேற முயற்சி செய்தனர். இவ்வேளையில் மேஜர் சோதியாக் காவின் குப்பி உடைந்து, அவர் மயக்கம் அடைந்த தால் அவரை இருவர் தூக்கிச் சென்றனர். மாலதி தனித்து நின்றே சுட்டுக் கொண்டு நின்றாள். மேஜர் சோதியாக்கா வைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்றதும், மாலதி ஓடிச்சொன்று, நாம் ஏற்கனவே வைத்திருந்த பன்றிக்குட்டி மைன்சை வெடிக்கச் செய்துவிட்டாள்.

பெரியதொரு வெடி ஒசையினால் அதிர்ச்சி அடைந்த இராணுவத்தினர் பயத்தின் பீதியால் பின்வாங்கி, கோட்டைக்குச் சென்றுவிட்டனர். பின்னர் "மாலதி ஏன் பன்றிக்குட்டியை அமத் தினாய்" எனக் கேட்கப்பட்டபோது, "ஆமியை



எதிர்த்துத் தாக்குவதற்கு எமது ஆட்கள் நிறையப்பேர் இல்லை என்பதை அவள் தெரிந்துவிட்டாள். இதனால் விரைவாக முன்னேறினான். எங்கடையாட்கள் வருவதற் கிடையில் ஆமி எங்களுடைய நிலைகளுக்கு முன்னேறி விடுவான் என்றதினர் அவனை பின்வாங்கச் செய்யவே எங்கேயோ கிடந்த மைன்ஸை அமத்தி விட்டேன்" என்றாள்.

மாலதி திடீர் என இப்படி ஒர் மாற்று நடவடிக் கையை செய்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைந் தோம். மாலதி எவ்வளவுதான் விளையாட்டத் தனம் செய்தாலும் அவளுக்குள் வீரமும் அஞ் சாமையும் நிறைந்து காணப்பட்டது. கோட்டை யில் இருந்து செல்லடி தொடங்கியதும் வெளிக் கிடப் போறான் என்ற ஊகம் எங்களுக்கு இருக்கும். உடனே நாங்கள் இராணுவத்தை எதிர்ப்பதற்கு, எங்களுக்கு என ஒதுக்கப்பட்ட காவல் நிலைகளுக்கு விரைந்து செல்வோம்.

இந்த விரைவு வேளைகளில் மாலதியே தனது நிலைக்கு முதலில் சென்று விடுவாள். நாமெல் லாம் செல்லடிக்கு நிலை எடுத்து, நிலை எடுத் துச் செல்வோம். மாலதியோ அப்பிடியில்லை. முகாமில் இருந்து ஓடத்தொடங்கினால் தனது காவல் நிலையை அடைந்ததும்தான் திரும் பிப்பார்ப்பாள். சிலர் கூறுவார்கள் "முரட்டு மாலதி" என்று...

மாலதி எந்நேரமும் சேட்கையை உயர்த்தி மடித்துவிட்டு, ஜீன்ஸ் காலை மடித்துக் கொண்டே நிற்பாள். நாங்கள் "ரகுமான் எடுவை" என்று என்று பகிடிபண்ணினால், அவள் "இல்லை, நான் புரூஸ்லீ எடுவைதான் எடுக்கிறன். எப்போதும் கையாலும் காலாலும் சண்டை பிடிக்கத் தயாராக இருக்கின்றேன். என்னைக் கண்டால் ஆமி ஓடுவான்" என்று கூறுவாள்.

1987ன் முற்பகுதியில் கோட்டைப் பக்கத் திலுள்ள தொலைத் தொலைத் தொடர்பு நிலையம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் மாலதி பங்கு கொண்டாள். சண்டை என்றால் மாலதி துடிப்புடன் நிற்பாள். உலங்குவானூர்தி வருவதையோ, குண்டு வீச்சு விமானம் வருவதையோ, செல்வருவதையோ பார்க் கவும் மாட்டாள். முன்னுக்குச் சென்று, ஆமி யைச் சுடுவதிலேயே குறியாக நிற்பாள். இதை மாதிரித்தான் தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதலிலும் ஈடுபட்டாள். ஒரு பெண் போராளி இந்நடவடிக்கையில் காயமடைந் தாள். காயப்பட்டவளைத் தூக்கிச் செல்லும்படி மாலதியிடம் பொறுப்பாளரால் பணிக்கப்பட்ட போது (இந்நேரம் சண்டை முடிந்து, ஆயதங் கள் கைப்பற்றப்பட்டுக்கொண்டிருந்தன), மாலதி செல்ல மறுத்து, "வேறு ஒருவரை அனுப்புங்கள்" என்று கெஞ்சினாள்.

"வேறுயாருமில்லை, சண்டை முடிந்தது தானே, நீங்கள் கொண்டு போங்கோ" என்ற போது, அவ்விடத்தைவிட்டுப்போக விருப்ப மின்றி, காயப்பட்ட போராளியைத் தூக்கிச் சென்று, மதிலுக்கு அங்கால் வேறு ஒரு போராளியைக் கூப்பிட்டு "இவரை கொண்டு போகட்டாம் என்று பொறுப்பாளர் சொன்னவர்" எனக்கூறி, காயப்பட்ட போராளியை அவசர மாக ஒப்படைத்துவிட்டு மீண்டும் தான் நின்ற இடத்துக்கு விரைந்து ஓடிவந்து விட்டாள்.

இந்தச் சண்டையின் போது மாலதியின் உடலில் சில பகுதிகளில் (கை, கால் உட்பட) சிறு, சிறு செல் துண்டுகள் இருந்தன. "மருத் துவமனைக்குச் சென்று பீஸ்களை எடுத்து விட்டு வா" என்ற போது, "போகமாட்டேன்" என்று மறுத்துவிட்டு புதுப் பிளேற் எடுத்து தானே தன் உடம்பில் இருந்து செல் துண்டுகளை வெட்டி எடுத்தாள். தன்னைத் தானே கீறும் அளவுக்கு அபாயகரமான துணிவு கொண்டவள் தான் அவள்.

மாலதியின் குறும்புகள்

மாலதி, சண்டை செய்வது என்றால் மிகவும் சந்தோஷத்தில் துள்ளிக்கொண்டு நிற்பாள். சண்டைக்கான அறிகுறிகள் எதுவும் தென்பட் டால் உடனேயே மகிழ்ச்சியோடு "ஆமிக்குச் சொல்லியடிப்பேனடி, அடிச்சன் என்றால் நெற்றி அடிதானடி" என்று பாடிக்கொண்டே நிற்பாள்.

1987 இன் நடுப்பகுதியில் நாங்கள் கோப் பாய்க்கு வந்தோம். கோப்பாயில் இரந்து ஒவ் வொரு இரவும் நாவற்குழி இராணுவ முகா மைச் சுற்றிலும் காவற்கடமை நிலைகள் இருந்தனர். இதில் நாம் கோப்பாய்ப் பாலத்தில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இரவில் இரண்டு பிரிவாகப் பிரிந்து படுப்போம். எங் களுக்குக் கிடைத்த இடம் சுடலை. சுடலைக் குல் படுத்திருப்போம் சத்தங்கள் எதுவும் கேட்டால் காவற்கடமையில் நிற்பவர் இன் னும் இரண்டொருவரை எழுப்பிக் கொண்டு மண்மேட்டால் சென்று, ஆமியின் நடமாட் டத்தை அவதானித்து வருவோம்.

மாலதி காவற்கடமையில் நிற்கும்போது ஏதாவது சத்தம்கேட்டால், தானே தனியாகச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவ தானித்து வருவாள். எங்கள் நிலைக்கு முன்னால் தண்ணீர் இருந்தது. தண்ணீர்ச் சத்தம் கேட்கும். நாவற்குழி இராணுவ முகா மில் அடிக்கடி விளக்குகளை அணைப்பான் ஆமி. அவ்வேளையில் நாங்கள் உசார் நிலைக்கு வருவோம். காவற் கடமையில் நிற்கும் மாலதி அடிக்கடி எல்லாரையும் எழுப்பு வாள். திடுக்கிட்டு நித்திரையால் எழுப்பி "என் னடி" என்றால், "உண்மையாய் நான் கறுப் பாய், வெள்ளையாய் ஆவியைக் கண்டனான்" என்று கூறுவாள். "நேற்று எரிச்ச பொடியின்ர ஆவியடி. இண்டைக்குத்தான் வெளியே, போகுதாக்கும்" என்று மேலும் மேலும் எங்களைப்பயமுறுத்துவால்.

ஒருநாள் நான் ஒரு சிமேந்து மேடைமேல் படுத்திருந்தபோது மாலதி வந்து எழுப்பிச் சொன்னாள், "எடியே கெதியாய் எழும்படி எழும்படி" என்றாள். அவசரமாக எனது ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு "ஆமியோ வந்திட்டான்" என்று கேட்டபோது "எடியே நீ படுத்திருந்த இடம் சமாதியடி" என்றாள். எனக் குச் சரியான கோபம் ஏசிவிட்டுப் போய்ப்படுத்து விட்டேன். மாலதியின் இந்தத் தொல்லை களால் மாலதிக்குக் காவற்கடமை நேரம் போடாமல் விடுவோம். இரண்டு நாளால் சண் டைபிடித்து, காவற்கடமை நேரம் போடச் செய்து விடுவாள்.

காவற்கடமையில் ஈடுபடும் இடத்துக்குச் சென் றதும் "வாடி. நித்திரை கொள்ளும் வரை இடம் பார்ப்போம்" என்பாள். "சும்மா ஓரிடத்தில் இரடி" என்றால், "எடியே எங்கே எங்கே நிலை எடுத்து அடிபடலாம் என்று இடம் பார்த்தால் தானே ஆமி வந்தால் அட்டகாசமாக அடி படலாம்" என்பாள். பின்னர் இரண்டு பேரும் கோப்பாய் கிறேசர் அடியில் இருந்து கைதடிப் பாலத்தொங்கல்வரை நடந்து, நடந்து செல் வோம்.

பகலில் எங்களுடைய முகாமில் நிற்போம். பகலில் இரண்டுபேரும் ஒரே சண்டை பிடிப் போம். சற்று நேரத்தில் சமாதானமாகி ஒன் றாக வெளியில் செல்வோம். நான் அடித்து விட்டு ஓடுவேன். அவள் சந்தி என்றும் பாராமல், கோப்பாய்ச் சந்தியில் துரத்தி வந்து அடித்துவிட்டே திரும்புவாள்.

ஒரு நாள் இரண்டு பேரும் துரத்துப்பட்டுக் கொண்டு கோப்பாயில் ஒரு அப்புவின்

வாழைத்தோட்டத்துக்குள் சென்றோம். நான் முதலில் சென்று, களைத்துப்போள், “அப்பு தண்ணிதாணை” என வாங்கிக் குடித்தக் கொண்டிருக்க இவளும் களைத்துப்போய் வாந்தாள். “எனக்கும் தண்ணி தா மணி” என்றாள். நானும் தண்ணீரைக் கொடுத்து விட்டு “எனக்கு அடிக்காதை மணி” என்றேன். அவள் சிரித்துவிட்டு, “வாபேசுக்குக் போவம்” என்றாள்.

கோப்பாய் பாலத்தடியில் அடிக்கடி உலங்கு வானூர்தி தாழப் பறக்கும். அந்நேரங்களில் நாம் கிறேசரடிக்கு விரைந்து செல்வோம். இவ் வேளைகளில் மதில்களைப் பாய்ந்து, பாய்ந்து முதலில் கிறேசரடிக்குச் செல்பவள் மாலதி தான். மாலதி மதில் பாய்வதில் சரியான கெட்டிக்காரி. “இந்தா பார்போறன்” என்றால் அடுத்த நிமிடம் மதிலுக்கு அங்கால் நிற்பாள்.

கொக்கோக்கோலாவும் பன்ராவும்

எங்களுக்குக் “கொக்கோக்கோலா குடிக்க கூடாது“ என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந் தது. மாலதிக்கக் கொக்கோக்கோலா என்றால் சரியான பிரியம். கொக்கோக்கோலா குடிக்கக் கூடாது என்று தடைவிதித்த இரண்டாம் நாள் மாலதி என்னிடம் “வாடி கூல்பாருக்குப் போய் வருவோரும்” என்றாள். எனக்குத் தெரியும், இவள் கூல்பார் சென்றால் கொக்கோக் கோலாதான் குடிப்பாள் என்று, நான் “வர வில்லை” என்றேன். “இண்டைக்கு மட்டும் வா” என்றாள். “சரி வா, கொக்கோக்கோலா குடிக்கக்கூடாது. வேறு ஏதாவது குடிப்போம்” என்றேன். அந்நேரம் வெளியில் செல்வ தென்றால் சாதாரணமானவர்களாகத்தான் உடையணிந்து செல்வோம். கடைக்கு சென்ற மாலதி இரண்டு பன்ராவுக்கும் இரண்டு கொக்கோக்கோலாவுக்கும் சொன்னாள். “ஏன் மாலதி”? என்றேன். சிரித்துக்கொண்டே “பன்டாவை மேசையில் வைத்து விட்டுக் கொக்கோக்கோலாவைக் குடிப்போம்” என் றாள். “என்ன மாலதி விசர்க்கதை கதைக் கிறாய், எங்களையல்லோ கொக்கோக்கோலா குடிக்கவேண்டாம் என்றார்கள். குடித்துக் கொண்டிருக்கையில் யாராவது எமது ஆட்கள் வந்தால் என்ன செய்யிறது?” என்றேன் “இண் டைக்குமட்டும் குடிப்போம். எனிமேல் குடிக் கவே வெண்டாமெடி” என்றாள். சரியென மேசையில் அமர்ந்தோம். “முதலில் பன்டா வை எடுத்து, அரைவாசியைக் குடித்துவிட்டு மேசையில் வைத்துவிட்டு, பின் கொக்கோக் கோலாவை குடி” என்றாள். இடையில் எதிர் பாராதவிதமாக எமது உறுப்பினர் ஒருவர் வந்தார். நாங்கள் இருவரும் கொக்கோக் கோலாவைத் தள்ளிவைத்துவிட்டு, பன்டா வை குடித்துக்கொண்டிருந்தோம். அவர் சென் றபின் மீண்டும் கொக்கோக்கோலாவைக் குடித்துவிட்டு வெளியில் வந்ததும், மாலதி சொன்னாள் “எப்படி மணி என்னுடைய ஐடியா?” என்று. பின் இரவு பொறுப்பாளிடம் நடந்ததை மாலதி கூறி, தனக்குத் தண்டனை தரும்படி கேட்டாள். இந்தச்சம்பவம் நடத்தது 09.10.1987 இல்.

மாலதி எப்பவும் குழப்படிகளையும் குறும்பு களையும் செய்தாலும், இவளிடம் வீரமும் விசுவாசமும் நிறைந்து காணப்பட்டது. இவள் எவ்வளவு குறும்புகள் செய்தாலும், இவளுக் கெனக் கொடுக்கப்படுகின்ற வேலைகளை அழகாக, முழுமையாக, திறமையாகச் செய்துமுடிப்பாள்.

கடைசி நாள்



10.10.1987 இல்

காலையிலேயே தலையில் தோய்ந்துவிட்டு வந்த மாலதி, சமையல் அறைக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்தாள். நானும் ஏற்கனவே தலையில் தோய்ந்து எனக்குப் பிடித்தமான ஜீன்ஸ், சேட்போட்டிருந்தேன். மீனுடன் சாப் பிட்டுவந்த மாலதி நான் எதிர்பாராத விதமாக என் சேட்டில் கையைத் துடைந்துவிட்டாள். எனக்குப் பேசவார்த்தையின்றி, அவள்மேல் துப்பிவிட்டேன். அந்நேரம் மாலதி எனக்கு அடிக்கவில்லை. மீண்டும் போய்க் குளித்து விட்டு வந்தாள். நான் அவளை “என்னுடன் கதைக்கவேண்டாம்” என கூறிவிட்டேன்.

அன்று காலையே எமக்கொல்லாம் புதிய ஆயுதங்கள் கொண்டுவந்து தரப்பட்டன. மாலதிக்கு எம்-16 ஆயுதம் கொடுக்கப்பட்டது. மாலையில் எங்களை ஏற்ற வாகனம் வந்தது. அதில் எங்களுடைய குழுவை உடைப் பைகளுடன் ஏறச்சொன்னார்கள்: நாங்கள் தயாரானபோது ஒரு சின்னப்பிரச்சினை வந்தது. எமது குழுவில் நான்கு எம் -16 இருந்தது. எம் -16 உடன் உள்ள ஒருவரை வேறுகுழுக்குக் போகும்படி பணிக்கப்பட்டது. இதில் இரண்டுபோ் குழுத்தலைவிகள். ஒருவர் மருந்துவம் செய்பவர். ஆகவே மாலதிக்கே அடுத்த குழுவுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. “போகமாட்டேன்” என்ற மாலதி, பின் பொறுப்பாளரின் கட்டளைகுப் பணிந்து, அடுத்த குழுவுடன் நிற்கச் சம்மதித்தாள்.

வாசலில் கண்ணீர் மல்க மாலதி நின்று கொண்டிருந்தாள். நாங்கள் எமது உடைப் பைகளுடன் வாகனத்தில் ஏறிக்கொணடிருந் தோம். நான் என்னுடன் கதைக்கவேண்டாம் என்று சொன்னதால், மாலதி எனக்குக் கிட் டேவரவில்லை. வாகனம் புறப்பட்டத் தயாரா னபோது, நான் மறந்துபோய் விட்ட எனது சப்பாத்தை எடுத்துக்கொண்டு, ஓடி வந்தாள் மாலதி. கண்ணீர் மல்க என்னிடம் சப்பாத் தைத் தந்த மாலதி, “என்னோடு கதைக்கமாட் டியா மணி?” என்றாள். “இல்லை. நான் கதைப்பேன். கோபத்திலைதான் அப்பிடிச் சொன்னேன்” என்றேன். நாங்கள் சண்டைக் குத் தயாராகுகின்றோம் என்பது எமக்குத் தெரியும். மாலதிசொன்னாள் “கவனமாக நல்லா அடிபடு மணி, இருவரும் உயிருடன் இருந்தால் மீண்டும் சந்திப்போம்” என்றாள். இதுதான் மாலதி பிரிவின்துயரத்தோடு இறுதி யாக எனக்குச் சொன்ன உறுதியான வார்த் தைகள். இறுதியாக நான் கண்ட மாலதியில் குழந்தைத்தனம் தெரியவில்லை. மாறாக போருக்குத் தயாரான கம்பீரமான படை வீரனின் சாயல் அவள் மகத்தில் படிந்திருந் தது. நாங்கள் மாலதிக்குக் கை அசைக்கவும், எங்களை ஏற்றிய வாகனம் அவள் கை அசைத்தபடி நிற்க, பறந்து சென்றது.

மாலதியைப் பிரிந்த கவலை எனக்குமட்டும் இருக்கவில்லை. எங்கள் குழுவுக்கே இருந் தது. ஏன் என்றால் அவள்தான் எங்கள் குழு வில் கலகலப்பானவள். பயிற்சிப் பாசறையில் இருந்து ஒரே குழுவில் இருந்த எங்களுக்கு, பிரிவு என்று வந்ததும் மிகவும் கடினமாக இருந்தது. வாகனம் போய்க்கொண்டிருந்தது. என் மனம் வாகனத்தை விடவேகமாக ஓடிக் கொண்டிருந்தது. என் உள்ளுணர்வு கூறியது நான் மாலதியை நிரந்தரமாக பிரிந்து விடு வேன் என்று.

10.10.1987 அன்று நள்ளிரவில்

கோப்பாயில் எம்மவருக்கும், இந்திய இராணு வத்தக்குமிடையே சண்டை தொடங்கிய செய்தி கிடைத்தது. தொலைத்தொடர்பில், சண் டையின் செய்திகளையும் பணிப்புரை களையும் கட்டளைகளையும் பொறுப்பாள ருடன் இருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். திடீரெனத் தொலைத்தொடர்பில், ஒரு குழு, இன்னொரு குழுவுக்குப் பெண்போராளிகளில் ஒருவர் வீரச்சாவு என்ற செய்தியைத் தெரி வித்தது. எனக்கு ஒரு மாதிரி இருந்தது. நீண்டநாள் நட்புறவால் மனம் சொன்னது “ஆண்டவரே மாலதியாக இருக்கக்கூடாது” என்று. பொறுப்பாளரைக் கரைச்சல் பண்ணி னேன். “பெயர் என்ன என்று தொடர்பு எடுத்து கேளுங்கோ, கேளுங்கோ” என்று. திடீரெனத் தொலைத்தொடர்பு. வீரச்சாவடைந்தது மாலதி என்ற செய்தியைத் தாங்கி வந்தது.

நானோ, என்றுமே சந்திரத்திரதாத அதிர்ச்சி யைச் சந்தித்தேன். ஏனெனில் பெண்போராளி களில் முதல் முதலில் இவளின் இழப்பைத் தான் நான் சந்தித்தேன். “ஒ“ வெனப் பெரிதாக, நான் எங்கே நிற்கிறேன் என்ற நினைவுகூட இல்லாமல் அழுதேன். பொறுப்பாளர் சிறிது நேரத்துக்கப் பின் என்னை ஏசினார். “எங்கே நிக்கிறாய் என்று தெரியாமல் ஏன் இப்படிச் சத்தமாய் அழுகின்றாய்” என்று. என்றுமே பொறுப்பாளரை எதிர்த்துக் கதைக்காத நான், மாலதியின் பிரிவால் அன்று பொறுப்பாள ரையே எதிர்த்துக் கதைத்துவிட்டேன்.

மாலதி நாளும் சொல்வாள், பெண்புலிகளில் நான் தான் முதல் வீரச்சாவு அடைவேன் என்பாள். அவள் சொன்னதைப் போலவே, மாலதியே விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண்புலியாக, புரட்சிப் பெண்ணாக சரித்திரநாயகி ஆகிவிட்டாள்.

நானும், மாலதியும் கோப்பாயில் சிறேசரடி என்னும் இடத்தில் நடந்து திரிவோம். அவள் எதிரியை எதிர்கொள்ளக் காத்திருந்த, நடை பயின்ற, குறும்புத்தனங்கள் செய்த அதே இடத்தில் எதிரியின் குண்டை ஏந்தி, சரித்திர நாயகியாகச் சரிந்தாள். இவள் உலவிய, இவள் சரித்திர நாயகியாகிச் சிரிந்த அதே இடத்தில் அவளுக்காகக் கட்டப்பட்ட கல்லறை நிமிர்ந்து, அவளின் வீரத்தை, பசுமையான அவளின் நினைவுகளை உணர்த்தி நிற்கின்றது.

இப்படித்தான் மாலதி வீரச்சாவைத் சந்தித்துக் கொண்டாள். அன்று இரவு கோப்பாய் கைதடி வீதியாக வரும் வாகனங்கள் அனைத்தையும் மறித்துப் பரிசோதனை செய்யும்படி மாலதி நின்ற குழுவினரிடம் பணிக்கப்பட்டிருந்தது. எல்லோருமே காவற்கடமையில் நிற்கும் போது வருகின்ற வாகனம் ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்து அனுப்பினார்கள்.

கோப்பாய்ச் சுடலையடியில் மாலதி காவற் கடமையில் நின்றபோது, வாகனங்கள் வந்திருக்கின்றன. ஓடிச்சென்று வாகனத்தை மறித்திருக்கிறாள். மாலதி மறித்தது இந்திய இராணுவத்தின் ஆமட்கார்களை. திடும் திடு



மெனக் குதித்த இராணுவத்தினர் ரவைகளை கண்டபாட்டில் அடிக்கத் தொடங்கினர். மாலதி யும் எதிர்த்தாக்குதலைத் தொடுத்தாள். பின் எமது எல்லாக் குழுவினரும் மாலதியின் பக்கம் சென்று சண்டையில் இறங்கினர். எதிர் பாராத விதமாக ஏராளமான இராணுவத்தினர் எம்மவரது குழுவைச் சுற்றிவளைத்தனர். தாக்குதலைத் தொடுத்தனர். இவ்வேளையில் மாலதி படுகாயமடைந்துவிட்டாள். காயம டைந்தவளைத் தோழிகள் தூக்கி வரும் போது மாலதி “எல்லோரும் வீணாகச் சாகவேண் டாம். என்னை விட்டுவிட்டு என்ர எம் - 16ஐ (ஆயுதம்) கொண்டு நீங்கள் ஓடுங்கோ” என்றிருக்கின்றாள். தோழிகள் “இல்லை, நாங்க உன்னைக் கொண்டு போகின்றோம்” என்று கூறிய அடுத்த நிமிடமே மாலதி சய னைட்டைக் கடித்துவிட்டாள். ஏனென்றால் இராணுவத்தினர் சுற்றிவளைத்துவிட்டனர். கோப்பாய் கிறேசரடியில் மாலதி தன்னை அர்ப் பணித்தாள். ஆமியின் சுற்றிவளைப்பால், மாலதியின் ஆயுதத்தைத்தான் முதலில் கொண்டு வந்தார்கள். மாலதி சொன்னது போல், அடுத்த நாள்தான் மாலதியின் புகழுடலை மீட்டெடுத்தார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு போராளிகளும் எங்களின் சொந்தமண்ணின் விடிவுக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொள்கின்றார்கள். எல்லாப் போராளிகளும் தங்கள் உயிருக்கும் மேலாகத் தங்களின் ஆயுதங்களைத்தான் நேசிக்கின்றார்கள். இந்த வரிசையில் மாலதி யும்...

கோப்பாய் கிறேசரடியில் மாலதியின் பசுமை யான நினைவுகளைத் தாங்கி நிற்கும் அவளது கல்லறைக்கு அடிக்கடி என் கால்கள்



விரையும். அங்கிருந்து நான் திரும்புவது உர மேறிய உறுதியான போராட்ட உணர்வோடு மட்டுமே...

ஐப்பசி 1993 — சுதந்திரப்பறவைகள்



வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களுக்கு மரண சான்றிதழ்

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்டம்

செப்ரெம்பர் 21, 2021

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்கப்படும் என ஐ.நா மன்றில் சிறீலங்கா சிங்கள ஜனாதிபதி தெரிவித்த கூற்றை வன்மையாக கண்டிக்கி றோம் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் அமைப்பின் இனைப்பாளர் கலாறஞ்சினி தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் இன்று 1675 ஆவது நாளாக எமக்கு நீதி கோரிய தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் உள்ளோம். நூற்றுக்கு மேற்பட்ட, எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்த சகோதர சகோதரிகளை இழந்து விட்ட நிலையிலும், எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம் என்ற முனைப்புடன் உள்ளோம். இந்த நிலையில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற சிங்கள ஜனாதிபதி அங்கு ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ அவர்களுடன் நேற்று முன்தினம் (19.09.2021) விசேட சந்திப்பில் ஈடுபட்டிருந்தார். அவர் அங்கு இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ்களும், நட்டஈடும் கொடுப்பது பற்றி கூறியிருந்தார். அத்துடன் உள்ளகப் பிரச்சனைகள் உள்ளகப் பொறிமுறை யினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்ததாக ஊடகங்களில் வெளியான செய்திகளைப் பார்த்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்தோம்.

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தில் நேரடியாக சர்வதேசத்தினாலேயே குற்றம் சாட்டப்பட்ட, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும்படி ஐ.நா மனித உரிமை ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட சிறிலங்காவின் ஜனாதிபதியை, அதே ஐ.நா மன்றில் சர்வதேச சமூகம் இன்று வரவேற்று கைகுலாகு கொடுப் பதை நாம் கவலையுடனேயே உற்றுநோக்குகின்றோம். வேறு வழியின்றி எமது கடைசி நம்பிக்கையாக சர்வதேச நீதி பொறிமுறையே இருப்பதால், இந்த இராஜதந்திர சம்பிரதாயங்களையும் தாண்டி சர்வதேசம் பாதிக்கப்பட்ட எமக்கு நீதியை பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம். இவ்விடயத்தில் ஐ.நா வின் செயலாளர் உட்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் நீதி பொறிமுறை தொடர்பாக கேள்வி எழுப்பாமை பாதிக்கப்பட்ட எமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது.


2009, மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து பாதுகாப்புத் தரப்பினரதும், அரசினதும் உறதிமொழிகளை நம்பி எமது உறவுகளைக் கையளித்தோம். எம் முன்னலையில் எமது உறவுகள் சரணடைந்தனர். கண்கண்ட சாட்சிகளான நாம், எமது உறவுகளை மீட்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின் றோம். ஒரு நாளாவது விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந் தாலோ அல் லது அவர் களுடன் உறவு பேணியிருந்தாலோ சரணடையுங்கள் அல்லது எம்மிடம் ஒப்படையுங்கள், நாம் புனர் வாழ்வளித்து மீண்டும் உங்களிடம் ஒப்படைப்போம் என்று உறுதியளித்த படையினரதும், அரசினதும் பாதுகாப்புச் செயலர் தற்போது ஜனாதிபதியாக உள்ளார். நாம் எமது உறவுகளை உயிருடனேயே கையளித்தோம். எனவே அவரும் எங்கள் உறவுகளை புனர்வாழ்வளித்து எம்மிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். மாறாக உள்நாட்டிலும், ஐ.நா. தலைமையகத்தில் வைத்தும் மரணச் சான் றிதழும், நட்டஈடும் கொடுத்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறுவது புத்த தர்மத்துக்கு ஏற்புடையதா? இக்கூற்றை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு புத்தபெருமானின் போதனைகளை பின்பற்றும் மற்றும் மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் இதைக் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறோம்.

மேலும் உள்ளகப் பொறிமுறையில் எமது பிரச்சினை யைத் தீர்ப்பதென்பது கடல் வற்றிக் கருவாடு சாப்பிடு வதற்கு ஒப்பானது. இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதோ அரிது. அப்படியிருந்தும் அரிதாக ஓரிரு வழக்கில், நீதி வழங்கப்பட்டு மரண தண்டனை விதிக் கப்பட்டாலும் ஜனாதிபதி அவர்களுக்கு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கி விடுவார். அத்துடன் அவர்களை மேலும் இது போன்ற கொலைகளைச் செய்யத் தூண்டும் விதத்தில் ஊக்குவிப்பாகப் பதவி உயர் வும் வழங்குவார்கள். உதாரணத்துக்கு அண்மையில் மிருசுவில் 8 பேர் கொலையில் மரண தண்டனை விதிக்கப் பெற்ற சுனில் ரத்னாயக்க.

எனவே எமக்கு மரணச் சான்றிதழும் வேண்டாம், காணாமல் போனோர் அலுவலகமும் வேண்டாம், இழப் பீடும் வேண்டாம் திருப்பித் தருவதாகக் கூறி பொறுப்பேற்ற

அரசியல் கைதி யாரும் கொல்லப்பட்டிருந்தால் லொஹான் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறியிருப்பார்கள் – திரு . சிறிதரன் எம்.பி

செப்ரெம்பர் 21, 2021



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கும், ஓமந்தை யில் இராணுவத்தின் கை யில் ஒப் படைக் கப் பட்டவர் களுக் கும் மரணச் சான்றிதழ் வழங்குவது என்பது அவர்கள் இலங்கை அரசால் கொலை செய்யப்பட்டுவிட்டார் கள் என் பதை யா எடுத்துக் காட்டுகிறது? சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி!

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேயின் கையிலிருந்த துப்பாக்கி வெடித்து அதில் தமிழ் கைதிகள் மரணித்திருப்பார் களாயின், லொஹான் மனநலம் பாதிக்கப்பட்டவர் என கூறியிருப்பார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்றைய தினம் கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி புகையிரத நிலை யத்தில் நின்றிருந்தவர்களை, இராணுவ சிப்பாய் ஒருவர் 1985ஆம் ஆண்டு துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினார். அதில் 10 பேர் மரணித்தனர்.

அச்சம்பவம் தொடர்பான விசாரணைக்கு பின்னர் அவர், மனநலம் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவித்தனர்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேயும், அவரது சகாக்களும் துப்பாக்கியை காண்பித்து தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து அச்சுறுத்தியிருந்தனர்.

தங்களுடைய சப்பாத்துக்களை நக்கி சுத்தம் செய்யுமாறு அச்சுறுத்தியுள்ளனர்.

துப்பாக்கி அல்லது வெடி பொருட்களை சாதாரண ஒருவர் வைத்திருந்து கைது செய்யப்பட்டிருந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

ஆனால், லொஹான் ரத்வத்தேயின் கையிலிருந்த துப்பாக்கி வெடித்திருந்தால், அதில் தமிழ் கைதிகள் மரணித்திருப் பார் களாயின், லொஹான் மனநலம் பாதிக்கப்பட்டவர் என கூறியிருப்பார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் மீது சிறைச்சாலை அதிகாரி களின் ஒத்துழைப்புடன் காலம் காலமாக தொடர்ச்சியாக வன்முறை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

லொஹான் ரத்வத்த அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து சுட்டு கொள்வேன் என துப்பாக்கியால் விரட்டிய செயற்பாடு அரசின் எதேச்சதிகார செயற்பாட்டை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தையின் மிலேச்சத்தனமான செயற்பாடு இந்த நாட்டின் சட்டத்தையும் நீதியையும் கேள்விக்குட்படுத் தியுள்ளது.

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச் சர், கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு ஹெலியில் பயணித்து, தனது நண்பர் குழாமுடன் சிறைச்சாலைக்குள் நுழைந்ததோடு, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை மிலேச்சத்தனமாக, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

இச் செயற்பாடானது, இந்த நாட்டின் சட்டம், நீதி, இனநல் லிணக்கம் என்பவற்றை கேள்விக்குட்படுத்துவதோடு, கடந்தகாலங்களில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் அப்பாவித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன அழிப்புச் சம்பவங்களை மீள நினைவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது.

1983 ஆம் ஆண்டு கொழும்பின் உயர் பாதுகாப்புச் சிறைச் சாலையான வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து 53 தமிழ் அரசியல் கைதிகள், சக சிங்களக் கைதிகளால் குத்தியும், வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப் பட்டிருந்தனர்.

2000.10.25 ஆம் திகதியன்று மத்திய மாகாணத்தின் பிந்துனுவேவா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 27 தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் காடை யர் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்டனர்.

2012.07.04 ஆம் திகதி வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளான நிமல ரூபன், டில்றுக்சன் ஆகிய இரு தமிழ் அரசியல் கைதி களும் சிறைச் சாலைப் பொலிசாராலும், இராவத் தினராலும் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறான சிறைச்சாலைப் படுகொலைகள் அனைத்தும் தமிழ் அரசியல் கைதிகளை இலக்குவைத்து தொடர்ச் சியாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டு வந்த நிலையில், சிறைச் சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரான லொகான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளிடம் மிக மோசமான அதிகாரத் தொனியோடு, இனவாதத்தைக் கக்கும் வகையில் நடந்து கொண்டுள்ளமை, தமிழ் அரசியற் கைதிகளின் பாதுகாப்புக் குறித்த அச்சத்தை அவர் களுக் கும், அவர் களது குடும் பத் தினருக் கும் ஏற்படுத்தியுள்ளது.

லொஹானின் இராஜினாமா வெறும் கண்துடைப்பு. ஆகையால் அவரிடமிருக்கும் சகல பதவிகளையும் அபகரித்து, அவரை கைது செய்து விசாரணை செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தில் இலங்கை அரசு பாதுகாப்பு வலயம் என அறிவித்துவிட்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தி மக்களை படுகொலை செய்த மையானது ஒரு இன அழிப்பின் அதியுச்ச செயற்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தனது இன்றைய பாராளுமன்ற உரையில் தெரிவித்தார்

நாங்கள் இறந்து விட்டால் சாட்சியங்கள் அழிந்து விடும் அதனையே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது

– மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்–

செப்ரெம்பர் 17, 2021



நாங்கள் இறந்து விட்டோம் என்றால் சாட்சியங்கள் அழிந்து விடும். அதனையே அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித் துள்ளார்.

ஆகவே இலங்கை இராணுவத்தையோ அல்லது அரசாங் கத்தையோ நாங்கள் நம்பவில்லை. இதனால் எங்களுக்கு சர்வதேசம் ஒரு நல்ல பதிலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் விடுக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, “ஜெனிவா 48 ஆவது அமர்வு இடம் பெற்று வருகின்றது.

இந்நிலையில் நாங்கள் ஜெனிவாவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஒரு தீர்வு தேவை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக அம்மாக்கள் இன்று சுமார் 1500 நாட் களாக வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.

நாங்கள் வீதியில் இறங்கி எமது உறவுகளை மீட்க போராடுவது உலக நாடுகளுக்கே தெரியும். நாங்கள் நீதிக்காக போராடி வருகிறோம் தவிர நிதிக்காக போராட வில்லை.

மன்னார் மாவட்டத்தில் முப்படையை நம்பியே நாங்கள் இருந்தோம். ஒன்றும் நடக்காது எமது பிள்ளைகள் பாது காப்பாக இருப்பார்கள் என்று நம்பி இருந்ததோம்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று இதுவரை எந்ததொரு தகவலும் இல்லை.

ஆகவே, நாங்கள் இறப்பதற்கு முன் எமது பிள்ளைகளின் நிலை என்ன என்று எமக்கு தெரிய வேண்டும். எமது பிள்ளைகளின் நிலை என்ன? அவர்களை எங்கே வைத்துள்ளீர்கள்? அவர்கள் இருந்தால் அவர்களை விடுதலை செய்ய உதவுங்கள் என்றுதான் நாங்கள் இன்று உலக நாடுகளிடம் கேட்கின்றோம்.

எமது பிள்ளைகளை வீதியில் நின்று தேடுகின்ற அம்மாக் களாக நாங்கள் இருக்கின்றோம். அவர்களின் கண் ணீரை உலக நாடுகள் பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

ஜெனிவா பேச்சுவார்த்தையில் எமக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இலங்கை இராணுவத்தையோ அல்லது அரசாங்கத்தையோ நாங்கள் நம்பவில்லை.

எங்களுக்கு சர்வதேசம் ஒரு நல்ல பதிலை வழங்க வேண் டும் என்ற கோரிக்கையை ஜெனிவா 48 ஆவது அமர்வில் கோரிக்கை விடுக்கின்றோம்.

எங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும். எங்களின் காலங்கள் இன்னும் அதிகம் இல்லை. நாங்கள் இறந்து விட்டோம் என்றால் சாட்சியங்கள் அழிந்து விடும். அதனையே அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக் கின்றது.

ஒரு அம்மா உயிருடன் இருக்கும் வரை பிள்ளைகளுக் கான போராட்டம் நடந்து கொண்டு இருக்கும்” என அவர் குறிப்பிட்டுள்ளர்.

பொலிஸ் நிலையம் முன்பாக இளைஞனின் சாவுக்கு நீதி கோரி மக்கள் போராட்டம்

செப்ரெம்பர் 17, 2021

காங்கேசன்துறை உள்ள சிறீலங்கா பொலிஸ் நிலையம் முன்பாக சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் மரணத் திற்கு நீதி கோரி உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

காங்கேசன் துறை பொலிஸ் நிலையம் முன்பாக வீதி யோரமாக நேற்றைய தினம் வியாழக்கிழமை சுய நினைவற்றிருந்த இளைஞனை மீட்டு வைத்திய சாலை யில் அனுமதித்த போது, இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கீரிமலை நல்லிணக்கபுரத்தை சேர்ந்த ம. ஜெனுசன் (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அந்நிலையில் குறித்த இளைஞன் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் எனும் சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை குறித்த இளைஞன் நேற்றைய தினம் மரண சடங்கொன்றில் கலந்து கொண்டிருந்த வேளை அங்கு சிலர் அவருடன் முரண்பட்டதாகவும், அவர்களே இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கொலை சம்பவம் குறித்து துரித விசாரணைகளை முன்னெடுத்து கொலையாளிகளை கைது செய்யக் கோரியே போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.



தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிடவில்லை

– யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.வி. விக்னேஸ்வரன் –

செப்ரெம்பர் 15, 2021



காணி அபகரிப்பு குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிடாமை மனவருத்தத்தைத் தரு வதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி அவர் குறிப்பிட வில்லை என்பது மனவருத்தத்தைத் தருகின்றது. மொத்தத்தில் நாம் எதிர்பார்த்த பல விடயங்கள் கூறப் படாமல் விட்டாலும் தற்போதைக்கு இலங்கை அரசாங் கத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக கை எடுத்துள்ளார். அரசாங்கமும் வேறு வழியின்றி அதற்கு இசைந்துள்ளது. பணம் தான் பிரச்சினை. அத்துடன் நாம் நடப்பவை பற்றிய உண்மை விபரங்களை பட்டியலிட்டு அவருக்கு அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

எமது காணிகளை அரசாங்கம் தந்திரமாகவும் பலாத் காரமாகவும் கையேற்றல் பற்றி எதுவும் குறிப்பிடப்பட வில்லை. ஒரு வேளை பல உண்மையான தரவுகளை விபரமாக அவர் எதிர்பார்த்திருக்கின்றாரோ நான் அறியேன். அடுத்த மார்ச் மாதக் கூட்டத்திற்கு முன்னர் இவை பற்றி முழு விபரங்களை நாம் சேகரித்து அனுப்ப வேண்டும்.

எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரை யில் குறிப்பிட்டுள்ளார். முதலாவதாக மக்களை வேவு பார்ப்பது அவர்களை அச்சுறுத்துவது மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்களை, பத்திரிகை யாளர்களை, காணாமல்போனோரின் குடும்ப உறுப் பினரைக் குறிவைத்து அவர்களை நீதிமன்றில் நிறுத்து வது போன்ற செயற்பாடுகள் தற்போது விரிவடைந்து மாணவர்களை, கல்வியாளர்களை, மருத்துவர்களை ஏன் மதத் தலைவர்களையும் அரசாங்கம் கண் காணிக்கத் தொடங்கியுள்ளது என்பதைக் கூறியுள்ளார்.

இரண்டாவதாக நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் பறிப் பேசினால் போதாது நடைமுறையில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்றுள்ளார். மூன்றாவதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற் பாடுகளை உடனே தற்காலிகமாகவேனும் செயலிழக்க வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

நான்காவதாக 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று நடந்த குற்றங்கள் சம்பந்தமான சூத்திரதாரிகளை உடனே கண்டுபிடித்து உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்றுள்ளார். இப்படி பல விடயங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று பொருள்படக் கூறியுள்ளார். மேலும் அரசாங்கத்திற்கு சார்பாகவும் பேசி தொடர்ந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் அவசியமான செயற்பாடுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளி யிட்டுள்ள அறிக்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

நாகர்கோவில் பாடசாலை படுகொலை 25 ஆம் ஆண்டு நினைவு நாள் மலர் வணக்கத்துடன் செலுத்தி நினைவு கூர்ந்தனர்

செப்ரெம்பர் 22, 2021



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மகா வித்தியாலய பாடசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்ட 25 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று நினைவு கூரப்பட்டுள்ளது.

பருத்தித் துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆ.சுரேஸ்குமார் மற்றும் வே.பிரசாந்தன் ஆகியோர் சுடரேற்றியும், அகவணக்கம், மலர் வணக்கம் செலுத்தியும் நினைவு கூர்ந்தனர்.

1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி நண்பகல் 12.30 மணியளவில் மாணவர்கள் தமது விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் இலங்கை விமானப்படையின் புக் காரா விமானத்தால் கண்மூடித்தன மாக நடாத்தப்பட்ட குண்டு வீச்சில் 21 மாணவர்கள் உட்பட 39 பேர் பலியாகினர். 200 இற்கும் மேற் பட்ட மாணவர்கள் படு காயங்களுக்குள் ளானர்.



விமானத்தின் சத்தத்தைக் கேட்ட மாணவர்கள் பயத்தினால் ஒரு மரத்தின்கீழ் நின்றவேளை மரத்தின் மீது விழுந்த குண்டினால் அந்த இடத்திலேயே 21 மாணவர்கள் உடல் சிதறிப் பலியானார்கள். இவர்கள் அனைவரும் 6-16 வயதுக்குட்பட்ட மாணவர்களாவர்.



கொலையாளியே தான் செய்த கொலையை விசாரிப்பதுதான் நீதியா? கோட்டாவின் கருத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்

செப்ரெம்பர் 21, 2021

“உள்ளக விசாரணை என்ற பெயரில் கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பதுதான் இந்த உலகின் நீதியா? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, ஐ.நா. பொதுச்செயலாளருக்குக் கூறிய உள்ளக விசாரணை ஒரு நீதியான விசாரணை அல்ல.”

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 5 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளைகள், வெளிநாட்டுச் செலாவணிச்சட்டத்தின் கீழான 03ஒழுங்குவிதிகள், வெளி நாட்டு செலாவணிச்சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்கிவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,

”ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஐ.நா.வில் உரையாற்றவுள்ளார். அவர் ஐ.நா.வின் செயலாளருடனும் பேசியுள்ளார். அப்போது இலங்கையில் காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதாகக் கூறியுள்ளார்.

இந்த நாட்டிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்றால் அவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள். 2008, 2009 ஆம் ஆண்டுகளில் வடக்கில் சகல இடங்களிலிருந்தும் மக்கள் விரட்டப்பட்டு முள்ளிவாய்க்கால் வரைக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

4 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள். இவர்களில் பலர் தங்களுடன் வந்த பிள்ளைகளை, கணவன்மார்களை, தாய், தந்தையரை, சகோதர - சகோதரிகளைக் கண் கண்ட சாட்சியமாக ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் ஒப்படைத்தார்கள்.

ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் கண்கண்ட சாட்சியமாக ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்ற கேள்விக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதுதான் இந்த நாட்டின் ஜனாதிபதியின் பதிலா? அப்படியானால் இந்த நாட்டில் கைதுசெய்யப்பட்டவர்கள் எல்லாம் கொலை செய்யப்பட்டுவிட்டார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது? இன்றும் கூட கிட்டத்தட்ட 60 க்கும் மேற்பட்ட தாய், தந்தையர் தங்களுடைய பிள்ளைகள் வருவார்கள் என்ற ஏக்கத்தோடு இறந்திருக்கின்றார்கள்.

இதனைவிட ஆயிரக்கணக்கான தாய், தந்தையர் இன்றும் தமது பிள்ளைகளின் வரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில் ஐ.நாவுக்கு போய் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நான் காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழ் கொடுக்கின்றேன் என்று கூறுகின்றார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அண்ணா மஹிந்த ராஜபக்ச, அப்போது ஜனாதிபதியாக விருந்தபோது அப்போதிருந்த ஐ.நா. செயலர் பான் கீ மூனிடம் நாங்கள் நீதி வழங்குகின்றோம், பொறுப்புக் கூறுகின்றோம் என்று கூறினார். ஆனால், இதுவரை எதுவும் நடக்கவில்லை.

இந்த அரசு மிக மோசமான முறையில் மக்களை பிழையான வழியில் கொண்டு செல்ல முனைகின்றது. நாங்கள் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ளோம்.

2008 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் இருந்த மக்கள் இதே ஐ.நா. சர்வதேச நிறுவனங்களுக்கு முன்னால் சென்று எங்களை விட்டுப்போகாதீர்கள் என்று கையெடுத்து கும்பிட்டு அழுதார்கள். நீங்கள் போய்விட்டால் எங்களைப் படுகொலை செய்வார்கள்.

எங்களை இந்த இலங்கை அரசு கொல்லப் போகின்றது. தயவு செய்து போகாதீர்கள் என்று மன்றாடினார்கள் அப்போது பான் கீ மூன் இருந்தார். எமது மக்கள் போகாதீர்கள்



எங்களை காப்பாற்றுங்கள் என்று கண்ணீரோடு கேட்டார்கள்.

ஆனால், எங்களை நடுத்தெருவில் விட்டு சென்ற ஐ.நா. சபையின் ஒவ்வொரு சர்வதேச நிறுவனங்களும் பொறுப்புக்கூற வேண்டும். என்ன நடந்தது என்பதனை ஆராய வேண்டும். இதனை நான் இந்த சபையின் ஊடாக தற்போதுள்ள ஐ.நா.வின் செயலரிடம் வினயமாக முன்வைக்கின்றேன்.

இன்று எமது மக்கள் சர்வதேச ரீதியான நீதியான விசாரணை வேண்டுமென கேட்கிறார்கள். ஒரு வெளிப்படையான நீதி விசாரணையை கேட்கிறார்கள். ஏனெனில் சர்வதேச நிறுவனங்களை இந்த அரசே வலுக்கட்டாயமாக வெளியேற்றியது.

நீங்களும் எங்களை நடுத் தெருவில் விட்டுச் சென்றீர்கள். நாங்கள் அநாதைகளாக கொல்லப்பட்டோம். பாதுகாப்பு வலயத்துக்குள் செல்லுங்கள் என அரசு கூறியதை நம்பி அங்கு சென்ற மக்களை குண்டுகள், கொத்துக்குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகளை வீசி படுகொலை செய்தீர்கள்.

எமது மக்கள் இன அழிப்பு செய்யப்பட்டார்கள். உலகப் பந்தில் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய வகையில் பாரிய இனப்படு கொலை இலங்கையின் வடக்கின் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது. இதனை உலகம் ஏற்றுக்கொள்கின்றது.

இவ்வாறான ஒருசூழலில்தான் இன்று ஐ.நா.சபை கூட மாறி விடுமோ என்ற அச்சம் எங்களுக்குண்டு நாங்கள் ஒவ்வொரு தலைவர்களும் வருகின்றபோது தருகின்ற ஒவ்வொரு உறுதி மொழிகளையும் நம்புகின்றோம். ஏதாவது நடக்கும் என்று நினைக்கின்றோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இந்த நாடு ஜனநாயகத்தை மதிக்கும்நாடு என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இந்த நாடு நீதியான நாடு என்கிறீர்கள். அப்படியானால் இந்த நாட்டில் என்ன நடந்திருக்கின்றது? இழந்த உயிர்களுக்கு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுதானா உங்கள் நீதி? ஆப்கானிஸ்தானில் அந்த மக்கள் கதறி அழுகின்றபோது விமானம் விட்டு ஏற்றுகின்றார்கள்.

சர்வதேச ஊடகங்கள் அதனை வெளியே கொண்டு வருகின்றன. ஆனால், நாங்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டபோது சர்வதேசம் மௌனம் காத்தது. எங்களுக்கு யாரும் விமானம் அனுப்பவில்லை. யாரும் கப்பல் அனுப்பவில்லை.

நாங்கள் இலங்கை இராணுவத்தாலும் இலங்கை படைகளாலும் படுகொலை செய்யப்பட்டோம். அப்போது இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவே அப்போதைய பாதுகாப்பு செயலராக இருந்தார். அவர்தான் இவ்வளவு விடயங்களுக்கும் தலைமைவகித்தார்.

ஆகவே, இன்றுள்ள சர்வதேச சமூகம் இதனை ஒரு நேரான வழியிலே சிந்திக்க வேண்டும். எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அது எங்கள் மக்களுக்கானதாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். உள்ளக விசாரணை செய்கின்றோம் என்கிறீர்கள்.

இதற்கு தமிழர்கள் தயாராக வேண்டும் என்கிறீர்கள். சுட்டவர்கள் நீங்கள். பொஸ்பரஸ் குண்டுகளை வீசி கொலை செய்தவர்கள் நீங்கள். கொத்தணிக்குண்டுகளை வீசிக்கொன்றவர்கள் நீங்கள்.

4 இலட்சம் மக்கள் இருக்கும்போது 70 ஆயிரம் பேரே இருப்பதாகக் கூறி உணவு அனுப்பியவர்கள் நீங்கள். பட்டினியால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். குழந்தைகள் கஞ்சிக்காக வரிசையில் நிற்கின்றபோது கொன்றது நீங்கள். அனைத்துக் கொலைகளையும் செய்தது நீங்கள்.

நீங்களே இந்தக் கொலைகளை விசாரிப்பது என்றால் அது என்ன நியாயம்? கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பது தான் இந்த உலகின் நீதியா? இந்த நீதியை நம் கேட்கவில்லை.

நாங்கள் கேட்பது ஒரு சுயாதீனமான, நியாயமான பாதிக்கப்பட்ட மக்கள் நம்பக்கூடிய இங்கு நடந்த படுகொலைகளை நிரூபிக்கக்கூடிய நேர்த்தியானதொரு விசாரணையே. அந்த விசாரணை ஒரு சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும்.

யார் இந்தப் போரில் அழிக்கப்பட்டார்களோ அந்த மக்களுக்கு ஒரு நீதி கிடைக்கவேண்டும். அதனால் நீங்கள் விசாரிப்பது அல்ல விசாரணை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, ஐ.நா. பொதுச்செயலாளருக்குக் கூறிய உள்ளக விசாரணை ஒரு நீதியான விசாரணை அல்ல” - என்றார்.

வீட்டு கதவை பூட்டி வைத்துவிட்டு விருந்துக்கு அழைக்கும் ஜனாதிபதி

ரெலோவின் ஊடகப்பேச்சாளர் திரு. குருசுவாமி சுரேந்திரன்

செப்ரெம்பர் 21, 2021



புலம்பெயர் அமைப்பு களுக்கு தடைவிதித்து விட்டு முதலீடு செய்ய வரும்படி அழைப்பது வேடிக்கையாக இருக் கின்றது என ரெலோ வின் ஊடகப்பேச்சாளர் திரு. குருசுவாமி சுரேந்திரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்க நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில வேடிக்கையான கருத்துக்களை நகைச் சுவையாக கூறியிருக்கின்றார்.

புலம்பெயர் தமிழ் சமூகம் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என்று தான் வரவேற்பதாக கூறியிருப்பது வீட்டு கதவை இறுக்கி பூட்டி வைத்துவிட்டு விருந்தாளிகளை உணவருந்த உள்ளிருந்து அழைப்பது போன்ற ஒரு செயல்பாடு தான் இது.

புலம்பெயர் அமைப்புகள் பலவற்றை தடை செய்ததோடு வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய உறவுகள் அச்சம் அடைய கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டு இங்கு வந்து முதலீடு செய்யலாம் என்று ஜ.நா செயலாளர் நாயகத் திடம் தெரிவித்திருப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

முதலாவதாக முதலீட்டாளர்கள் ஒரு நாட்டை நோக்கி வருவதற்கான அரசியல் மற்றும் நிர்வாகச் சூழல் மிக அவசியம் என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொள்ள தவறி இருக்கின்றார். முதலீட்டாளர்கள் வழமையாக இவற் றையே முதலில் பிரதானமாக கருத்தில் எடுத்து முதலீடு களை தீர்மானிப்பார்கள்.

அரச நிர்வாகத்தில் இராணுவமயமாக்கல் தொடர்கின்றது. அரசியல் பிரச்சினைகள் , மனித உரிமை விடயங்கள் அரசால் தீர்வு காணப்படாமல் தொடர்கின்றது. உள்ளகப் பொறிமுறை ஊடாக நியாயமான தீர்வுகள் எந்த இனத்தவருக்கும் கிட்டாது என முழு நாடுமே உணர்ந் துள்ளது.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தால் போல அரசியல் கைதிகள் சிறைச்சாலைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டுள்ளனர். அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க, நீதி வழங்க உள்ளக பொறிமுறை தவறியுள்ளது மாத்திரமல்ல அவற்றிற்கு அரசு துணை போவதை எடுத்து காட்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி ஜ.நா செயலாளர் நாயகத்திடம் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் வேடிக்கை யானது.

அரசு இனியும் அரசியல் தீர்வு, மனித உரிமை, நீதிப்பொறிமுறை, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றை நிலைநாட்ட சர்வதேச சமூகத்தோடு ஒத்தி சைந்து இதயசுத்தியோடு செயற்பட தவறினால் ஒட்டு மொத்த நாட்டு மக்களையும் அதல பாதாளத்துக்குள் தள் ளுவதாகவே முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களை நோக்கிய கோத்தாவின் அழைப்புக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பதில்

செப்ரெம்பர் 21, 2021



புலம்பெயர் தமிழர்களை நோக்கி சிறீலங்கா அதிபர் கோத்தா விடுத்திருந்த அழைப்பு தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கருத்தினை தெரிவித்துள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளதாவது.

யூத இனப்படுகொலையினைப் புரிந்த ஹிட்லர் ஆட்சியில் இருக்க முடிந்திருந்தால், புலம்பெயர் யூதர்களுடன் பேச ஹிட்லர் அழைப்பது போன்றே, புலம்பெயர் தமிழர் களுடன் பேசுவதற்கான சிறீலங்கா அதிபர் கோத்தாவின் அழைப்பு உள்ளது.

இனப்படுகொலையினை புரிந்த அரசுடன் முக்கிய விடய மான தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக உரையாடல் நடத்துவது கடினமான ஒன்றாகும்.

எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் பொறுப்புக்கூறல் என்பது முக்கியமானதொரு முன்னவசிமாகும். இலங்கைத்தீவில் அமைதியை கொண்டுவருவதில் கோத்தாவுக்கு உண் மையான ஆர்வம் இருந்தால், முதற்படியாக, ஜ.நா மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையர் அல் ஹுசைன் அவர்கள், 2015ல் பரிந்துரைத்திருந்த 'ரோம் உடன்படிக்கையில்' கைச்சாத்திட்டுக் கொள்ள வேண்டும். மேலும் கைச்சித்திட்டு பின்னோக்கி காலத்தையும் உள் வாங்கியதாக வேண்டும். இறுதிப்போரில் நடந்த இனப் படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற் றும் போர்க்குற்றங்களை புரிந்த குற்றவாளிகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் விசாரித்து பாதிக கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, சிறிலங்காவின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போர் கைதிகள், அரசியற் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். 'பொது மன்னிப்பு' என்ற 'விசர்' கதைகளை குப்பையில் போடுங்கள். யாரை யார் மன்னிப்பது ?

தமிழர் பகுதிகளில் தொல்பொருள் ஆய்வுகள், அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வனப்பாதுகாப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவமயமாக்கல் நீக்கம் (விலக்கி) செய்யப்பட வேண்டும். மேலும், காணாமல்போனோவர்களுக்கான அலுவலகத்தை ஒரு நடுநிலையான, நம்பகமான நிறுவனமாக மாற்றியமைக்கும் வகையில், ஜ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அவர்கள் நியமிக்கும் நிபுணர்களை உறுப்பினர்களாக நியமிக்கவும், பாதிக்கப் பட்டவர் உறவுகள் பங்கெடுக்கின்ற வகையிலான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். தமிழர் தாயகத் தில் மேற்கொள்ளப்படுகின்ற அந்நிய முதலீடுகளை தீர்மானிக்கின்ற அதிகாரம் தமிழர்களுக்கு வழங்க வேண்டும்.

இறுதியாக, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் திரு. டேவிட் கேமரூன் அவர்கள், ஸ்கொட்லாந்து விவகாரத்தில் பொது வாக்கெடுப்புக்கான உறுதியான கால அட்ட வணையை அமைத்து போல், தமிழர்கள் தங்கள் அரசியல் தலைவிதியை தாமே முடிவு செய்கின்ற வகையில் பொதுவாக்கெடுப்புக்கான நடவடிக்கையினை தமிழர் அரசியல் தலைமைகளுடன் சேர்ந்து முன் னெடுக்க வேண்டும். இப்பொதுவாக்கெடுப்பில் சுதந் திரமும் இறையாண்மையும் கொண்ட தமிழீழம் உள் ளடங்க பல்வேறு அரசியல் தீர்வுகள் உள்ளடங்கலாக இருக்க வேண்டும்.

தேவையான இந்த செயல் வழிப்பாதையை சிறீலங்கா அதிபர் நிறைவேற்றிய பிறகு, பேச்சுக்களை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதுவே இலங்கை தீவின் நிரந்தரமான அமைதிக்கும், பாதுகாப்புக்கும் மற்றும் செழிப்புக்குமான வழித்தடமாக அமையும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கருத்துரைத்துள்ளது.

யாழ். நல்லூரில் ஈகைச்சுடர் நினைவுத்தூபிப் பகுதியில் நினைவேந்தல்!

செப்ரெம்பர் 15, 2021



யாழ். நல்லூரில் அமைந்துள்ள ஈகைச் சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபிப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினரால் ஈகைச்சுடருக்கு இன் று மாலை வணக்கம் செலுத்தப் பட்டது.

தாயகத்தில் ஊர டங்கு அமுலில் உள் ள அ தே வே ளை , சிறீ லங் கா அரசு நினைவேந்தல்களுக் குத் தடை ஏற்படுத் திய நிலையிலும் தடைகளை உடைத்து நினைவேந்தல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் ஈகைச்சுடர் திலீபன் அவர்களின் நினைவேந்தல்!

செப்ரெம்பர் 15, 2021



இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத் து பன் னி ரண்டு நாட்கள் நீராகாரம் அருந்தாமல் அகிம்சை வழியில் உண் ணா நிலைப் போராட்டத்தை தொடர்ந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஈகை யர் திலீபன் அவர்களின் 34 ஆவது ஆண் டு நினைவு நாளின் தொடக் க நாளான இன்று கிளி நொச்சியில் பிரத்தியேக மாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களால் சுடர்ஏற்றி மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

யாழ்.நாவற்குழியில் சிறீலங்கா இராணுவத்தினால் காணாமல் ஆக்கப்பட்ட 32 பேர் நினைவாக நடுகல்!

செம்ரெம்பர் 07, 2021



1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - நாவற்குழி மறவன் புலோ பகுதியில் சிறீலங்கா சிங்கள இராணுவ சுற்றி வளைப்பின் போது காணாமல் ஆக்கப்பட்ட 32 பேர் நினைவாக நடுகல் நாட்டியமை தொடர்பில் ஈழம் சிவசேனை தலைவர் மறவன்புலோ சச்சிதானந்தன் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக தனது வதிவிடத்திலுள்ள சாவகச்சேரி காவல் நிலைய பொறுப்பதிகாரி நடுகல்லில் ஈழத்தமிழர் என குறிப்பிடப்பட்டமை தொடர்பில் வாக்குமூலமொன்றை வழங்குமாறு கோரியதாக திரு. சச்சிதானந்தன் தெரி வித்தார்.

எனினும் தற்போதைய கொரோனா பெருந்தொற்று முடிந்த பின்னர் வருகை தருமிடத்து வாக்குமூலமளிக்க தயாராக இருப்பதாக திருப்பியனுப்பியுள்ளார்.
பின்னராக யாழ்.மாவட்ட சிரேஸ்ட காவல்துறை அத்தியட் சகர் உள்ளிட்ட பலர் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்ததாக தெரியவருகின்றது.

இதேவேளை, நாவற்குழி படைமுகாமிற்கு பொறுப்பாக இருந்த துமிந்த கெப்பிற்றிபொல தலைமையில் 1996ம் ஆண்டு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட துமிந்த கெப்பிற்றிகொல தற்போது சிறீலங்கா இராணுவ தலைமையகத்தில் இராணுவ கட் டகளை பிரதானியாக பணியாற்றிவருவது குறிப்பிடத் தக்கது.











திரு. கஜேந்திரனின் கைது அரசின் கோரமுகத்தை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது – யாழ். நா.ம.உ. திரு.சி. சிறீதரன்

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைதுசெய்யப் பட்டுள்ளமை அரசின் கோரமுகத்தை இன்னுமொரு முறை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழின விடுதலைக்காக, காந்திய வழியில் தன் உயிரை ஆகுதியாக்கிய ஈகைச்சுடர் திலீபன் அவர்களின் நினைவிடத்தில் வணக்கம் செய்தமைக்காக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ. செல்வராசா கஜேந்திரன் அவர்கள் இன்றையதினம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

சர்வதேச நியமங்களுக்கும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கும் அமைவாக, விதித்துரைக்கப்பட்ட சிறப் புரிமைகளுக்கு உரித்துடைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், தன் இனத்திற்காக உயிர்ஈகம் செய்த ஈகைச்செம்மல் திலீபனின் நினைவிடத்தில் வணக்கம் செய்தமைக்காக, ஆயுதமுனையில் அதியுச்ச வன்முறைப் பிரயோகங்களோடு கைது செய்யப்பட்டுள்ளமை இந்த அரசின் கோர முகத்தை இன்னுமொருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது, அவரது சிறப்புரிமைகளை மீறும் வகையில், இந்த ஜனநாயக நாட்டில் இத்தனை மோசமான அரசவன் முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளமையானது, இங்குள்ள சாதாரண தமிழர்களின் இயல்புவாழ்வுக்கு எந்த உத்தர வாதமும் இல்லை என்பதை தெட்டத்தெளிவாக எண்பித்



துள்ளது.

ஈகைச்சுடர் திலீபன் அவர்களின் நினைவிடத்தில் அமைதியான முறையில் வணக்கம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்களை, ஒரு குற்றவாளியைப்போல் வலுக்கட்டாயமாக பொலிசார் கைது செய்தமைக்கு எனது வலுவான கண்டனங்களைப் பதிவுசெய்வதோடு, அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்.

நீதியை வழங்காமல் மரணசான்றிதழ் வழங்குவதை ஜ.நா. ஆதரித்தால் அது வரலாற்றுத் தவறு!

மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரகுமார்



செப்ரெம்பர் 23, 2021

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களிற்கு நீதியை வழங் காமல் மரணசான்றிதழ் வழங்குவதை ஜநா ஆதரித்தால் அது வரலாற்று தவறு- என தமிழ்தேசிய மக்கள் முன்ன ணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

“காணமற்போனவர்கள் இறந்துவிட்டதாக மரணச் சான் றிதழ்கள் வழங்கப்படும் எனவும், இந் நடவடிக்கை துரிதப் படுத்தப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.


அது எந்த நடவடிக்கை? நியுயோரக்குக்குச் செல்வதற்கு முன்னர், பழையவற்றை மறந்து விடுங்கள். உங்களு டைய அன்புக்குரிவர்களை தேடுவதில் காலத்தை வீணடிக்காதீர்கள் என்று காணமற்போனவர்களின் உறவினர்களுக்கும், அவர்களைப் பிரதிநிதித்துப் படுத்துகிற அமைப்புகளுக்கும் தெனாவட்டுடன் கூறியிருக் கிறார். அவ்வாறாயின் இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்? காணாமற் போனவர்கள் என்ன காரணங்களுக்காக பாதுக்காப்புப்படையினரால் கொல்லப் பட்டார்கள்? என்பதனை விசாரிக்கமால், வெறுமனே மரணச் சான்றிதழ்களை விநியோகிக்கப் போகிறார்.

இவ்வாறு பாதுகாப்புப் படைகளுக்கு தண்டனை விலக்கு வழங்கும் நடவடிக்கைக்கு ஐக்கியநாடுகள் சபை ஒப்புதல் வழங்க வேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். இந்நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபை ஆதரவு வழங்குமேயானால், அதனை எந்தவித தயக்கமுமின்றி பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நாம் எதிர்புத் தெரிவிப்போம். ஏனெனில் இது ஜநா சபையின் எல்லாவிதமான கொள்கை களுக்கும் முரணானது. அவ்வாறு ஜ.நா.சபை நடந்து கொள்ளுமேயானால் இது வரலாற்றில் தவறானதாகவே பதியப்படவேண்டியது.”

தீலிபனை நினைவுகூறுவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடை

செப்ரெம்பர் 24,2021

தியாகம்தீபம் தீலிபனை நினைவுகூறுவதற்கான முல்லைத்தீவு நீதிமன்றத்தின் தடை உத்தரவை மாங்குளம் பொலிஸார் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் இன்று காலை கையளித்துள்ளனர்.



நீதிவான் நீதிமன்றம் - முல்லைத்தீவு.

கௌரவ நீதிவான் திரு. T.சரவணராஜா அவர்கள் முன்னிலையில்

பதிவு : திருமதி வாணி சுதன்

வழக்கு இல : AR/725/21 24.09.2021

தடைக்கட்டளை

பிரதிவாதிகள் :-

01. கஜேந்திரகுமார் காங்கேசன் பொன்னம்பலம்.
02. செல்வராசா கஜேந்திரன் .
03. திலகநாதன் சிந்துயன்.
04. ரகுநாதன் துஷ்யந்தன்.
05. புன்சிதபாதம் ரவீந்திரன் அல்லது ரவி மாஸ்டர்.
06. ராசமணி சிவராசா அல்லது ரவி.
07. மகாதேவன் ரூப்பாணந்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நீங்கள் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குள் L.T.T.E அமைப்பில் இருந்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தொடர்பில் நினைவு கூறல் நிகழ்வுகளை நடாத்த உள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் அறிக்கை செய்துள்ளனர்.

எனவே மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நீங்களும் உங்கள் ஆதரவாளர்களும் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குள் 24.09.2021 தொடக்கம் 28.09.2021 வரையான காலப்பகுதிக்குள் மேற்படி இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் தொடர்பிலான எந்தவொரு நினைவு கூறலையும் மேற்கொள்ளக்கூடாதென்ற தடைக்கட்டளையை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 106 இற்கு அமைவாக பிறப்பிக்கின்றேன்.

நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

1

காவல்துறையினர் மிலேச்சத்தனமாக காட்டுமிராண்டித்தனமாக எங்கள் மக்களின உணர்வுகளை மதிக்காமல் மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக சுடரை காலால் தட்டி அணைத்தார்கள்- நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

செப்ரெம்பர் 23, 2021

காவல்துறையினர் மிலேச்சதனமாக காட்டுமிராண்டித்தனமாக எங்கள் மக்களின உணர்வுகளை மதிக்காமல் மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக சுடரை காலால் தட்டி அணைத்தார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தியாகதீபம் திலீபனை நினைவுகூர்ந்து சுடரேற்றுவதற்கு நான் சென்றவேளை அந்த இடத்திலிருந்த பொலிஸார் தடுத்தார்கள், நான் அவர்களிடம் கேட்டேன் நீதிமன்ற தடை உத்தரவு இருக்கின்றதா என ? அவர்கள் நீதிமன்ற உத்தரவு இருக்கின்றது என தெரிவித் தார்கள்.

ஆனால் அவர்கள் அதனை காண்பிக்கவில்லை நான் மீண்டும் மீண்டும் நீதிமன்ற தடை உத்தரவு இருந்தால் காண்பியுங்கள் எனமீண்டும் மீண்டும் கேட்டேன். நீதிமன்ற உத்தரவு இருந்தால் நாங்கள் அதனை மதிக்க தயார் அவ்வாறான உத்தரவு இல்லாவிட்டால் நீங்கள் எங்கள் உரிமையை மீறுகின்ற செயல்பாட்டினை முன்னெடுக்கின்றீர்கள் என நான் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் தனிமைப்படுத்தல் உத்தரவு எதனையும் என்னிடம் காண்பிக்கவோ தரவோயில்லை. அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்காத நிலையில் நான் தூபி இருந்த இடத்திற்குஅருகில் சுடரேற்றினேன்.

அப்போது அங்கு இருந்த காவல்துறையினர் மிலேச்சதனமாக காட்டுமிராண்டித்தனமாக எங்கள் மக்களின உணர்வுகளை மதிக்காமல் மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக சுடரை காலால் தட்டி அணைத்தார்கள் அதனை நான் வன்மையாக கண்டிக்கின் றேன். நினைவுகூறுவதற்கான உரிமை எங்கள் அனைவருக்கும் உள்ளது அதுவும் எங்களுடைய உரிமைக்காக 12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல் உயிர்நீத்த எங்கள் அண்ணனை நினைவுகூறுவதை தடுப்பதற்கு இவர்களிற்கு எந்த உரிமையும் கிடையாது. ஆனால் துரதிஸ்டவசமாக சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் இங்குள்ள காவல்துறையினர் தமிழர்களை அடக்கி ஒடுக்கிய சிங்களபௌத்த மேலாண் மையை நிலைநிறுத்துவதற்காக தான் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்களே தவிர எந்த ஒரு இடத்திலும் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிப்பதற்கு அவர்கள் தயாராகயில்லை.

இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ஜநா வரை சென்று நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போகின் றோம் புலம்பெயர் தமிழர்களுடன் பேசப்போகின்றோம், தீர்க்கப்போகின்றோம் என தெரிவிக் கின்றார். ஆனால் எங்களுடைய உறவினர்களை எங்களுடைய உரிமைக்காக போராடியவர் களை நினைவுகூருவதற்கான உரிமையை அவர்கள் மதிக்க தயாராகயில்லை.உலகத்திலேயே மிகவும் கேடுகெட்ட படை என்றால் அது இந்த சிறீலங்கா படையாகத்தான் இருக்க முடியும் அந்த படையின் தளபதியாகயிருந்த ஒருவரின் தலைமையிலே நினைவுச்சுடரை காலால் தட்டி வீழ்த்துவது என்பது ஆச்சரியமளிக்கும் விடயமில்லை இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம், என தெரிவித்துள்ளார்.

யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்ணாண்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்கமாட்டோம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

செப்ரெம்பர் 24, 2021



தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் இந்த அரசாங்கம் கொடுக்கும் எந்த ஒரு வாக்குறுதியையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் நாம் மீண்டும் ஒருமுறை ஆணித்தரமாக கூறுகின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முயன்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இன்று அவரது கட்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திலீபனின் நினைவுத் தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தனியாகத்தான் சென்றார். மக்களை அணிதிரட்டவில்லை. வருடா வருடம் குடும்பத்தோடு அமைதியாக அஞ்சலி செலுத்துவார். அது போல இம்முறையும் கடந்த நாட்களாக அஞ்சலி செலுத்தி வந்தார்.

ஆனால் நேற்றைய தினம் அஞ்சலி செலுத்த முயன்ற போது அங்கிருந்த பொலிஸார் தடுத்தனர். எதற்காக தடுக்கிறீர்கள்? நீதிமன்ற தடை உத்தரவு உள்ளதா? என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், பொலிஸாரிடம் வினாவினார். எனினும் பொலிஸார் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவு கூற முடியாது என கூறியே அவ்விடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனை கைது செய்தனர்.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டு விடுவிக்கும் நேரத்தில் “நினைவுகூறுவது தவறு என நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலே கைது செய்தோம்” என பொலிஸார் கூறினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவ்விடத்தில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றியே நினைவேந்தல் செய்ய முற்பட்டார். பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந் தார். ஆனால் பொலிஸாரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறி செயற்பட்டனர். அராஜகமாக கஜேந்திரனின் உடலை பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அவர் கைது செய்யப்பட்டதை அறிந்து அவ்விடத்திற்குச் சென்ற எமது கட்சியின் இரு பெண் உறுப்பினர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாக கையாளப்பட்டனர்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் எம்.பி கைது செய்யப்பட்டிருந்தால் அவர் அவ் நினைவிடத் திற்குச் சென்ற பொழுதே கைது செய்யப்பட்டிருக்க வேண் டும். ஏன் கற்பூரம் ஏற்றி நினைவேந்தல் செய்ய முற்பட்ட போது கைது செய்யப்பட்டார்.

கஜேந்திரன் எம்.பியை கைது செய்தமைக்கு கொரோனா விதிமுறைகள் காரணமல்ல நினைவேந்தல் செய்தமை யே காரணம் என தெரிகிறது. ஏனெனில் நினைவேந்தல் மேற்கொண்ட இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரம் இருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் இருந் தார்கள், திலீபனின் நினைவிடத்தில் பொலிஸார் வந்ததை அறிந்ததும் பல பொதுமக்களும் கூடினார்கள்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது நடவடிக்கை எடுத்திருந்தார் கள் எனில் ஏன் அங்கு கூடிய மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் சுகாதார விதிமுறைகளை மீறவில்லை. அவர் நினைவேந்தல் மேற்கொண்டமைக்காவே கைதுசெய்யப்பட்டார்.

யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெனான்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்பு டைய ஏனைய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்கமாட்டோம். 27 ஆம் திகதி பொலிஸாரின் நடவடிக்கைகளை பொறுத்து எமது நடவடிக்கைகள் தொடரும். இது தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சபாநாயகருக்கும் தெரியாமல் ஒரு நாடாளுமன்ற உறுப் பினர் கைது செய்யப்பட்டிருக்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் சிறப்புரிமை தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம்.

ஜ.நா. அமர்வுகள் நடைபெறுகின்ற நிலையில் கூட பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். கஜேந் திரனை கண்ணியமாக அழைத்துச் சென்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாது கற்பூரம் கொளுத்தும் போதே பொலிஸார் நினைவேந்தலை தடுக்கும் முகமாக செயற்பட்டனர்.

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் இந்த அரசாங்கம் கொடுக்கும் எந்த ஒரு வாக்குறுதியையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் நாம் மீண்டும் ஒருமுறை ஆணித்தரமாக கூறுகின்றோம்” என்றார்.

திலீபனின் நினைவேந்தலுக்கு யாழ். நீதிமன்றம் தடை

செப்ரெம்பர் 23.09.2021

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வினை நடத்துவதற்கு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றினால் இன்று (வியாழக்கிழமை) தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவிடத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடையுத்தரவு விதிக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்று பரவல் காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்திற்கு அமைய இந்த நிகழ்வுக்கு தடை விதிக்குமாறு பொலிஸார் நீதிமன்றிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடை கட்டளை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கைது சிங்களப் பேரினவாத அரசாங்கம் எவ்வாறு அடக்குமுறையைப் பிரயோகிக்கின்றது என்பதற்கு உதாரணம்

– செல்வம் அடைக்கலநாதன் –

செம்ரெம்பர் 23,2021

ஐ. நா. அமர்வுகள் நடக்கும் காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் அமைதியான முறையில் நினைவஞ்சலியை மேற்கொண்டிருந்த வேளையில் பொலிஸாரின் அத்துமீறலும் கைது நடவடிக்கையும் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாத அரசானது எவ்வாறு அடக்குமுறையினை பிரயோகிக்கிறது என்பதற்கு உதாரணமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமைக்கு கடுமையான கண்டனங்கள். அகிம்சை வழியில் போராடி உயிர் நீத்த தியாக தீபம் திலீபனுக்கு அகிம்சை வழியில் அஞ்சலி செலுத்துகையில் பொலிஸார் வன்முறையைப் பிரயோகித்து நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்துள்ளனர். இது நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறும் ஒரு செயலாகும்.

எமது உறவுகளை நினைவுகூருவதை அடக்குமுறையின் மூலம் தடுக்க முற்படுகின்றார்கள். ஐ. நா அமர்வுகள் நடக்கும் காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் அமைதியான முறையில் நினைவஞ்சலியை மேற்கொண்டிருந்த வேளையில் பொலிஸாரின் அத்துமீறலும் கைது நடவடிக்கையும் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாத அரசானது எவ்வாறு அடக்குமுறையைப் பிரயோகிக்கிறது என்பதற்கு உதாரணமாகும். மிகக் கடுமையான கண்டனங்கள்.

சிறீலங்கா அரசும், கொரோனா நோய்க்கிருமியும் ஒன்றே இரண்டுமே தமிழர் தலையெடுப்பதை விரும்பவில்லை

யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி.யுமான நிதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

செப்ரெம்பர் 27, 2021




சிறீலங்கா அரசும், கொரோனா நோய்க்கிருமியும் ஒன்றே. இரண்டுமே எம்மைத் தலையெடுக்கவிட விருப்பமில்லை. எம்மை எப்படியாவது அடக்க வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும், தடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இரண்டும் இயங்கி வருகின்றன எனத் தெரிவித்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி.யுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு -கிழக்கில் காலம் காலமாக அரசுகள் மேற்கொண்டு வரும் நில அபகரிப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டும் 'தாய்நிலம்: நில அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந் தொற்று" என்ற ஆவணப் படம் சனிக்கிழமை மாலை இணையவழியில் திரையிடப்பட்டது. அதன் பின்னர் அந்தப் படம் தொடர்பான ஆய்வு ரீதியான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பிரித்தானியா, தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் இருந்து இளையோர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்த நிகழ்வை தமிழ் மக்கள் தேசிய கூட்டணித் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான சி.வி. விக்னேஸ்வரனும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட எம்.பி.யுமான இரா.சம்பந்தனும் கூட்டாக ஆரம்பித்து வைத்தனர். இதில் விக்னேஸ்வரன் எம்.பி. தலைமையுரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்ததுடன் மேலும் கூறுகையில், இலங்கை அரசு போல் கொரோனா வைரஸ்ஸும் எம்மைத் தலையெடுக்கவிட விருப்பமில்லை. எம்மை எப்படியாவது அடக்க வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும், தடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அதுவும் இயங்கி வருகின்றது. எனினும் கட்டுப்படுத்தல்களையும் தனிமைப்படுத்தல்களையும் மீறி நாங்கள் இன்று புகழ் மிக்க அறிஞர்களை இந்த மெய் நிகர் தொடர் கருத்தரங்கத்துக்கு வரவழைத்துப் பங்குபற்ற வைத்திருக்கின்றோமெனில் அதற்கு எமது விடாமுயற்சியுடைய சோர்வற்ற இளைஞர் குழாமே பொறுப்புடையவர்கள். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இன்றைய நாள் மிகவும் முக்கியமான ஒரு நாள். இந்த நாட்டின் பூர்வீகக் குடிமக்களில் ஒன்றான தமிழ் மக்களின் வடக்கு - கிழக்கு தாயகத்தை கடந்த 70 வருடங்களாக அபகரித்து வரும் தொடர் இலங்கை அரசுகளின் செயற்பாடுகளை ஆவணப் படமாக ஆதாரபூர்வமாக ஆய்வுபூர்வமாக வெளியிடும் நாள் இது.

இவ்வாவணப் படம் நில அபகரிப்பு நடக்கும் இடங்களில் வைத்தே எடுத்த படம். இதனை நாம் என்றோ செய்திருந்திருக்க வேண்டும். இது போன்ற ஆவணப் படங்கள் பலவற்றை நாம் வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், காலம் கடந்தேனும் அவசியமும் முக்கியமுமான இந்தச் செயற்பாடு இன்று அரங்கேற்றம் பெறுவது எனக்கு மிக்க மகிழ்ச்சிய அளிக்கின்றது.



அதேபோல், நில அபகரிப்பு எவ்வாறு ஒரு பெரு நோற்றாக வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களைப் பீடித்து அவர்களின் இருப்பு, அடையாளம், வாழ்வு ஆகியவற்றை இல்லாமல் செய்கின்றது என்பது பற்றி விவாதிப்பதற்கு உலகின் பிரபல்யம் மிக்க கல்விமான்களும் செயற்பாடாளர்களும் இங்கு வந்திருப்பது மிகவும் முக்கியத்துவம் மிக்கது. இத்தகைய சிறப்பும் முக்கியத்துவமும் மிக்க இன்றைய நிகழ்வை என்னுடன் கூட்டாக ஆரம்பித்து வைத்து உரையாற்ற வந்திருக்கும் முதுபெரும் அரசியல் வாதியும் எனது பெருமதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பி.யும் என்னை 2013 ஆம் ஆண்டு அரசியலுக்குக் கொண்டு வந்தவருமாகிய சம்பந்தனுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வடக்கு - கிழக்கின் தலைநகரம் என்று அழைக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பந்தன், எவ்வாறு 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் நிலங்கள் அரசின் குடியேற்றத் திட்டங்களினாலும் வன்முறைகளினாலும் பறிக்கப்பட்டு இன்று அவர்களின் இருப்பு கேள்விக் குறியாகும் நிலையில் இருக்கின்றது என்பதற்கு ஆதாரமாக விளங்குகின்றார். 1956ஆம் ஆண்டு முதல் சாத்வீக வழியில் தமிழர் தாயகத்தின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடி வரும் சம்பந்தன், இன்றைய நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து இங்கு கலந்துகொண்டிருப்பது சிறப்பானது.

இன்றைய தினம் ஆவணப் படம் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட இருக்கும் இளையோர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும். நீங்கள் தான் எமது நம்பிக்கை நட்சத்திரங்கள். உங்களிடம் எமது மக்கள் நிறைய எதிர் பார்க்கின்றார்கள். உங்கள் செயற்பாடுகளை நிறுவனமயப்படுத்தி அறிவை ஆயுதமாகப் பயன்படுத்தி எமது விடிவுக்காக நீங்கள் நிறையவே சாதிக்க முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள் என்றார்.



செப்ரெம்பர் 22 ஆம் திகதி முதல் ஒன்ராறியோவில் தடுப்பூசிக்கான சான்றிதழ் தேவை

கொரோணா நோயின் திரிபுபட்ட வடிவமான அதிகூடிய வேகத்தில் பரவக்கூடிய டெல்டா நோய்த்தொற்றினை அதிகளவில் கொண்ட நான்காவது அலையிலிருந்து மாநில மக்களைப் பாதுகாப்பதற்கு மாநில அரசாங்கம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தகுதியுடைய ஒவ்வொருவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வது கோவிட்-19 நோய்த்தொற்றுப் பரம்பலைத் தடுக்க உதவும் என்பதால் அரசாங்கம் அனைவரையும் தவறாது தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு அறிவுறுத்துகிறது.

செப்டம்பர் 22ஆம் திகதி முதல் அனைவரும் குறிப்பிட்ட சில வணிகங்கள் மற்றும் நிலையங்களுக்குச் செல்லும் போது தாங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றினைக் காண்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

செப்டம்பர் 22ஆம் திகதிக்கு முன்னதாகவே அனைத்து ஒன்ராறியோ வாழ் மக்களும் தாங்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டதற்கான சான்றினை ontario.ca/bookvaccine எனும் இணைய முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேற்படி சான்றினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி தேவைப்படுபவர்களும், கணினி அல்லது அச்சிடும் வசதிகள் இல்லாதவர்களும் மாநில தடுப்பூசி தொடர்பு நிலையத்தினை 1-833-943-3900 என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து தமக்கான உதவியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட சில வணிகங்களுக்கு அல்லது நிலையங்களுக்குச் செல்லும் ஒன்ராறியோ வாழ் மக்கள் அனைவரும் தாங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றினை தங்கள் புகைப்பட அடையாள அட்டை ஒன்றுடன் இணைத்துக் காண்பிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டுக்கு, அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள்:

❍ பிறப்பு உறுதிச்சான்றிதழ் ❍ குடியுரிமை அட்டை

❍ வாகன ஓட்டுனர் அட்டை ❍ அரசாங்கத்தினால் (ஒன்ராறியோ அல்லது ஏனைய அரசினால்) வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், உடல்நலக் காப்புறுதி அட்டை (Health Card) உள்ளிட்டவை. ❍ பூர்விகக்குடி அத்தாட்சி அட்டை / பூர்வீகக்குடி உறுப்பினர் அட்டை கடவுச்சீட்டு ❍ நிரந்தர வதிவுரிமை அட்டை

செல்லும்போது பயனாளர்கள் முழுமையாக தடுப்பூசி போட்டிருக்க வேண்டிய இடங்கள்:

❍ உள்ளக மாநாட்டு / நிகழ்ச்சி மண்டபங்கள், கலையரங்குகள், திரையரங்குகள்

❍ உள்ளக உணவகங்கள், மது அருந்தும் கூடங்கள், ஏனைய உணவு / பான நிலையங்கள்

❍ உள்ளக / வெளியக நடன வசதிகளுடன்கூடிய உணவு / பானம் பரிமாறும் இடங்கள் (உதாரணம்: இரவுநேர கேளிக்கை விடுதிகள் / நடனமாடக்கூடிய வசதியுள்ள விடுதிகள்)

❍ உள்ளக குதிரைச்சவாரி நிலையங்கள், மகிழுந்து ஓட்டப்போட்டி நிலையங்கள் மற்றும் இவைபோன்ற நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள்.

❍ பார்வையாளர்கள் பங்குகொள்ளும் உள்ளக வர்த்தக திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு நிலையங்கள் உள்ளக தண்ணீர் விளையாட்டரங்கங்கள்

❍ பார்வையாளர்கள் விளையாட்டு நிகழ்ச்சியைப் பார்வையிடும் வசதியுள்ள உள்ளக இடங்கள் உள்ளக சூதாட்ட நிலையங்கள், கேளிக்கை விளையாட்டுடன் கூடிய இடங்கள்

❍ உள்ளக விளையாட்டு வசதிகளை ஃ உடற்பயிற்சி வசதிகளைக் கொண்ட இடங்கள், உள்ளக பொழுதுபோக்கு உடற்பயிற்சி நடவடிக்கைகள், பயிற்றுனருடன்கூடிய தனிநபர் உடற்பயிற்சிக்கூடங்கள் உள்ளடங்கலாக

❍ உள்ளக கருத்தரங்கு / மாநாட்டு நிலையங்கள் (உதாரணமாக: விழா மண்டபங்கள் / மாநாட்டு மண்டபங்கள்)

❍ உள்ளக பாலியல் தொடர்பான கேளிக்கை நிலையங்கள்

உங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்க நீங்கள் செய்யக்கூடிய முக்கியமான செயல் தடுப்பூசி போட்டுக் கொள்ளுதல் மட்டுமே. முதலாவது அல்லது இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசியை நீங்கள் இன்னும் போட்டுக் கொள்ளவில்லையென்றால், தயவுசெய்து இன்றே சென்று போட்டுக்கொள்ளுங்கள்.

விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்.
ஸ்காபரோ - றூஜ் பார்க்

கனேடிய பொதுத்தேர்தலில் தமிழ் வம்சாவளிப் பெண் வெற்றி

செப்ரெம்பர் 20, 2021



கனேடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி சார்பில் களமிறங்கிய தமிழ் வம்சாவளிப் பெண்ணான அனிதா ஆனந்த் (Anita Anand) வெற்றி பெற்றுள்ளார்.

இந்த நிலையிலேயே லிபரல் கட்சி சார்பில் Oakville தொகுதியில் போட்டியிட்ட அனிதா ஆனந்த் வெற்றி பெற்றுள்ளார்.

கனேடிய பொதுத்தேர்தலில் ட்ரூடோ தொடர்ந்தும் அகதிகாரத்தில்

செப்ரெம்பர் 20, 2021



கனடாவில் இடம்பெற்ற தேர்தலில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் கட்சி வெற்றிபெற்றுள்ள போதிலும் பெரும்பான்மையை பெறத் தவறியுள்ளது.

கனேடிய பொதுத்தேர்தலில் முன்றாம் தடவையும் ஹரி ஆனந்தசங்கரி வெற்றி

செப்ரெம்பர் 20, 2021



கனடாவில் இடம் பெற்ற பொதுத் தேர் தலில் ஹரி ஆனந் தசங்கரி ஆளும் லிபரல் கட்சியில் சார்பில் போட்டியிட்டு கடந்த தேர்தலைப் போன்றே அதிக பெரும்பான்மை வாக்குக்களோ வெற்றியீட்டியுள்ளார்.

உலக கட்டிடக்கலை வல்லுனர்களால் வடிவமைக்கப்படும் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம்



கனடாவின் பிராம்டன் நகரில் நினைவு தமிழ்ச் சமூகத்தின் ஒன்றிணைந்த முன்னெடுப்பினால் உருவாகிக் கொண்டிருக்கும் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்திற்கான அடுத்த கட்ட நடவடிக்கையாக, நினைவுச்சின்ன வடிவமைப்பினை சர்வதேச அளவில் எடுத்துச் செல்லும் திட்டம் வேகம் எடுத்துள்ளது. கனடிய தமிழ் மக்களின் முழுமையான பங்களிப்புடன் பிராம்டன் நகரசபை, பிராம்டன் தமிழ் ஒன்றியம் மற்றும் பிராம்டன் தமிழ் மூத்தோர் சங்கம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த முயற்சியாக சிறந்த முறையில் செயல் வடிவம் பெறும் இந்த நினைவுச் சின்னத்திற்கான கருத்தியலை பிரபலப்படுத்த உலகெங்கும் வாழும் கட்டிடக்கலை வடிவமைப்பாளர்களிடம் (Architects) போட்டி வைத்து நினைவுச்சின்ன வடிவமைப்பு தேர்ந்தெடுக்கப்படவுள்ளது. இதற்கு ஐரோப்பாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் Bee Breeders என்ற கட்டடக்கலை வடிவமைப்பாளர் அமைப்பு கைகொடுத்துள்ளது. Bee Breeders முன்னெடுப்பில் சர்வதேச அளவில் International Architecture Competition ஆக நடத்தப்படும் இப்போட்டியின் நடைமுறைகள் தற்போது வெளியாகியுள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் ஞாபகார்த்த நினைவுத்தூபி இரவோடிரவாக இடித்தழிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கனடாவில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் நகரங்களில் ஒன்றான பிராம்டன் நகரின் நகரசபையில் பீல் பிராந்திய மற்றும் பிரம்டன் நகரசபை வட்டாரம் 3 மற்றும் 4 இன் மக்கள் பிரதிநிதி Councillor Martin Medeiros அவர்களால் பிராம்டன் தமிழ் சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்கக் கொண்டு வரப்பட்ட, "தமிழ் மக்களுக்கான நினைவுத்தூபி" அமைக்கும் தீர்மானம் ஏகமனதாக 2021 ஜனவரி 20ஆம் நாள் நடைபெற்ற பிராம்டன் நகரசபை உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டமை யாவரும் அறிந்ததே.

இதன் தொடர்ச்சியாக இலங்கையில் நீதி, மனித உரிமைகள் மற்றும் நிரந்தர சமாதானத்திற்காக கனடியர்கள் பாடுபடுவதற்கான ஒரு தளத்தையும் ஊக்கத்தையும் வழங்கவும், எதிர்கால தலைமுறையினருக்கு இலங்கையில் தமிழ் மக்களை அழித்தொழிக்க நடந்த போர் மற்றும் பாதிப்புகள் குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கவும், உரிமைப்போரில் மாண்ட அனைத்து போராளிகளை நினைவுகூரும் இடமாகவும் திகழும் வகையில் பிராம்டன் நகரத்தின் மையப்பகுதியிலுள்ள பொதுப்பூங்கா ஒன்றில் பிராம்டன் நகரசபைக்குச் சொந்தமான காணியில் நினைவுத்தூபி அமைகிறது. மேலும் இலங்கையில் நடந்தது (31ஆம் பக்கம் பார்க்க...)

தமிழக செய்திகள்



தமிழர் பாரம்பரிய வீர விளையாட்டான சிலம்பம் மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

செப்ரெம்பர் 19, 2021

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மெய்யநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழர் களின் பாரம்பரிய பெருமைமிக்க சிலம்ப விளையாட்டை பாதுகாக்கவும், இதனை உலகறிய செய்யும் நோக்கத் திலும், மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் பட்டியலில் சேர்த்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரைப்படி கோரப் பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.



அதனையேற்று சிலம்பம் விளையாட்டினை மத்திய அரசின் விளையாட்டுத்துறை அங்கீகரித்து, புதிய கேலா இந்தியா திட்டத்தின் கீழான விளையாட்டின் மூலம் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி ஊக்குவித்தல் என்ற கூறில் சிலம்பம் விளையாட்டினை சேர்த்துள்ள தாகவும் கூறியுள்ளார்.

இந்த அங்கீகாரம் தமிழினத்திற்கு பெருமை சேர்த்துள் ளதாகக் கூறியுள் ள அமைச் சர், ஏனைய பழங் குடியின விளையாட்டுகளுடன் சேர்த்து சிலம்பத்தையும் மேம் படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்திய விளையாட்டு ஆணையத்தை கேட்டுக்கொண்டுள் ளதாகவும் கூறியுள்ளார்.

கோட்டாபயவின் அறிவிப்பு ஏமாற்று நாடகமே – பழ.நெடுமாறன்

செப்ரெம்பர் 23, 2021

சென்னை: தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஐநா பேரவைக் கூட்டத்தில் பல்வேறு நாட்டு அதிபர்கள் பங்கேற் கிறார்கள். இக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள இலங்கை அதிபர் கோட்டாபய ராஜபக்சே "விடுதலைப்புலி களுடன் தொடர்புகொண்டதற்காக நீண்டகாலமாகச் சிறை யில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பதில் தனக்கு தயக்கம் இல்லை" என்று உறுதி அளித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஆனால், இலங்கை அதிபராக இருந்த மகிந்த ராஜபக் சேயும், அப்போது பாதுகாப்புத்துறைச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்சேயும் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் இந்த வாக்குறுதியும் காற் றில் பறக்கவிடப்படும் என்பதில் ஐயமில்லை.மகிந்த ராஜ பக்சே பிடிவாதம் 2009 இல் போர் முடிந்த மறு ஆண்டான 2010 இல் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. விசாரணை ஆணையம் அமைக்கப்படுவதாக அப்போதைய செயலாளர் நாயகம் பான் கீ மூன் அறிவித்தார். ஆனால், இந்த விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மகிந்த ராஜபக்சே பிடிவாதமாக மறுத்துவிட்டார்.2012 ஆம் ஆண் டில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் அளித்த பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு மறுத்துவிட்டது.

இலங்கை அரசு ஏற்க மறுப்பு 2013ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை இலங் கைக்கு நேரில் சென்று விசாரணை நடத்த முற்பட்ட போது, அவருக்கு ஒத்துழைப்புக் கொடுக்க மகிந்த ராஜபக்சே மறுத் தார். ஆனாலும், மனித உரிமை ஆணையர் இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து நேரடியாகப் பல உண்மைகளைக் கண்டறிந்து அறிக்கை அளித்தார். அதில் குறிப்பாக, எத்தகைய விசாரணையுமின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என வற்புறுத்தியிருந்தார். அவரது அறிக்கையை முழுவது மாக மகிந்த இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட் டது. 2014ஆம் ஆண்டில் இலங்கை அரசின் போர் மீறல்கள் குறித்து சர்வதேச புலன் விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையம் முடிவு செய்தது. ஆனால், இந்த விசாரணைக் குழுவைத் தனது நாட்டிற்குள் அனுமதிக்கவே இலங்கை அரசு மறுத்துவிட்டது. சிங்கள ராணுவம் மனித உரிமை மீறல்.

மீண்டும் 2019ஆம் ஆண்டு ராஜபக்சே சகோதரர் பதவிக்கு வந்த பிறகு "இலங்கை இறுதிக்கட்டப் போரின்போது சிங்கள ராணுவம் மனித உரிமை மீறலில் ஈடுபட்டதற்கான 1.2 லட்சம் ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாக ஐ.நா. மனித உரிமை ஆணையம்" கடந்த வாரத்தில் அறிவித்தது. ஆனாலும், ஐ.நா.வையோ, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தையோ, அவற்றின் ஆணைகள் எதையுமே சிறிதளவுகூட மதிக்காத ராஜபக்சே சகோதரர் இனிமேலும் மதிப்பார்கள் என்பதை உலகம் நம்பவில்லை.ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் தான் பேசும்போது பிரச்சனை எதுவும் எழுந்துவிடக்கூடாது என்பதற்காக கோட்டாபய ராஜபக்சே மிகத் தந்திரமான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். நாட்டிற்கு அவர் திரும்பிச் சென்ற பிறகு சிறையில் வாடும் தமிழர்களை விடுவிப்பார் என்பதற்கு எத்தகைய உத்தர வாதமும் இல்லை. எனவே, ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள பிரதமர் மோடி, இலங்கை அதிபரிடம் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் பரிந் துரைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்த வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள போர் குற்றவாளிகளை தண்டிக்க இந்திய அரசு துணை நிற்க வேண்டும்

– மருத்துவர் ச. இராமதாசு, நிறுவனர், பாட்டாளி மக்கள் கட்சி–



செப்ரெம்பர் 24, 2021

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கை இனச் சிக்கல் குறித்து வெளிநாடு வாழ் தமிழர் அமைப்பு களுடன் பேச்சு நடத்துவதற்கும், விடுதலைப் புலிகள் அமைப் புடன் தொடர்பில் இருந்ததாக கைது செய்யப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய தயாராக இருப்பதாக இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்சே கூறியுள் ளார். இது ஈழத்தமிழர்களையும், உலக நாடுகளையும் ஏமாற்றுவதற்கான சதி என்பதைத் தவிர வேறில்லை.ஐ.நா. பொது அவைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்சே, நியுயார்க்கில் ஐ.நா. தலைமைச் செயலாளர் அண்டோனியா குட்ரஸை சந்தித்துப் பேசிய பின்னர் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார். கோத்தபயவின் இந்த அறிவிப்பை மேலோட்டமாகப் பார்க்கும்போது அவர் திருந்தி விட்ட தாகவும், ஈழத்தமிழர்கள் மீது அக்கறை கொண்டிருப்பது போன்றும் நினைக்கத் தோன்றும். ஆனால், இது உண்மை யைப் போல் காட்சியளிக்கும் பொய் தான்.2009ஆம் ஆண்டு இலங்கை போர் முடிவடைந்தவுடன், ஈழத்தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படும் என அப்போதைய அதிபர் மகிந்த ராஜபக்சே அறிவித்தார். அதன்பின்னர் அவர் அதிபராக இருந்த ஆறு ஆண்டுகளில் ஈழத்தமிழர்களுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. மாறாக, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சிங்களர்களைக் குடியேற்றி காலனிமயமாக்கும் பணிகள் தான் நடைபெற்றன. அப்போது பாதுகாப்புத்துறை செயலராக இருந்த கோத்தபய 2019ஆம் ஆண்டில் இலங்கை அதிபராக பதவியேற்றப் பிறகும் கூட தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.ஆதாரங்களைத் திரட்டும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம்ஈழத்தமிழர்கள் வாழும் பகுதிகளிலி ருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டணி தொடர்ந்து வலியுறுத்தியதன் பேரில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுடன் கடந்த ஜூன் மாதம் பேச்சு நடத்துவதாக கோத்தபய அறிவித்திருந்தார். ஆனால், கடைசி நேரத்தில் வேறு தேதி கூட அறிவிக்கப்படாமல் அப்பேச்சுகள் ரத்து செய்யப்பட்டன. அதுமட்டுமின்றி, வெளிநாடு வாழ் தமிழர்கள் அமைப்புகள் பலவற்றையும் பயங்கரவாத அமைப் புகள் என்று அறிவித்து கோத்தபய ராஜபக்சே தடை செய்தார். அடுத்த ஆறு மாதங்களில் தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு பேச்சு நடத்தப்போவதாக கோத்தபய அறிவித்தால் அதை எவரும் நம்ப மாட்டார்கள்.

ஈழத்தமிழர் அமைப்புகளுடன் பேசப் போவதாகவும், சிறையி லுள்ள ஈழத்தமிழர்களை விடுவிக்கப் போவதாகவும் கோத்தபய அறிவித்ததற்குக் காரணம் இருக்கிறது. கோத்தபய, அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட சிங்கள பேரினவாத சக்திகள் மீதான போர்க்குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களைத் திரட்டுவதில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தீவிரம் காட்டத் தொடங்கியிருப்பது தான் அந்தக் காரணமாகும். இலங்கைப் போரில் நிகழ்த்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் குறித்து 1.20 லட்சத்துக்கும் கூடுதலான ஆதாரங்களை ஐ.நா. மனித உரிமை ஆணையம் திரட்டி யிருக்கிறது. கூடுதல் ஆதாரங்களைத் திரட்டும் பணிகளை இந்த ஆண்டில் தொடங்கி விடுவதாக அறிக்கையில் பாச்லெட் கூறியுள்ளார். இலங்கைப் போர் முடிவடைந்து 12 ஆண்டுகள் ஆகியும் அங்கு மனித உரிமை மீறல் தொடருவதாகவும், போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மன்னிக்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். ராஜபக்சே சகோதரகளை கூண்டில் ஏற்ற நடவடிக்கை இத்தகைய சூழலில் போர்க்குற்ற விசாரணை தீவிரமடைவதைத் தடுப்பதற்காகவும், உலக நாடுகளில் கண்டனத்திற்கு ஆளாவதிலிருந்து தப்புவதற் காகவும் தான் கோத்தபாய சமாதானத் தூதர் அவதாரம் எடுத்திருக்கிறார். ஐ.நா. மனித உரிமை ஆணையம் அமைத் துள்ள பன்னாட்டு பொறிமுறை ஒன்றரை ஆண்டுகளில், போர்க்குற்றங்கள் குறித்த அனைத்து ஆதாரங்களையும் திரட்டி ஆவணப்படுத்தும்.

அவ்வாறு ஆவணப் படுத்தப்பட்ட ஆதாரங்களை அடிப் படையாக வைத்து மனித உரிமைகளில் அக்கறையுள்ள எந்த நாடும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் உள்ளிட்ட சர்வ தேச அமைப்புகளில் வழக்குத் தொடர்ந்து ராஜபக்சே குடும்பத்தினர் உள்ளிட்ட அனைத்து போர்க்குற்றவாளிகளுக் கும் தண்டனை பெற்றுத் தர முடியும். இது குறித்த அச்சம் தான் கோத்தபாயவை இப்படியெல்லாம் பேச வைக்கிறது. அவரது இந்த கபட நாடகத்தை ஈழத்தமிழர்கள் நம்பவில்லை. இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் நம்பி ஏமாந்து விடக் கூடாது. மாறாக, இலங்கை போர்க்குற்றங்கள் குறித்த ஆதாரங்களைத் திரட்டும் முயற்சிக்கு உலக நாடுகள் அனைத்தும் துணை நிற்க வேண்டும். ஆதாரங்கள் திரட்டப்பட்டவுடன் ராஜபக்சே சகோதரகள் உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் கூண்டில் ஏற்றி தண்டிக்கவும், அதன் மூலம் இனப்படு கொலை செய்யப்பட்ட ஈழத்தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தரவும் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றின் நிறைவாக ஐ.நா. மூலம் உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தி தனித்தமிழீழம் அமைக்கவும் இந்தியா வகை செய்ய வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி சிறப்பு முகாம்

இன்று எமது போராட்டம் 40 ஆம் நாளாக தொடர்கின்றன...
யார் மனதிலும் எங்கள் மேல் ஒரு இரக்கம் வரவில்லையா?
எமது அரசியல் பிரதிநிதிகள், எமது அதிகாரிகள்,
எமது தொப்புள் கொடி உறவுகள் அனைவருக்கும்
எமது தாழ்மையான வேண்டுகோள். அனைவரும்
எங்களுக்காக குரல் கொடுங்கள்.
எங்களையும் எங்கள் குடுபத்தோடு வாழ விடுங்கள்.

















உலகப்பரப்பில் ஈகைச்சுடர் திலீபன் நினைவு நாள் நிகழ்வு 26.09.2021













என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?

தியாக தீபம் திலீபனின் 34 வது ஆண்டு நினைவு நாள் - 26.09.2021

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, 5அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து தன் உயிரை ஈகம் செய்த மாவீரன் திலீபனுக்கு வீர வணக்கம், இதய பூர்வமான அஞ்சலி.



1. இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலையை நிரூபித்தல் (GENOCIDE)
2. இனப் படுகொலைக்காக இலங்கை அரசை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தல். (INTERNATIONAL CRIMINAL COURT - ICC)
3. இனப் படுகொலை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்தல் (NON-RECURRENCE)
4. தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்களுக்காக ஈடு செய் நீதி (REMEDIAL JUSTICE) கிடைப்பதை உறுதி செய்தல்
5. ஈடு செய் நீதி கிடைப்பதன் மூலம் இலங்கையின் வடக்கு,கிழக்கு பிராந்தியத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் பொதுசன வாக்கெடுப்பு (REFERENDUM) ஒன்றை நடாத்துதல்

மேற்படி ஐந்து அம்சங்களை நிறைவேற்றுமாறு குவாட்(QUARD) அமைப்பை (அமெரிக்கா,இந்தியா,ஜப்பான்,அவுஸ்திரேலியா உட்பட) கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர்களின் தாகம் !
தமிழ் ஈழத் தாயகம் !!

– தமிழ்த் தேசியக் கட்சி
(TAMIL NATIONAL PARTY)







உலக செய்திகள்

இலங்கையின் உள்நாட்டு மோதல் குறித்து விசாரணைகள் இடம்பெற வேண்டும் – ஐ.நா. சர்வதேச சுயாதீன விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்

– நோர்வேயின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹம்சி குணரட்ணம் –



செப்ரெம்பர் 26, 2021



இலங்கையின் உள்நாட்டு மோதல் குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும் ஐநா சர்வதேச சுயாதீன விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என நோர்வேயின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஹம்சி குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

தமிழ்சிங்கள பத்திரிகையாளர்களுடான டிஜிட்டல் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது.

உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழ் சிங்கள பத்திரிகையாளர்களுடன் டிஜிட்டல் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தேன். நோர்வே நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டமையே இதற்குக் காரணம்.

நான் நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை பலருக்கு பெரும் விடயம் என்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேவேளை நான் குரல் கொடுக்கின்ற – நான் எதற்காக நாடாளுமன்றம் சென்றேனோ அந்த விடயங்கள் குறித்த கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடவேண்டியது முக்கியமானது நான் கருதுகின்றேன். இன்றைய சந்திப்பில் நான் தெரிவித்த முக்கியமான விடயங்கள் ஓஸ்லோ நோர்வே மற்றும் உலகம் ஆகியன இரண்டு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள் ளமை காரணமாகவே நான் தேர்தலில் போட்டியிட்டேன். அதிகரித்துவரும் சமத்துவமின்மை மற்றும் காலநிலை மாற்றம் ஆகியனவே அந்த இரண்டு விடயங்கள் ஓஸ்லோவின் பிரதிமேயராக எனக்கு ஆறு வருடங்கள் கிடைத்த அனுபவத்தை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். பசுமை மாற்றம், அதிகரிக்கும் சமூக சமத்துவமின்மை ஆகிய வற்றை எதிர்கொள்வதை நோக்கி நாங்கள் செயற்பட்டோம்.

முக்கியமாக அதிகளவு மக்களை எப்படி தொழில் வாழ்க்கைக்குள் ஈர்ப்பது என்பது குறித்து கவனம் செலுத்தினோம், ஏனென்றால் நோர்வேயை வளமான செல்வந்த நாடாக மாற்றுவது எண்ணெயில்லை, தொழில்புரிந்து வரி செலுத்தும் மக்களே நோர்வே யை செல்வந்த நாடா க மாற்றுகின் றனர்,எங்கள் சமூக நலன்புரி அரசு வலு வானது சமூக பொருளா தார பாலி யல் சமத்துவத்திற் குள் நாங்கள் செயற் படுகின் றோம்.

உங்களில் பலருக்கு இலங்கையுடனான எனது உறவு குறித்து கேள்விகள் இருக்கலாம். நான் இலங்கையில் பிறந்ததால் நான் இலங்கையுடனும் புலம்பெயர் தமிழர்களுடனும் தொடர்பை கொண்டிருப்பேன். நான் இலங்கையில் பிறந்தேன் 13 வருடங்கள் தமிழ் பாடசாலைக்கு சென்றேன், தமிழ் எனது தாய்மொழி.

இலங்கை மக்களின் நீண்டகால பிரச்சினைகளிற்கு வேண்டும் என்பது குறித்த அனுதாபமும் பச்சாதாபமும் எனக்கு உள்ளது. இலங்கை என வரும்போது முதலில் சர்வதேச சமூகத்திடமிருந்து சில விடயங்களை நாங்கள் செய்யலாம். அதேவேளை இலங்கை மக்கள் இணைந்து தங்களிற்காக செயற்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

முதலாவதாக யுத்தம் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும். இலங்கையின் போரில் இறுதி இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஐநா தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றது. இலங்கை அரசாங்கம் சர்வதேச சுயாதீன விசாரணைக்கு அனுமதியளிக்க வேண்டும். ஏனென்றால் ஜனநாயகத்தில் வெளிப்படைத் தன்மை என்பது மிகவும் முக்கியமான அம்சம். நல்லிணக்கத்திற்கும் இது அவசியமான விடயம்.

இரண்டாவது யுத்தம் மோதல்கள் குறித்து சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தவேண்டும். தொழில்கட்சியின் இளைஞர் லீக்கின் உறுப்பினராக நான் இதனை முன்னெடுத்தேன்.

மூன்றாவது நோர்வேயிலிருந்து இலங்கையுடனான எங்கள் உறவை தொடர வேண்டும், பகிஷ்கரிப்பு ஒரு வழிமுறை என நான் கருதவில்லை.
எதிர்கால வெளிவிவகார அமைச்சரும் புதிய வெளிவிவகார அமைச்சரும் இது குறித்து சிறந்த திட்டமிடல்களை கொண்டிருப்பார்கள் என நான் கருதுகின்றேன்.

இறுதியாக அதிகரித்துவரும் சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் காலநிலை மாற்றம்ஆகியவற்றிற்கான தீர்வை காணும்போது நோர்வே ஒரு முன்மாதிரியாக விளங்கவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

ஆப்கானிஸ்தானில் மாணவிகள் மீண்டும் பாடசாலைக்கு...


செப்ரெம்பர் 19, 2021

ஆப்கானிஸ்தானில் மாணவிகள் சிலர் மீண்டும் நேற்று பாடசாலைக்கு சென்றனர்.

பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள வகுப்பறைகளில் நேற்று கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என தலிபான்கள் அறிவித்துள்ளதை தொடர்ந்தே மாணவிகள் மீண்டும் பாடசாலை சென்றனர்.

பொருளாதார இயல்புவாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்துவதில் தலிபான்கள் பலத்த சிரமத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் காபுலில் பல கல்வி நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன.



இரண்டு தசாப்தங்களிற்கு முன்னர் பெண்கள் கல்வி கற்பதற்கு தடை விதித்த அடிப்படைவாத கொள்கைகளை மீண்டும் நடைமுறைப்படுத்தப்போவதில்லை என தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட வகுப்பறைகளில் மாணவிகள் கல்விகற்க முடியும் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

எங்கள் பாடசாலையில் பிரச்சினை இல்லை காலையில் மாணவிகள் கல்விகற்கின்றனர் மதியம் மாணவர்கள் கல்விகற்கின்றனர் பெண்களே மாணவிகளிற்கு கல்வி கற்பிக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 29 ஆம் திகதி இடம்பெற்ற விமானத் தாக்குதலில் பொதுமக்களே கொல்லப்பட்டவர்கள் அமெரிக்கா அறிவிப்பு


செப்ரெம்பர் 18, 2021

மனிதாபிமான பணியாளரின் காரே இலக்கு வைக்கப்பட்டது.

அமெரிக்க படையினர் ஆப்கானிலிருந்து வெளியேறுவதற்கு சில நாட்களிற்கு முன்னர் இடம்பெற்ற ஆளில்லா விமானத் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதை அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

ஆகஸ்ட் 29 ம் திகதி இடம்பெற்ற ஆளில்லா விமான தாக்குதலில் மனிதாபிமான பணியாளர் ஒருவரும் அவரது ஏழு குழந்தைகள் உட்பட குடும்பத்தவர்கள் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர் அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளை பீடம் தெரிவித்துள்ளது.

இரண்டு வயது குழந்தையும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளது.



MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

Manaja

manajaskitchen.ca

MANAJA'S KITCHEN

A Fusion of Indian & Sri Lankan Cuisine



மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.

Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party



அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்

FREE Delivery for orders over $150 in GTA

75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4

905.427.8263



BOROS CANADIAN
PAPER CONVERTING INC.



Alan Maniam
Director

647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

சுயநிர்ணய உரிமையும்

ஆறாவது சட்டத்திருத்தமும்

அரசியில் அமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கி விடுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, அன்று சிறீலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் இறங்கி, தேர்தலில் முகம் கொடுப்பதாக இருந்தால் இந்தச் சட்டத் திருத்தம் அகற்றப்பட வேண்டுமென முன் நிபந்தனையை நாம் வதித்திருக்கிறோம். ஆறாவது சட்டத் திருத்தமானது தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படையான அரசியற் சுதந்திரங்களை மீறுவதாக அமைவதுடன், எமது தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் ஆப்பு வைக்க முயல்வதால், இது நீக்கப்பட வேண்டுமென்பது புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு.

முன்பு ஆறாவது சட்டத் திருத்தத்தை வன்மையாக எதிர்த்த தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் இத் திருத்தத்தின் கீழ் சுய நிர்ணய உரிமையைக் கைவிட்ட தாகச் சத்தியப்பிரமாணம் எடுத்து இன்ற பாராளுமன்ற நாற்காலிகளில் வீற்றிருக்கின்றன. விடுதலைப் புலிகள் இயக்கம்மட்டுமே இச் சட்டத்திருந்தத்தை எதிர்த்து நிற்கிறது. இத் திருத்தத்தை நீக்கிவிட வேண்டுமென அரசை வலியுறுத்துகிறது. இந்தச் சூழ்நிலையில் ஆறாவது சட்டத்திருத்தத்தின் அரசியல் வரலாற்றுப் பின்னணியையும், அதன் பாதகமான அம்சங்களையும் இக்கட்டுரையில் விரிவாகப்பார்ப்போம்.

சோல்பரி அரசியல் திட்டம்

இலங்கைத்தீவிற்கு 1948ஆம் ஆண்டு பிரித்தானியா சுதந்திரம் வழங்கியது. இதற்குமுன் "சோல்பரிப் பிரபுவின்" தலைமையிலான ஓர் அணைக்குழு விசாரணைகள் மேற்கொண்ட வழங்கிய அறிக்கையின் அடிப்படையில், ஓர் அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டது. இது பொதுவாக "சோல்பரி அரசியில் திட்டம்" என்று அழைக்கப்பட்டது. இதுவே இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டபின் நடைமுறையில் இருந்த அரசியல் யாப்பாகும்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழம் தவிர்ந்த ஏனைய சிங்கள நாட்டு வாக்களிப்பின் அடிப்படையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கொம்யூனிஸ்ற் கட்சி (மொஸ்கோ பரிவு) ஆகியவை இணைந்த அமைத்துக் கொண்ட இடதுசாரி ஐக்கிய முன்னணி மகிப் பெரும்பான்மையான பாராளுமன்றத் தொகுதிகளைக் கைப்பற்றியது.

1972 ஆம் ஆண்டின் யாப்பு

தமிழீழத்தில் தமிழரசுக் கட்சி பெரும்பான்மைக் கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் மிகப் பெருமளவில் இருந்த சாதகமான நிலையைப்பயன்படுத்தி, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களையே உறுப்பினர்களாகக் கொண்ட அரசியல் நிர்ணய சபையை அறிவித்தது. அதன்படி இப்பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையில் ஒரு புதிய யாப்பு நிறைவேற்றப் பட்டது. இதுவே 1972 ஆம் ஆண்டின் யாப்பு என அழைக்கப்பட்டது. இதன் பிரதான மாற்றமாக முன்னைய யாப்பின்படியான ஆளுநர் நாயகம் (Governor General) பதவி நீக்கப்பட்டு குடியரசுத் தலைவர் (President) ஒருவர் அரசாங்கத் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த அரசியல் யாப்பு பாராளுமன்ற உறுப்பினர்களினாலான அரசியில் நிர்ணய சபையினால் தயாரிக்கப்பட்ட தெனக் கூறப்பட்ட போதிலும் தமிழீழத்தின் மிகப்பெரும்பான்மைக் கட்சியான தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்தும் வெளியேறினர். இதனால் 1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பு தமிழர்களும் சேர்ந்து தயாரிக்காத ஒரு தலைப்பட்சமாக, சிங்களவரினால் தமிழர் மீது திணிக்கப்பட்ட யாப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

1978–ல் புதிய அரசியல் யாப்பு

இதன் பின் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான யூ. என்.பி.யும், தமிழீழம் தவிர்ந்த சிங்கள நாட்டில் மிகப் பெரும் வெற்றியீட்டியது. தமிழீழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றியீட்டியது. 1977-ல் நடைபெற்ற தேர்தலில் சிங்கள நாட்டில் 1970 – ல் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஈட்டிய பெருவெற்றியிலும் கூடிய மிகப்பெரு வெற்றியை யூ. என்.பி. பெற்றது. இவ்வெற்றியை திரு. ஜெயவர்த்தனா பயன்படுத்திப் பாராளுமன்ற உறுப்பினர்களையே ஒரு அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாகவும் மாற்றி, 1978ல் இன்னொரு புதிய அரசியல் யாப்பை உருவாக்கினார். இந்த அரசியல் யாப்புத் தயாரிப்பை உருவாக்கினார். இந்த அரசியல் யாப்புத் தயாரிப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. மீண்டும் ஒரு முறை தமிழர்களின் சம்மதமின்றி சிங்கள நிரந்தரப் பெரும்பான்மையினரால் தமிழர் மீது ஒரு புதிய யாப்புத் திணிக்கப்பட்டது. இதுவே இன்றுவரை நடைமுறையிலுள்ள யாப்பாகும்.

பதினெட்டுத் திருத்தங்கள்

யூ.என்.பி. அரசிற்கு மிகப் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த காரணத்தினால் இந்த யாப்பின் ஏற்பாடுகளிற் கமைய இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் பல திருத்தங்களைக் கொண்ட வர முடிந்தது. ஜெயவர்த்தனாவின் அரசு கலைக்கப்படும் வரை இந்த யாப்பிற்குப் பதினெட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்திருத்தங்களுள் 6வது திருத்தம் என அழைக்கப் படும் திருத்தம் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மிக முக்கியமானது.

இனப்படுகொலைகள்

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு மட்டுமல்ல, நினைத்துப் பார்க்கவே முடியாத அளவிற்குத்தமிழினப் படுகொலை நடத்தப்பட்டது. இவ்வினப் படுகொலையின் உச்சக்கட்டமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறையிருந்த 52 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளைத் தொடர்ந்து திரு. ஜெயவர்த்தனா அரசு அரசியல் யாப்பிற்குக் கொண்டுவந்த திருத்தமே "ஆறாவது திருத்தம்" எனப்படுவது. இதற்கு முன்பும் ஐந்து திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அவை இங்கு ஆராயப்படவேண்டிய முக்கியத்துவமுடையன அல்ல.

அரசியல் அமைப்புத் திட்டத்திற்கான ஆறாவது திருத்தம், முன் சொல்லப்பட்டது போன்று 1983ல் நடைபெற்ற தமிழ் இனக் கொலை அழிப்பைத் தொடர்ந்து இருவாரங்களுக்குள் அதாவது 1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 8-ம் திகதி சட்டமாக்கப்பட்டது. தமிழினக் கொலை, அழிப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது, ஒடுக்குவதற்கு இத்

ஒரு கண்ணோட்டம்

திருத்தம் கொண்ட வரப்பட்டதாகக் கூற முடியாது. இதற்கு எதிர்மாறான நோக்கங்களை எய்தவும், தமிழர்களைத் துன்புறுத்தவும், ஒடுக்கவும், ஒழிக்கவும் வெறும் காடைத்தனத்தை மட்டும் நம்பியிராமல் சட்ட ரீதியாகவெ தமிழர்களை ஒழிப்பதற்காக, அழிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ஆயதமே இந்திருத்தச் சட்டம். இதன் மொத்த விளைவு தமிழின ஒழிப்பைச்சட்டபூர்வமாக்குவதாகவே முடிந்திருக்கிறது.

தடைகள்

இந்த ஆறாவது திருத்தச்சட்டமூலம் 1978 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மிது திணிக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தின் 157 ஆம் பிரிவிற்கு அடுத்ததாக 157 – A என்று எண்ணிடப்பட்ட ஒரு புதிய சட்டப் பிரிவும் திணிக்கப்பட்டது. இச்சட்டத்தின் முதலாவது துணைப்பிரிவின் படி இலங்கைத்தீவிற்கு உள்ளோ, வெளியிலோ வசிக்கும் எந்த நபரும் சிறீலங்காவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வேறு தனியான ஓர் அரசை நிறுவுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு நல்குவதோ, அந்நோக்கத்தை பரப்புவதோ, அதற்கான நிதி உதவி வழங்குவதோ, உற்சாக படுத்துவதோ, அல்லது அந்த நோக்கத்தை வலியுறுத்துவதோ தடை செய்யப்பட்டது. அதே போல எந்த அரசியல் கட்சியோ, அமைப்போ இலங்கையின் எப்பகுதியிலும் வேறு ஒரு அரசை நிறுவுவதை தனது நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருப்பது தடைசெய்யப்பட்டது. அதாவது தமிழர்களுக்கான தனியரசுக்கோரிக்கை சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது தமிழ் பேசும் மக்கள் தமது "சுயநிர்ணய உரிமையை" உபயோகித்து ஒரு தமிழரசை நிறுவி, ஒரு கூட்டாட்சி அரச மைப்பை இலங்கையில் ஏற்படுத்த (சமஷ்டி அரசு) மக்கள் ஆணையத்தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிநின்றது. தமிழரசுக்கட்சியின் இத் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தமிழ் பேசும் மக்கள் பெருவாரியாக ஏற்றனர். 1956ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ ஈழத்தின் தென்கோடித் தொகுதியான பொத்துவில் தொகுதியில்லிருந்து தமிழரசுக்கட்சி வேட்பாளரான ஜனாப், எம்.எம். முஸ்தபா, கல்முனைத் தொகுதியிலிருந்து கேற்முதலியார், எம். எஸ். காரியப்பர் ஆகிய முஸ்லீம் தலைவர்கள் உட்பட, 10 தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள பாராளுமன்ற உறுப்பினராயினர். அதாவது தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தமிழ்ப்பேசும் மக்கள் ஏற்று, தமிழ் முஸ்லீம் மக்கள் தங்ள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில், ஒரு தமிழரசை நிறுவி ஒரு கூட்டாட்சி முறை அரசியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற தமது தீர்ப்பைத் தெட்டத் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். 1956 ஆம் ஆண்டிற்குப்பின் 1965ல் ஒரு பொதுத் தேர்தலும், 1970ல் ஒரு பொதுத் தேர்தலுமாக நான்கு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இவை ஒவ்வொன்றிலும் தமிழரசுக்கட்சி தனது 1956 பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்பட்ட தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை உபயோக அடிப்படையில் ஒரு தமிழரசை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்களின் ஒப்புதலையும் பெற்றுது. 1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தமிழ் மக்கள் ஒரு தனி ஈழத்தமிழரசை நிறுவுவதற்குத் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அதிகாரம் வழங்கினர். ஆக மொத்தத்தில் ஆறு பொதுத் தேர்தல்களில் தமிழ் ஈழ மக்கள், தமது தீர்ப்பைத் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். தமிழ் மக்களின் தீர்ப்பு எப்படி இருந்தபோதும், தங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை மேலும், மேலும் வலுவாக்கிக் கொண்டே வந்தது சிங்கள அரசு. ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் ஒவ்வொரு புதிய அரசு பதவி ஏற்று, பதவிக்காலம் முடிந்து அடுத்த பொதுத் தேர்தலைச்சந்திக்கும் போது தமிழர்களின் உரிமைகளில் ஏதோ ஒன்றையாவது அவை பறிக்கத்தவறவில்லை.

ஆறாவது திருத்தச் சட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்பு

எந்த அரசு பதவிக்கு வந்தாலும், அந்த அரசின் பதவிக் கால முடிவில் தமிழ் ஈழமக்கள் ஏதோ ஒரு அரசியல் இழப்புக்குள் தாம் ஆளாகி விட்டதைக் கண்டார்கள். இந்தவகையில் ஜெயவர்த்தனா அரசினால் கொண்டுவரப்பட்ட 6வது அரசியல் அமைப்புச்சட்டத் திருத்தம் தமிழ் மக்களின் இழப்புக்களுக்கு முடிவைத்தது போல் இருக்கிறது. எந்த உரிமைக்காக தமிழ் பேசும் மக்கள் ஆறு பொதுத்தேர்தல்களில் தமது தெளிவான முடிவைவெளியிட்டார்களோ, அந்த உரிமையைச் சட்டபூர்வமாக மறுக்கவும், அதனையும் மீறி தமிழ் மக்கள் அவ்வுரிமையை வலியுறுத்தின், அவர்களை அடக்கவும் ஒடுக்கவும் ஈற்றில் அழிக்கவும் கொண்டு வரப்பட்டதே இந்த ஆறாவது அரசியல் அமைப்புத் திருந்தச்சட்டம்.

பதவிகளைப் பறிக்கும் சட்டம்

மேலே காட்டப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தம் தனிநபர்களும், அரசியல் கட்சிகள், அல்லது இதர அமைப்புக்களும் இலங்கைத்தீவில் வேறொரு தனி அரசை–அதாவது தமிழீழத்தில் தமிழீழத் தனியரசை – நிறுவுவதற்கான எந்த நடவடிக்கையையும், பேச்சாலோ எழுத்தாலோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எடுக்கத்தடை விதித்தது. இந்தப் புதிய சட்டத்தினை மீறுபவர்களுக்குப் பெரும் தண்டனை வழங்க திருத்தச் சட்டம் வழி வகுத்தது. தண்டனைகளுள் குடியியல் உரிமைகளை இழத்தல், அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை இழத்தல், பாராளுமன்ற உறுப்பினர், அரச ஊழியர் பதவிகள், நீதிபதிகள், சட்டத்தரணி பதவிகள் போன்ற சகலதையும் இழக்க வழிசெய்தது.

சத்தியப்பிரமாணம்

இவற்றோடு நில்லாது குறித்த 6வது திருத்தச்சட்டத்தில் அரசியல் அமைப்புத் திட்டதிற்கான ஏழாவது அட்டவணையாக ஒரு அட்டவணையும் இணைக்கப்பட்டிருந்தது. இந்த அட்டவணை ஒரு சத்தியப்பிரமாணம் ஆகும். மேலே சொல்லப்பட்டுள்ள அனைத்துத்தரப்பினரும் இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படிசத்தியப்பிரமாணம் செய்ய வேண்டுமென ஆறாவது திருத்தச்சட்டம் கூறியது. இந்தச் சத்தியப் பிரமாணத்தின்படி மேற் சொல்லப்பட்ட அனைவரும் தாங்கள் சிறீலங்கா அரசியல் யாப்பைப்பேணுவோம் எனவும், இலங்கையிலிருந்து கொண்டோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ, இலங்கையில் எப்பகுதியிலும் வேறான ஒரு தனி அரசை நிறுவ எவ்விதத்திலும் செயற்படமாட்டோமெனவும் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டியிருந்தது. இச்சத்தியப் பிரமாணத்தைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்தால், அது மக்கள் அவர்களுக்கு இட்ட கட்டளையை மீறுவதாகும். இதே நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆனாது, எந்தத்தமிழனும், ஆரசாங்க ஊழியர் உட்பட அந்தச் சத்தியப்பிரமாணத்தை எடுக்கக் கூடாதெனப் பிரச்சாரம் செய்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கையில் அரசாங்க ஊழியர், மற்றும் வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், தத்தம் தொழிற் சங்கங்களின் பிரச்சனையை ஆராய்ந்து சங்க முடிவின்படி ஏற்ற நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என்றும் ஆனால், அரசியல் பதவிகளை தமிழீழ மக்கள் சார்பில் வகிப்போர், 6வது திருத்தச் சட்டத்தின்படியான சத்தியப்பிரமாணத்தை எடுக்கக் கூடாது என்றும், தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தது. ஈற்றில் தமிழீழ மக்கள் சார்பில் அரசியல் பதவி வகித்த கூட்டணியினர் சத்தியப்பிரமாணம் எடுக்காது தமது பதவிகளைத்துறந்தனர். அரச மற்றும் ஒத்த நிறுவனங்களில் தொழில் புரிந்தோர் சத்தியப்பிரமாணம் செய்து தங்கள் தொழில்களைப் பாதுகாத்துக்கொண்டனர். கூட்டணியினர் பதவிகளைத் துறந்ததைத் தொடர்ந்து ஜெயவர்த்தனா அரசின் பதவிக்காலம் முடியும் வரை தமிழீழ மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமின்றி (17 ஆம் பக்கம் பார்க்க.....

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த
இனப்படுகொலைகளின் நினைவு
நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும்
மற்றும் எழுத்தார்வம் மிக்க
வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம்,
சமூகம், இலக்கியம் சார்ந்ததாக
இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com



சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com

AIR CONDITONER INSTALLATION SALE
High -Efficiency Air Conditoner Starting From $1,899
HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
A/C Leak Check & Refilling the Gas
Repair, Service & Installation
ENERGY STAR Ductless Air Conditions
Is Your Home Keeping You COOL?
TOSHIBA Carrier INVERTER
LENNOX
Carrier, Lennox, Comfortstar
Trane, Ameristar, Goodman
FREE 10 Years Parts Warranty
Furnance, Air Conditioner,Hot Water Tank, Tankless Water Heater, HRV
Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
Call Now for FREE ESTIMATE S.Kumar 416-993-8001



SATANIC FORCES
சாத்தானின் படைகள்

தமிழீழத்தில் இந்தியப் படையின் தலையீடு, இந்தியாவிட்ட ஒரு மாபெரும் தவறு என்பதை உலகம் இன்று ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியா நடாத்திய போரால், பெருமளவில் உயிர் இழப்புகள் ஏற்பட்டன. பெரும்செலவுடன் மிக நீண்டகாலம் இந்தியாவால் நடாத்தப்பட்ட இப்போரில், இந்தியப்படைக்கு ஏற்பட்ட தோல்வி இந்தியாவுக்கும் இந்தியப் படைக்கும், பெரிய அவமானத்தைக் கொடுத்துள்ளது.

இந்திய ஆக்கிரமிப்பு எவரக்கும் எதுவது பயனையோ, நன்மையையோ தரவில்லை; மாறாக எதிரிவிளைவுகளையே கொடுத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் மேற்கொள்ளப்பட்ட சாதுர்யமான அரசயில் இராஜ தந்திரச் சாணக்கியத்தாலும், விடுதலைப் புலிகளின் உக்கிரமான போர்த் தாக்குதல்களாலும், இந்தியப் படையினரின் திட்டங்கள்யாவும் தவிட பொடியாகின.

இந்திய – புலிகள் போரில் அதன் முரண்பட்ட தன்மையை, அப்போரின் இறுதி விளைவிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

1. அமைதிப்படை என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள் - மிகவும் கொடூரமான, மனிதத் தன்மையற்ற ஒரு போரை நடாத்தினார்கள்.


2. ஆயதக் களைவு என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள் - பயங்கரமான ஆயுதங்களைக்கொடுத்து, "தமிழ்த் தேசிய இராணுவம்" என்ற கைக்கூலிகள் பட்டாளத்தை உருவாக்கினார்கள்.

3. தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்புக்கு என்று நுழைந்தவர்கள், தமிழ், முஸ்லீம் மக்களைப் படுகொலை செய்தார்கள்.

4. விடுதலைப் புலிகளை அழித்து, ஒழிக்க இந்தியா தீட்டிய திட்டங்கள் - அவர்கள் இன்று , இராணுவ ரீதியாகவும் மிகவும் சக்தி வாய்ந்த இயக்கமாக வளரவே வழிவகுந்தது.

இந்திய அரசின் தவறான கணிப்பீடும் விளைவுகளும்:

72 மணி நேரத்தில் வெற்றியடையும் இராணுவ நடவடிக்கை என்று கூறி, இந்தியாவால் புலிகள் மீது 10.10.1987 அன்று தொடக்கப்பட்ட போரானது, 720 நாட்களுக்கு மேலாக நீடித்தது மட்டுமல்லாமல், இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மிக நீண்டகாலப் பேராராகவும் மாறியது. இந்தப் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்களேயாவர். தமிழ்-முஸ்லீம் மக்கள் இப்போரினால் கடுமையாகப் பாதிக்கப் பட்டார்கள். இந்தியப்படை மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே வெற்றியடைய விரும்பியது. தமக்கேற்பட்ட பலத்த தேசத்தினால் ஆத்திரமடைந்து, மனவிரத்தியடைந்து, ஒழுங்கீனமாக நடந்த இந்தியப் படையினர், போர்முறைகள் தர்மங்கள், நடைமுறைகள் சகலவற்றையும் மீறி இரக்கமில்லாது நடந்தார்கள்.



பொதுமக்கள் மீது தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கடுமையான, உக்கிரமான எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாத இந்தியப்படையினர், பாதுகாப்பற்ற அப்பாவிப் பொதுமக்களின் இருப்பிடங்களை நோக்கித் தொலைதூர ஏவுகுண்டு (ஆட்லறி), (மோட்டார் செல்)களால் தாக்கினார்கள். இந்த இரக்கமற்ற தாக்குதல் குடிமக்களுக்குப் பெரிதும் சேதத்தை உண்டாக்கியது.

ஆரம்பத்தில் இரண்டுவராங்களுக்கு மேலாக நடந்த யாழ்ப்பாணப்போரினால், இரண்டாயிரத்துக்குமதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 5,000க்கு மேற்பட்ட மக்கள் காயமடைந்தார்கள்; ஐந்து இலட்சத்துக்கு (5,00, 000) மேற்பட்ட மக்கள் அகதிகளானார்கள். போரில் முன்னேறிச்சென்ற இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் படுகொலைகளும், பயங்கரத் தாக்குதல்களும், ஆதரவற்ற அகதிகள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களும், மனிதத் தன்மையற்ற, காட்டுமிராண்டித்தனமான செயலாகவெ இருந்தன. விடுதலைப்புலிகள் மீது தொடக்கப்பட்ட இப் போரானாது, இறுதியில் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்படும் ஒரு தாக்குதலாகவே மாறியது.

சாத்தானின்

இந்தியப் படைகள் கொல்லப்படும்போது, பதிலுக்குச் சாதாரண பொதுமக்கள் கொல்லப் படுவது, சாதாரண சம்பவமாக மாறியிருந்தது. இதில் மிகப் பயங்கரமானது யாழ் அரசினர் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இந்தியப் படையினர் ஈவிரக்கமில் லாமல், மனிதாபிமானமற்று வைத்தியர்கள், தாதிகள், வெளிநோயாளர்கள், தங்கியிருந்த நோயாளிகள் உட்பட 60க்கு மதிகமான னோரைக் கொன்றனர். யாழ்ப்பாணம்



"பிரம்படி ஒழுங்கைத் தாக்குதல், சாவகச்சேரி நவீனசந்தை மீதான "போர் உலாங்கு வானூர்தி"களின் ஏவுகணைத் தாக்குதல், இறுதியாக வல்வையில் நிகழ்த்தப்பட்ட படு கொலைகள் என்பன சர்வதேச ரீதியில் இந்தியாவுக்குக் கண்டனத்தைக் கொடுத்தன. விடுதலைப் புலிகளின் அதிகரித்த உக்கிரத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இந்தியப் படையினர் பொதுமக்களைப் பழி வாங்கினார்கள். அப்பாவிப் பொது மக்கள் மீது இவர்கள் பிரயோகித்த ஈவிரக்கமற்ற அடக்கு முறைகளால், இந்த இரண்டு வருட காலத்தில் 6,000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் அழிக்கப் பட்டார்கள்.

தற்போது, இந்தியப் படை முற்று முழுதாக வெளியேறிய போது, தமிழர் தாயகத்தில் அமைதியும், சமாதானமும் சகஜ நிலைக்கு வந்த போதும், இந்திய அமைதிப்படையால் தமிழ்த் தேசிய இனத்தின் மீது மேற்கொள்ளப் பட்ட அழிக்கமுடியாதவடுக்கள் ஒரு போதும் மாறாது.

இந்தியப் படையைக் கண்ட மக்கள் பயந்தார் கள்; அதை வெறுத்தார்கள். அதனை, தமது தாயகத்தை ஆக்கிரமித்துள்ள ஒரு படை யாகவே கருதினார்கள். இப்படை இங்கு இருப் பதால் தமிழ்-முஸ்லீம் மக்களின் பாது காப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும் என்ற எண்ணம் அறவே இல்லமற் போயிற்று. அதனால் தமிழ்-முஸ்லீம் மக்கள் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான புலிகளின் தாக்குதல்களைப் பெருமளவில் ஆதரித் தார்கள்.

இந்தியப் படை பொது மக்கள்மீது மேற் கொண்ட ஒழுக்கமற்ற நடவடிக்கைகளும், வெறுக்கத்தக்க செயற்பாடுகளும், ஈவிரக்க



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)


மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

DSC DEBT SOLUTION CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

வங்கிக் கடன்களில்
80% வரையிலான
கழிவு
Reduce your
debts upto
80%



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

சாத்தானின்

மற்ற செயற்பாடுகளும், ஈவிரக்கமற்ற கொடூரமான தண்டனை முறைகளும், மனித உயிருக்கும், மனித வாழ்க்கைக்கும் அளிக்கப்பட்ட அவமரியாதையும், மக்கள் இந்தியப் படையை அடியோடு வெறுக்கக் காரணமாய் அமைந்தன. இந்தியப் படையின் தலையீடு தோல்வியடையக் காரணமாக அமைந்தது.

"றோ" வின் தவறான கணிப்பு

விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை பற்றியும், அவர்களின் போராட்ட வல்லமை, இலட்சியத்தில் அவர்களுக்கு இருந்த திடசங்கற்பம் பற்றியும், தவறாகக் கருதி, தவறாகக் கணித்து எடை போட்டதும் அவர்களின் தோல்விக்கு இன்னொரு காரணமாகும். விடுதலைப் புலிகளின் பலத்தையும், நோக்கத்தையும் தவறாகக் கணித்து எடை போட்ட "றோ" அமைப்பு, "விடுதலைப் புலிகளை ஒரு சில தினங்களுக்குள் அழித்து விடலாம்" என்று கொடுத்த அறிக்கையை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நம்பினார்கள். போர் நீண்டு கொண்டிருந்தபோது, இந்தியப்படை இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்த போது, இந்தியா தனது தவறை உணர்ந்தது.

இந்தியர்கள் எண்ணியது போல், சாரமணிந்த விளையாட்டுப் பையன்களைக் கொண்ட அமைப்பல்ல, விடுதலைப்புலிகள். இந்தியப் படை முன் எப்போதும் கண்டிராத, உலகிலேயே தலைசிறந்த ஒரு கெரில்லாப்போராட்ட இயக்கத்தை, திடமான இலட்சியப் பற்றும், மிகவும் கட்டப்பாடும், ஒழுக்கமும், நல்ல அமைப்புமுடைய ஓர் இயக்கத்தை எதிர் நோக்கவேண்டி இருந்தது. யுத்த முறையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது. இந்தியப் படையின் கௌரவம் கேலிக்கிடமானது.

இருந்தும், விடுதலைப் புலிகளின் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தக் கோரிக்கையை, ராஜீவ் காந்தி நிராகரித்ததுடன், கூடிய விரைவில் போரில் வெற்றியடைய விரும்பினார். தமிழர் தாயகத்தில் தமது பலத்தைக் காட்டியதுடன், புலிகளுக்கெதிரான தாக்குதல்களில் ஒரு லட்சத்துக்குமதிகமான படையினர், பலவகைப் பட்ட சங்கேதப் பெயர்களில் (CODE NAME) தாக்குதல் நடவடிக்கைகளையும் மெற்கொண்டனர். காடுகளில் சிறந்தபயிற்சி பெற்ற அதிரடிப் படையினர், காட்டுப் பகுதிகளில் புலிகளுக் கெதிரான தாக்குதல் களில் ஈடுபடுத்தப் பட்டனர். புலிகளால் தொடுக்கப்பட்ட பலத்த எதிர்த் தாக்குதல்கள் இந்தியப் படைக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் இந்தியப் படைகளின் மனோநிலை பாதிக்கப்பட்டது. பலவகையான தீவர தாக்குதல்களை மேற் கொண்டு, கடுமையான பிராயச்சித்தத்தின் முடிவில், இந்தியா, புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்தது. விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகையும், உயிர்ச்சேதமும் கற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கூடியது.

இந்நிலையிலேயே 1989 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 1 ஆம் திகதி, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் அழைப்பை ஏற்று, இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட, விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் கொழும்பு சென்றது. முரண்பட்டுக் கொண்ட இரு பகுதியினராலும் மேற்கொள்ளப்பட்ட கொழும்புப் பேச்சு வார்த்தை, இந்திய அரசாங்கத்தை (அப்போது ஆட்சியில் இருந்த) பெரிதும் பாதித்தது. வரலாற்று எதிரிகளான விடுதலைப் புலிகளும் - சிறீலங்கா அரசம் சுமுகமான நிலையில் சமாதானப் பெச்சு வார்த்தைகளை மேற்கொண்டது. இலங்கை அரசு சார்பாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியப் படையால் மேற்கொள்ளப்பட்ட போரை அர்த்தமற்றதாகவும், நகைப்புக் கிடமானதாகவும் ஆக்கியது. விடுதலைப் புலிகளின் சாதுர்யமான இராஜதந்திர நடவடிக்கையால் ஒதுக்கப்பட்டு, அவமானப்பட்டு, திக்கு முக்காடிப்போன ராஜீவ் அரசின் நிர்வாகம், இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்கொடி துாக்கியதுடன், விடுதலைப் புலிகளுக் கெதிரான தனது தாக்குதல்களையும் உக்கிரப் படுத்தியது. இந்த நடவடிக்கையானது இந்தியப்படையின் தலையீட்டை உலக நாடுகளின் பார்வையில் கேலிக்குள்ளாகியது.

கொழும்புப் பேச்சு வார்த்தையின்போது விடுதலைப்புலிகள் குழுவினர் இந்தியப் படையின் அட்டூழியங்களைக் கண்டித்ததுடன்,, இந்தியப் படையை ஆக்கிரமிப்புப்படை எனவும் நிரூபித்தனர். ஐ.நா. சாசனங்களில் அமைதிப்படைகள் தொடர்பாக உள்ள மாதிரிகளைக்காட்டி, இந்தியப் படையை அமைதிப் படையாகக் கருதமுடியாது, அது ஓர் ஆக்கிரமிப்புப் படை என வாதிட்டனர்.


அமைதிப்படையும் அதன் கடமைகளும்

அமைதிகாக்கும் படைகளின் மாதிரிகள் குறித்து ஐ.நா. சபை உருவாக்கியிருந்த மரபுகளை உதாரணம் காட்டி, விடுதலைப் புலிகளின் குழு பின்வருமாறு வாதிட்டது.

விவிலிய வேதத்தில் சாத்தானின் கொடுமையினால் "மனிதப்பேரழிவு" ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதுபோல இந்தியப்படையினரால் தமிழீழத்தில் செய்யப்பட்ட அழிவுகளும் "இந்தியப் படை" எனும் 'சாத்தானின் படைகளால்" செய்யப்பட்டகொடுமையாகவே கருதப்படுகின்றன. இந்தியப்படை சாத்தானின் படை போலவும், அழிவை மேற்கொள்ளும் பிசாசுகள் போலவும் இயங்கி, மனித வாழ்க்கையின் மதிப்பை அவமதித்து, மேற்கொண்ட ஈவிரக்கமற்ற கொடுமைகளால் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

முரண்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், சமாதானத்தை ஊக்குவிப்பதற்கும், சர்வதேச





TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
kannan@taxanalyst.ca

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

இப்போது வந்துவிட்டது!

தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்

உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்

இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது.
அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம்.
சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054

நீங்கள் எதிர் பார்த்திருந்த பானம்!

Benefits:

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

பருகும் முறை:

நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூண்
100 ஆயுள்
3 Spoon100 Life

(சுவையானது)

ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்

ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.

மருந்து உணவல்ல, உணவே மருந்து.

Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.

NOW $ 20
~~$ 35~~



1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue

Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call **416-388-5054** / Montreal No: **514-589-7617**
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: **New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market**

சாத்தானின்





SATANIC FORCES
(சாத்தானின் படைகள்) என்ற ஆங்கில நூலின் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளின் தமிழாக்கம் இது.



ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவு கோல்கள் உள்ளன.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்க்கிடையில் பக்கஞ்சாராது, ஓர் அமைதிப் படை நிற்க வேண்டும், மோதல்கள் ஏற்படும் பகுதிகளில் அமைதியை மீண்டும் நிலை நாட்டுதல், அல்லது அதனைப் பேணுவதற்கு உதவுவதே அமைதிப் படையாகும்.

அமைதி காக்கும் பணி என்பது மோதலைக் கட்டுப்படுத்தலாகும். ஐ.நா. சபை மரவில் ஓர் அமைதிகாக்கும் படைக்கு வழங்கப்படும் ஆணை என்ன வென்றால், மோதல்நிறைந்த நிலைமையை மோசமடையாது தடுத்தல் என்பதும், சமாதானமும், சகஜநிலையும் ஏற்படுவதற்கு வேண்டிய சூழ் நிலையை உருவாக்குதலுமே.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இவை அடிப் படையான முதற்தேவைகளாகும். அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் இராணுவத்திற்கு நிர்ப்பந்திக்கும் அதிகாரம் கிடையாது. பலாத்காரத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. அவர்கள் எளிமையான தற்காப்பு ஆயுதங்களையே எப் பொழுதும் தம்முடன் கொண்டு செல்வார்கள், மோதல்களைப் பொறுத்தவரை முக்கிய கொள்கையான நடுநிலைமை வகித்தல், சம்பந்தப்படாதிருதல் என்பனவற்றை ஒவ் வொரு அமைதிப் படையும் கடைப்பிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

போரில் ஈடுபட்டிருக்கும் சக்திகளின் சம நிலையில் எவ்வித மாற்றத்தினையும் ஏற் படுத்தக் கூடியவகையில் அமைதிப்படை நடந்துவிடக்கூடாது.

அத்துடன் உள்நாட்டு விவகாரங்களில் அது தலையிடக் கூடாது. நிலைமைகள் மேலும் மோசமடையாது தடுப்பதே அமைதிக்காக்கும் பணியின் நோக்கமாகும். மோதலில் ஈடுபட் டிருப் போருக்கிடையே உள்ள உறவுகளை நிலைபெறச்செய்வதே இப்பணியின் இலக் காகும்.

இந்தியப்படை அமைதிப்படை அல்ல

அமைதிகாக்கும் மரபு களின் விதிப்படியும், விளக்கப்படியும் இந் தியப் படையை எந்த விதத்திலும், அமை திப்படையாகக் கருத முடியாது. இந் தியப் படை ஒருபோதும் சமாதானத்தைப் பேணவில்லை; அத் துடன் முரண்பாட் டைக் கட்டுப்படுத்த வில்லை. பதிலாக, இந் தியப் படை கொடூர மான போரை நடாத்தி, சமாதானத்தைக் குழப்பி, முரண் பாட்டை மேலும் கூட்டியது. அத்துடன் தமிழர் தாயகத்தில் பலவந்தமாக நிலை நின்றதுடன், அதிகாரத்தைப் பிரயோகித்து, இராணுவ ஆட்சியை உருவாக்கி இருந்தது.

இந்தியப் படை ஒருபோதும் நடுநிலைமையையோ, தலையிடாமையையோ கடைப்பிடிக்க வில்லை. பதிலாக, புலிகளுக்கெதிராகச் செயற் பட்டதுடன், இந் தியச் சார் புக் குழுக்களுக்கு ஆதர வும், ஆயுதமும் வழங்கி, பயிற் சியும் அளித்தது. அமைதி காப் பதற்குப் பதிலாக இந் தியப் படையானது விடுதலைப்புலிகளுடன் மோதியது. இந்தியப் படையானது அமைதிப் படைக்குரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்முறைகளையும், விதிகளையும் முற்றுமுழுதாக மீறிச் செயல் பட்டது. விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவெனில், தமிழர் தாயகத்தில் நிலை கொண் டிருந் த இந் தியப் படைகளுக் கு, அமைதிப்படைக்குரிய தகுதிகள் எதுவும் இல்லை எனவும், அது ஓர் ஆக்கிரமிப்புப் படையே எனவும் கருதுவதாகும்.

போர் நிறுத்தம்

அரசயில் பதவிகளைப் பற்றிக்கொண்டது தமிழீழ மக்களின் அரசியல் முன்னேற்றப் பாதையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்றே சொல்ல வேண்டும்.

ஆறாவது அரசியல் திருத்தச்சட்டம் என்பது தமிழீழ மக்களின் அரசியல் வளர்ச்சிக்கு ஏற் படுத்தப்பட்டுள்ள பெருந்தடை. 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் 10ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள சிந்தனைச் சுதந்திரத்துக்கு முரணானது. தமிழீழ மக் களின் இறைமைக்கும் தாயகக் கோட்பாட்டிற் கும் முரனானது. மனித சிந்தனைக்கும் உரிமைக்கும் முரணானது.

ஆறாவது சட்டத் திருத்தத்தின் அபாயங்கள்

ஆறாவது திருத்தச் சட்டத்தின் இனனொரு

சுயநிர்ணய உரிமையும்

11 ஆம் பக்கத் தொடர்ச்சி) யேயிருந்தனர். இக்கால கட்டத்தில் நிறைவேற்றப்பட்ட எந்தச்சட்டத்தை யும் தமிழீழத்தில் அமுல் செய்ய அரசிற்கு உரிமை கிடையாது. தமிழீழ மக் களும் இவற் றிற் குக் கீழ்ப் படியத் தேவையில்லை.

கூட்டணியும் தமிழ்க் குழுக்களும் மீண்டும் பாராளுமன்றம்

1988ல் வீரம் காட்டி பாராளுமன்றத்திலிருந்து வெளியேறிய கூட்டணியினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். காரரும் 1988ல் 6வது திருத்தம் அமுலில் இருக்கத்தக்கதாக அத்திருத்தச் சட்டத்தின் கீழான சத்தியப் பிரமாணமும் செய்துகொண்டு பாராளுமன்ற; மாகாணசபை

போர்முனையில் புலிகளது உறுதி மிக்க, உக்கிரமான தாக்குதல்களும், கொழும்புப் பேச்சு வார்த்தையின் போது கையாண்ட இராஜதந்திர நடவடிக் கைகளும், இறுதியாக இந் தியப் படைக் கும், தமிழ்ப் புலிகளுக்கும் இடையே ஒர போர் நிறுத்தத்தை தோற்று வித்ததுடன், எமது தாயகத்திலிருந்து இந்தியப் படை வெளியேறுவதற்கும் வழி செய்வ தாயிற்று.

இந்தியப்படையால், அமைதியின் போர் வை யில் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக் கப்பட்ட போர்க் கொடுமைகள் உலகத்தின் கண்முன் தெரியப்படுத்த வேண்டியது எமது கடமையும், பொறுப்புமாகும். இக் கடமைப் பாட்டில் "சாத் தானின் படைகள்" என்ற இந்த நூல் மிகமுக்கிய பங்களிக்கின்றது.

சாத்தான் ஒரு தியசக்தி

இந்திய ஆக்கிரமிப்புப்படை இங்கு புரிந்த மிகக் கொடிய செயல்களை விவிலிய நூல் குறிப் பிடும் சாத் தானுடன் தொடர்பு படுத்துவது வெகு பொருத்தமே. மனிதர் களை அழிக்கும் ஒரு தீய சக் தியையே சாத் தான் என் னும் கருத் துருவம் குறித் து நிற்கிறது. இந்தியப்படை சாத்தானின் படை போன்று நடந்து கொண்டது. மனித உயிர் களை அறவே பொருட்படுத்தாது ஆயிரக் கணக்கான அப் பாவிகளின் உயிரை பிசாசு களைப் போல பறித் து அழிவை ஏற்படுத்தியது. ஒரு சிறு தேசிய இனம் அனுபவித்த மா பொரும் துயரத்தை ஆதாரங்களோடு இந்தத் தொகுப்பு ஆவண வடிவத் தில் கரும் ஒரு துணிகர முயற் சி எனலாம். இத்தனைக்கும் இச்சிறிய தேசிய இனம் இழைத்த ஒரேயொரு குற்றம், சிங்கள ஆயுதப்படைகள் மேற் கொண்ட இன அழிப்பு முயற்சிகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள் ளவும், அமைதி யைத் தேடியும் இந்தியாவின் உதவியை நாடியதுமேயாகும்.

அமைதிகாக்கும் பணி என்ற "சாக்குப் போக்கில்" எமது தாயகம் மீது படையெடுத்த இந்தியத் துருப்புக்கள் விட்டுச் சென்ற மரண மும், அழிவும் நிறைந்த துயர்தோய்ந்த கதை, சிங் களப் படையினர் புரிந்த அட்டூழியங் களையும் விட, மிக மிருகத்தனமானது. இந்தியப் படையினருடன் டில்லி அரசாங்கமும் உடந் தையாக இருந் து ஒத்துழைத்ததன் பயனாக தாம் புரிந்த அட்டூழியங்கள் பற்றிய தகவல்கள் உலகிற்கு எட்டுவதைத் தடுப்பதில், மோசடி மிகக் முறைகளைக் கையாண்டனர். சர்வதேச மனித உரிமைகள், சங்கங்கள், தமிழீழத்திற்கு விஜயம் செய்து நேரடி விசார ணைகளை நடாத் துவதற் கு அனுமதி வழங்க, இந்திய அரசாங்கம் அறவே மறுத் தது.

தொடர்பு சாதனங்கள் தடை

இந்திய ஆக்கிரமிப்புப்படை உள்ளூர் தொடர் புச் சாதனங்களுக்குத் தடை விதித்து. தமிழ்ப் பத்திரிகையாளர்களைச் சிறையிலிட்டு, ஆக் கிரமிப்புச் செய்யப்பட்ட நிலப்பரப்பிற்குள் உலகத் தொடர்புசாதனங்களைச் சேர்ந்தவர் கள் வருவதையும் தடுத்தது.

அத்துடன் இந்தியப் படையும் தமிழ் எட்டப்பர் கூட்டமும், குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்.வும், ஈ.என்.டி.எல். எவ்வும் பல தமிழ்ப் பிரமுகர்

முக்கிய ஆம்சம் என்னவெனில், இச்சட்டத் தைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை அரசாங்கம் தான் ஒடுக்க வேண் டுமென்பதில்லை. எந்த ஒரு நபரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய லாம். தனி அரசு நிறுவும் இலட்சியத்தைக் கொண்ட எந்த அமைப் பிற்கும் எதிராக எவரும் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அவ்வாறான வழக்கில் புலிகள் இயக்கத்தின் நோக்கங்களுள் ஒன்ற தனியரசு நிறுவுவது என்று உயர் நீதி மன்றம் பிரகடனப் படுத்தினால், அந்த இயக்கம் தடை செய்யப் பட்டதாகக் கருதப்படும். உயர் நீதி மன்றப் பிரகடனத்துக்குப்பின் அத்தகைய இயக்கத்தின் உறுப்பினர்களாக, அலுவலர்களாகத் தொடர்ந் து இருப்போர் அனைவரும் மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் குற்றவாளிகளாகக் காணப் பட்டு தமது குடியியல் உரிமைகளையும்

களையும், மனித உரிமைகளுக்காக உழைத் தவர்களையும், இந்தியப்படையின் காட்டு மிராண்டித்தனங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த பிரஜைகள் குழுத் தலைவர் களையும் திட்டமிட்டுக் கொன்றனர்.

டில்லி அரசாங்கமும், கொழும்பிலுள்ள அதன் தூதரகமும், பலாலியிலிருந்த இந்தியப்படை அதிகாரிகளும் ஆக்கிரமிப்புப் படைபுரிந்த யுத்தக் குற்றங்களை மூடி மறைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், குற்றவாளிகளை இனங்காணு வதற்கு நாம் எடுத்த அயராத முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகளுக் கான ஐ.நா. ஆணைக்குழுவும் சர்வதேச தொடர்புச் சாதனங்களும், இந்திய அமைதிப் பணியை கிண்டலுக்கும், கேலிக்கும் உள்ளாக்கி, ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் நிலப்பரப்பில் இந்தியா இழைத்த பாரிய மனித உரிமை மீறல்களைக் கண்டித்துள்ளன.

எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஏற்பட்ட இருள்மிக்க ஒரு காலப்பகுதியின் இந்தப் பெரிய ஆவணத்தின் வாயிலாகப் பதிவு செய் வதற் கு உழைத் த தோழர் களின் ஆயராத, நுட்பமான பணியினை நாம் பாராட்டுகின்றோம்.

-விடுதலைப்புலிகள் 15.05.1990 -

[redacted]

அசைவற்ற, அசைவுள்ள ஆதனங்களையும் இழப்பதுடன், மேலும் ஏழு ஆண்டுகளுக்கு குடியுரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டு மத்திய அரசிலோ உள்ளூர் ஆட்சி அரசிலோ அல்லது அரச சார்பு நிறுவனங்களிலோ வாழ்க்கைத் தொழிலிருந்தால் அத்தகைய தொழிலையும் இழப்பர். சுருக்கமாகச் சொன்னால் அவர் நடைப்பிணமாக்கப்படுவர். இத்தகைய பயங் கரமான திருத்தச் சட்டத்தை அரசியல் அமைப் புத் திட்டத்தின் பிரிவாக வைத்துக்கொண்டு தமிழீழ மக்களை "அரசியல் நீரோட்டத்தில்" கலக்க வைப்பது முடியாததாகிவிடும்.

சட்டத்தை நீக்கவிடமாட்டோம் எனக்கூறும் காட்சிகள், தமது துரோகத்தால் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு தாமே பொறுப்பேற்க வேண் டி வரும்.

[redacted]

34 ஆம் ஆண்டு
வீரவணக்கம்




கப்டன் கரன்


கப்டன் மிரேஸ்

கப்டன் பழனி


லெப்.
தவக்குமார்

கப்டன் நளன்


லெப். அன்பழகன்

கப்டன் ரகு


2ஆம் லெப்.
றெஜினோல்ட்

லெப். கேணல் குமரப்பா

லெப். கேணல் புலேந்திரன்

மேஜர் அப்துல்லா


2ஆம் லெப்.
ஆனந்தகுமார்

05.10.1987 அன்று வஞ்சனையாளர்களினின் வலை விரிப்பால்
வீரச்சாவடைந்த பன்னிரு மாவீரர்கள் நினைவ நாள்

விடுதலைப்போர் வரலாற்றில்
விதையான முத்துக்களே!
எதிரிக்கு புதிரான
எம்தமிழ்ப் புலிகளே!
ஆண்டுகள் பல கடந்தும்
மீண்டெழும் எம் இலட்சிய தீயில் - தமிழ்
ஆள்கின்ற செய்தியினை - உமக்கு
அணிவிப்போம் மாலையாக.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

சங்கத்தமிழ்

தீருவில் தீயில்



ஈகைச் சுடர்கள்

தமிழீழ போராட்டத்தின் மூத்த தளபதிகளும் போராளிகளும் இந்திய – சிறிலங்கா சிங்கள அரசுகளின் கூட்டுச்சதியால் கைதாகி கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது எதிரியின் கபட நாடகத்தை அம்பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தில், கொல்லும் சயனைட் வில்லையை மகிழ்வுடன் உண்டு தம் உடல்களை தாயக மண்ணிற்காக உரமாக்கினார்கள்.

இரு தளபதிகளும் மணமாகி மணமாலை வாடு முன்பு தாய், தாரம் இரண்டையும் விட உயிரிலும் மேலான தாயக விடுதலையையும் மக்களையும் நேசித்தவர்கள். இந்நிகழ்வ தமிழீழப் போராட்டத்தின் முக்கியமான திருப்பு முனையாகும். அத்துடன் தமிழீழ போராட்டத் திற்கு உத்வேகம் அளித்து புத்துயிர் பெறச் செய்தது.

29-07-1987 மாலை 6:15 மணிக்கு தமிழீழ தேசத்திற்கு இந்திய இராணுவத்தை ஏற்றி வந்த முதல் விமானம் தரையிறக்கப்பட்டது. 05-10-1987 பிற்பகல் 5:05 மணிக்கு பலாலி இராணுவ முகாமில் புலேந்திரன், குமரப்பா, அப்துல்லா, மிரேஷ், நளன், அன்பழகன், ஆனந்தக்குமார், றெஜினோல்ட், பழனி, கரன், தாஸ், செல்வா, சிவகுமார் ஆகிய 17 போராளி கள் சயனைற் உட்கொண்டனர். இவர்களில் முதல் 11 பேரும் வீரச்சாவைத் தழுவிக் கொண் டனர். ரகு ஆபத்தான நிலையில் இருந்து அடுத்த நாள் வீரச்சாவைத் தழுவிக் கொண் டான். வீரச்சாவைத் தருவிக்கொண்ட புலேந் திரன் மணமுடித்து இரு மாதங்கள்தான் - குமரப்பா மணமுடித்து ஒரு மாதம் - கரன் இரு குழந்தைகளின் தந்தை. உயிர் பிழைத்த ஏனைய ஐவரும் நீண்டகால சித்திரவதை யின் பின் விடுவிக்கப்பட்டனர்.

03-10-1987 அன்று எமது கடற்பரப்பில் இப் பதினேழு போராளிகளும் சிறீலங்கா கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர் கள் தமிழகத்திலிருந்து எமது அலுவலக ஆவணங்களை படகில் ஏற்றி வரும் போதே கைதாகினர். கைதானவர்களில் ஒருவர் புலேந்திரன் என்று தெரிந்ததும், சிறீலங்கா வின் தேசிய புந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலக் முதலி துள்ளிக் குதித்தார். சிறீலங்கா வானொலி புலேந்திரனுக்கு கொலைகாரப்பட டம் சுமத்தி, இவ்வாறான ஒரு பயங்கர குற்றவாளியை கைது செய்துள்ளோம் என பெருமை பேசியது. 'இவர்கள் ஆயுதங்களு டன் காணப்பட்டதாலேயே இவர்களைக் கைது செய்ய வேண்டியேற்பட்டது" என்று நியாயமும் கூறியது.

இவர்கள் பலாலி ஆக்கிரமிப்பு இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி, தலைவர் பிரபா கரன் இந்திய அரசிடம் தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்தார். இது பற்றி 05-10-1987 அன்று தமிழீழத்தில் வெளியிடப் பட்டிருந்தது. "ஆயுதங்களை கையளித்த பின் எமக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போராளிக ளைக் கைது செய்வதும், தடுத்து வைப்பதும் இந்திய – சிறீலங்கா ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானதாகும். எமது போராளிகள் இது வரை எதுவித குற்றமும் இழைக்கவில்லை. குற்றமிழைக்காதவர்களை கைது செய்ய முடி யுமா? ஒரு மீனவத் தொழிலாளி தனது தொழிலைச் செய்ய கடலில் செல்ல உரிமை யைப் போன்றதான செயலைத்தவிர எமது போராளிகள் வேறு எதனைச் செய்தார்கள்?

நமது பிரதேசத்துக் கடலில் நாம் சுதந்திரமாகச் செல்லக் கூடாதா? எமது இந்தச் சுதந்திரம் பறிக்கப்படக்கூடிய ஒன்று என நாம் கருத வில்லை. வெளிநாடு செல்ல விமானத்தில் பறப்பது போன்றே கடலில் படகில் செல்வதற் கான உரிமையும் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

இது போன்றதே நடந்த சம்பவமாகும். இந் தியாவில் உள்ள எமது தலைமைக் காரியால யத்தை மூடிவிட்டு அங்கிருந்த பொருட்களை யும் பிற அவணங்களையும் எடுத்து நம் பிரதேசத்துக்கு கொண்டுவர இந்திய கடற் படையிடம் பாதுகாப்பும், அனுமதியும் கேட் டோம். பலதடவை கேட்டோம். ஆனால் தரப் படவில்லை. எனினும் பொருட்களை எடுத்து வருவது பற்றி இந்திய அரசுக்கு அறிவித்திருந் தோம்.

இந்நிலையில் பொருட்களை இந்தியக் கரை யில் எடுத்து வைத்து விட்டு பின் அவைகளில் ஒரு பகுதியை வள்ளத்தில் கொண்டு வந்து நமது பிரதேசத்தில் இறக்கிவிட்டு மீண்டும் மீதிப் பொருட்களை எடுத்து வர வள்ளத்தில் சென்றபோதே கைது சம்பவம் இடம்பெற்றது.

தளபதிகள் தற்பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கி வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. இதனை யே தளபதிகள் இருவரும் கொண்டு வந்தனர். ஆனால் சிறீலங்கா அரசின் வானொலி, தொலைதொடர்புச் சாதனங்கள், ஆயதங் களைக் கொண்ட வந்ததாகப் பிரச்சாரம் செய்கின்றன.

ஆயுதங்களை ஒப்படைத்த பின் எமது பாது காப்புக்களை இந்தியப்படையிடம் ஒப்படைத் தோம். எம்மை யாராவது கைது செய்வதை தடுக்கவேண்டியவர்கள் அவர்களே. எமக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களும் அவர் களே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. இவ்வாறு நிலைமை இருக்கும் போது சிறீலங்கா அரசு எம்மைக் கைது செய்யும் கட்டத்தில் இந்தியாவே எம் மை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கடமைப் பாட்டுக்குரியது. தவறின் அது ஆபத்துக்குரியா தாகும்.

தலைவர் அவர்களது வேண்டுகோளானது அலட்சியம் செய்யப்பட்டது. கைதானவர்களை கொழும்புக்கு கொண்ட செல்வது பற்றி இரு அரசுகளும் ஆராய்ந்தன.

இந்திலையில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு தலைவர் அவர்களால் ஒரு செய்தி அனுப்பப்பட்டது.

இச்செய்தியை சிறீலங்கா இந்திய தூதுவரான டிக்ஷிற்றுடன் ஆலோசித்த ராஜீவ். பின்னர் டிக்ஷிற் ஊடாக சில நிபந்தனைகளை உள் ளடக்கிய தனது செய்தியை அறிவித்தார். அச் செய்தியில், "புலிகளுடனான போரில் கைதாகி, புலிகளின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக் கும் சிறீலங்கா இராணவத்தினர் விடுதலை செய்யப்பட வேண்டும். ஜே.ஆர். விரும்பிய வாறு இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனும் நிபந்தனைகள் உட்பட்ட வேறு சில நிபந்தனைகளும் அடங் கியிருந்தன.

இவ் நியாயமற்ற நிபந்தனைகளை விடு தலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உறுதித் தன்மையை உலகிற்கு எடுத்தியம்பியது.

"இது பேரங்களுக்கு மசியாது, எனவே இதை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இல்லையேல் இந்தியாவின் பிராந்திய நலனைப் பேணமுடியாது!" என்ற முடிவுக்கு வந்தது இந்திய அரசு. அதன் முதற்கட்ட பலி யாக கைதான 17 விடுதலைப் புலிகளையும் தேர்ந்தெடுத்தது.

"தளபதிகள் இருவரும் அண்மையிலேயே திருமணமானவர்கள். எனவே வாழ்வில் பற்றுக் கொண்டிரப்பார்கள். இவர்களிடம் இந் திய பிரதமரின் நிபந் தனைகளைக் கூறுவோம். இவர்கள் கைதிகளை விடுவப் பதற்கு சம்மதித்தால், அதனைப் பிரச்சாரப் படுத் துவோம்" எனக் கருதிய இந் திய இராணுவத்தினர் முதலில் புலேந்திரனை அணுகினர். பிரதமர் ரஜீவின் நிபந்தனை களை தெரிவித்தனர்.

அதற்கு புலேந்திரன், "சிறீலங்கா இராணுவத் தினர் எம்மோடு யுத்தத்தில் ஈடுபட்ட வேளை யில் யுத்தக் கைதிகளாகக் கைது செய்யப்பட் டவர்கள். நாம் சமாதான ஒப்பந்தத்தின் பின் கைது செய்யப்பட்டவர்கள். எனவே இவ் வரண்டையும் ஒப்பிடமுடியாது. தமிழீழ இலட் சியத்திற்காகப் போராடும் எம்மை வைத்து இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேரம் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது" என திட்டவட்டமாகத் தெரிவித்தார் - (ஈழமுரசு 06.10.1987).

இந்திய – சிறீலங்கா அரசுகள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டன.

05.10.1987

அன்று மிக விரைவாகச் சம்பவங்கள் நடந் தன. தென்பிராந்தியத் தளபதி திபேந்தர் சிங் பின்பு இந்திய தூதர் டிக்ஷிற் சிறீலங்கா ஜனாதிபதியுடன் பேசுவதாகவும், விரைவில் சுமுகமான முடிவு வரும் என்றும் தெரிவித் தார்.

புலேந்திரன் தலைவருக்காக தனது இறுதிக் கடிதத்தை வரைந்தார். அதே போல் குமரப்பா வும் தனது இறுதிக் கடிதத்தை எழுதினார். ஏனைய போராளிகளும் கூட்டாக தமது இறு திக் கடிதத்தை வரைந்தனர்.

மூன்று கடிதங்களினதும் சராம்சமும் ஒன்று தான். தம்மைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்றால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளப் போவதாக அறிவித்திருந்தனர்.

விடுதலைக்கான காலக்கொடு 7:00 மணி யிலிருந்து 10:00 மணியாகியது. பின்பு பிற் பகல் 2:00 மணியாகியது. ஆயினும் 2:00 மணி கடந்த பின்பும் பன்னிரு வேங்கை களும் விடுதலை செய்யப்படவில்லை.

தலைவர் குறிப்பிட்டது போல் சிங்கள இன வாதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கும் நேரம் நெருங்கியது. பிற்பகல் 5:05 மணிக்கு நாம் அவர்களை இழந்தோம். வீரச்சாவெய்தும் இறுதி மணித்துளிவரை அவர்கள் போரா டினார்கள்.

சயனைற் உட்கொண்டவர்கள், உயிர் பிரிந்த பின்னர் கூடத் தாக்கப்பட்டார்கள். புலேந்திரன் உடலில் தெரிந்த காயங்கள் இன்னொரு "வெலிக்கடையை" ஞாபகப்படுத்தியது. காயத் துடன் காணப்பட்ட சடலங்களில் ரகுவினு டையதும் ஒன்று.

வல்வை – தீருவில், 07.10.1987 அன்று பன்னிரு வேங்கைளினதும் புகழுடல்கள் வரி சையாக அடுக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு ஆயுத பாணியாக வந்து அஞ்சலி செலுத்தினார் தலைவர் அவர்கள்.

ஒப்பந்தம் உருவாகிய சில நாட்களில் தமிழகத் தைச் சேர்ந்த திரு. பழ. நெடுமாறன் அவர் களிடம் "இந்நிலையில், தமிழீழகோரிக்கை பற்றி ஈழத்தமிழ் மக்களின் கருத்தென்ன?" என்று கேட்டனர் பத்திரிகையாளர்கள். அதற்கு அவர், "அது அணைந்துவிடவில்லை – நீறு பூத்த நெருப்பாக இருக்கின்றது. அது எப் போதும் பற்றிக் கொள்ளலாம்" என்றார்.

ஆம், நீறு பறந்தது! நெருப்பு பற்றிக் கொண்டது.

தமது பிள்ளைகளக்கான இறுதிக் கடன் களைச் செய்வதற்காக நாற்காலிகளில் வரிசை யாக இருத்தப்பட்ட பன்னிரு வேங்கை களினதும் பெற்றோர்களைப் பார்க்கையில் எமது மக்களின் வயிற்றில் பற்றியெரிந்த நெருப்பு – நான்கு அடி உயரமான சிதையில் பன்னிரண்டு மாவீரர்களையும் வரிசையாக அடுக்கி வைத்து மூட்டிய பெரு நெருப்பு – திரு. நெடுமாறனின் கூற்றை நிரூபித்தது.

நன்றி: "தீருவில் தீ", வெளியீடு மாவீரர் பணிமனை 1992


முதல் பெண் மாவீரர்
2ம் லெப்.
மாலதி
பேதுரு சகாயசீலி
04.01.1967 - 10.10.1987

பெண்ணினத்தைப் பெருமையுறச் செய்யும்

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்!



விடுதலைக்காய் விழுத்தெழுந்த பெண்ணினம்

ஒப்டோபர் 10, இந்நாள் தமிழீழப் பெண்களை தலை நிமிர்த்தச் செய்யும் ஓர் உன்னத நாளாக அமைகிறது. உலகின் நான்காவது பெரிய வல்லரசு என வர்ணிக்கப்படும் இந்திய இராணுவத்தை எதிர்த்து ஆயுதமேந்தி நின்று போராடி – தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே முதல் முதல் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் நினைவு நாளான ஒக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

காலங்காலமாக நிலப்பிரபுத்தவ அமைப்பு முறையாலும் முதலாளித்துவ அமைப்ப முறையாலும் அடக்கப்பட்டும், இழிவுபடுத்தப்பட்டும் வந்த பெண்கள், உலகப் பெண்களுடன் ஒன்றினைந்து அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாளாகிய மார்ச் 08, அன்றே உரிமைக்குரல் எழுப்பி நின்றார்கள்.

ஆனால் ஒப்பீட்டளவில் உலகப்பெண்கள் எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத – தியாகத்தின் உச்சமான தற்கொடைத் தியாகத்தைப் புரிந்து வரும் பெண்களைப் பெற்ற எமது தமிழினம் முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் நினைவு நாளை எழுச்சி நாளாக ஏற்றுக்கொள்வதில் பெருமையடைகிறது.

படைப்பியல் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் பாலியல் வேறுபாட்டை மட்டும் கருத்திற் கொண்ட பெண்ணுக்கு பாலியல் சமத்துவம் மறுக்கப்பட்டு வந்தது. பிறப்பிலிருந்தே ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் இடையே காட்டப்பட்ட பராமரிப்பு வளர்ப்பு முறைகள் பெண்கள் ஆண்களை விடவும் தாழ்ந்தவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற உணர்வினை ஊட்டின. பெண் என்பவள் ஒரு காட்சிப் பொருளாக, போதைப் பண்டமாக, இனப்பொருக்கம் செய்யும் ஓர் இயந்திரமாக மட்டுமே பார்க்கப்பட்டாள்.

மதங்கள், மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், இலங்கியங்கள், புராண இதிகாச கர்ணபரம்பரைக் கதைகள், திரைப்படத் தொடர்புச் சாதனங்கள் என எல்லாமே பெண்களை இழிவு படுத்தின. பெண்களிடையே தோன்றிய முன்னேற்றத்துக்கான, புரட்சிகரமான, சமூகமாற்றத்திற்கான முனைப்புகள் அனைத்தையும் கற்பு என்கின்ற பார்வை கருவறுத்தது. இன்று தமிழீழத்தைப் பொறுத்த வரை பெண்கள் தம் மீதான பல்வேற அடக்குமுறைகளைத் தகர்த்தெறிந்து புரட்சியின் உச்சத்தை தொட்டு நிற்கின்றார்கள். அதி உன்னதமான தியாகங்களைப் புரிகிறார்கள்.



2ம் லெப்.மாலதி

புற உலகம் தமிழீழத்துப் பெண்களை வியப்புடன், விழிகளை விரித்துப் பார்க்கின்றது. இந்தப் பெருமை மிகு நிலையை தமிழீழப் பெண்ணினத்திற்கு உண்டாக்கியவர் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தான். அவரது வழிகாட்டலில் தான் தமிழினம் குறிப்பாக தமிழீழத்துப் பெண்கள் தலை நிமிர்த்தி நிற்கின்றார்கள். தலைவன் ஊட்டும் துணிவில், தன்னம்பிக்கையில் எத்தனையோ சாதனைகள் இம்மண்ணில் பிறப்பெடுக்கின்றன!



பெண்கள் அதீத திறமைகளையும், ஆளுமைகளையும் தம் முள்ளே வைத்திருந்தும் தனம் என்ற அம்சமே இம்சித்து வந்தது. பெண்களை அறிவும் ஆணை ஒத்த அந்தஸ்தும் கொண்டிருந்த போதும் சீதனம் பெண்ணை குறைந்தவளாகவே கணித்தது. ஆனால் இன்று பெண்ணை இழிவுபடுத்தி வந்த சீதனத்தை இல்லாதொழிக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் பெண்கள் தலைமைத்துவப் பண்பு மிக்கவர்களாகத் திகழ்கின்றார்கள். உலக சமுதாயம் உதாரணம் காட்டுமளவுக்கு பெண் இங்கே விழிப்புணர்வு பெற்றிருக்கின்றாள். பூரணமான வழிப்புணர்வு எனச் சொல்லமுடியாவிட்டாலும் பல்வேறு விடயங்களில் பெண்ணின் விழிப்பு நிலை குறிப்பிடத்தக்கதாகவே அமைகின்றது.

பெண்ணின் விடுதலை என்பது ஆணாதிக்கக் கருத்தாதிக்கத்திலிருந்தும் ஏனைய அடக்கு ஒடுக்கு முறைகளில் இருந்தும் விடுபடுவதாகும். முதலில் பெண்கள் அக விடுதலை பெற்று புரட்சிக்குத் தயாரான தற்துணிவைப் பெற்றக் கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் சமூக உடற்கூறின் இரு அம்சங்கள். எனவே பரஸ்பர புரிந்துணர்வோடு விடுதலை முனைப்புப் பெற வேண்டும்.

உலகில் பெண்கள் விமானிகளாக, விஞ்ஞானிகளாக, நோபல் பரிசு பெற்ற இலக்கியவாதிகளாக சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், உலகின் எந்தவொரு பகுதியிலும் நடந்தேறாத தியாகம் தமிழீழத்திலே நடக்கின்றது. இதற்காக தமிழீழத்துப் பெண்ணினம் பெருமையடையவேண்டும். தேசிய விடுதலைப் பணியிலே கைகோர்த்து பணிபுரிந்து, எமது தேசத்தின் விடிவை விரைவுபடுத்த வேண்டும். பல்துறை சார் கல்வியறிவிலே உயர்ந்து, பொருளாதார ரீதியில் யாரையும் சாராது சொந்தக் காலூன்ற நின்று முன்னேற வேண்டும்.

தமிழீத்துப் பெண்கள் மிகவும் கொடூரமான இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றார்கள். எதிரியின் பாலியல் பலாத்காரம் எமது பெண்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. எதிரி எம் மீது பிரயோகிக்கும் சகல வன் முறைகளுக்கும் எதிராக உறுதியுடன் போராட வேண்டியவளாகப் பெண் திகழ்கின்றாள். போராட்டத்தின் மூலமே தன் வாழ்வை உறுதி செய்துகொள்ள வேண்டியவளாகின்றாள்.

நன்றி – சுதந்திரக்கீற்று



பருவநிலை மாற்றம்: கார்பன் உமிழ்வை குறைக்கச் சொல்லும் ஐ.நா. - நிலக்கரி உற்பத்தியை பெருக்கும் இந்தியா

நவீன் சிங் கட்கா - பிபிசி உலக சேவையின் சுற்றுச்சூழல் செய்தியாளர், 21 செப்டெம்பர் 2021



நிலக்கரி சுமக்கும் பெண்

கடந்த வாரம் இந்தியாவுடனான புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை அமெரிக்க காலநிலை தூதர் ஜான் கெர்ரி வெற்றிகரமாக அறிவித்தார். ஆனால் இந்தியா தனது நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்கை அடைய என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பது குறித்த தெளிவு அதில் இல்லை.

கெர்ரி காலநிலை குறித்து அமெரிக்காவின் தலைமையை மீண்டும் உறுதிப்படுத்தும் ஒரு முயற்சியாக, சுற்றுச் சூழலுக்குப் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் நிறு வனங்களை, மிகப்பெரிய கார்பன் குறைப்பு இலக்குகளை ஒப்புக் கொள்ள வைக்க முயற்சித்து வருகிறார்.

இருப்பினும், சர்ச்சைக் குரிய மற்ற விவகாரங்களிலிருந்து கால நிலை மாற்றத்தைத் தனிமைப் படுத்தும் இவரது முயற்சியை சீனா எதிர்த்தது. "பாலைவனமாக உள்ள சீன - அமெரிக்க உறவில் இந்தக் கால நிலை ஒத்துழைப்பு ஒரு "சோலை"-யாக இருக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது. ஆனால் "சோலை" "பாலைவனத்தால்" சூழப்பட்டிருந்தால், அந்தச் "சோலை"யும் விரைவில் பாலைவனமாகவே மாறும்" என நிதி அமைச்சர் வாங் யி, கெர்ரியிடம் கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதன்முதலில் ஏப்ரல் மாதத்தில் காலநிலை நடவடிக்கை மற்றும் நிதி திரட்டல் உரையாடல் (CAFMD) தொடங்கப்பட்டது குறித்து இந்தியா மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. இது, இந்தியா தனது 450 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்கை அடைய உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆனால், இந்தியா தனது கார்பன் உமிழ்வைத் தேவையான அளவுக்குக் குறைக்க எப்படித் திட்டமிட்டுள்ளது என்பது குறித்து இதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

நிகர பூஜ்ஜிய உமிழ்வு என்பது பசுமையில்ல வாயு உமிழ்வை முடிந்தவரை குறைத்து பின்னர், மரம் நடுதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம், வளிமண்டலத்தில் இருந்து மீதமுள்ள கார்பன் வெளியீட்டளவை உறிஞ்சுவதன் மூலம், உமிழ்வுகளைச் சமநிலைப் படுத்துவதாகும்.

உலகின் மிகப்பெரிய கார்பன் உமிழும் நாடான சீனா, ஏற்கனவே 2060க்குள் கார்பன் சமநிலையை எட்டும் என்றும், அதன் உமிழ்வு 2030க்கு முன்பு உச்சத்தை எட்டும் என்றும் அறிவித்துள்ளது. இத்தகைய அறிவிப்



புகளுக்கு மத்தியில், சீனா புதிய நிலக்கரி ஆலைகளை உருவாக்கியது விமர்சனத்துக்குள்ளானதும் குறிப்பிடத் தக்கது.
புபேந்தர் யதவ் உடன் ஜான் கெர்ரி

உலகின் இரண்டாவது மிகப்பெரிய கார்பன் உமிழும் நாடான அமெரிக்கா, கார்பன் நிகர பூஜ்ஜிய இலக்கை அடைய 2050ஆம் ஆண்டை காலக்கெடுவாக நிர்ணயித் துள்ளது, மேலும் 2035ஆம் ஆண்டுக்குள் தனது மின் துறையை கார்பனற்றதாக மாற்றப்போவதாகவும் கூறியுள் ளது.

ஆனால் உலகின் மூன்றாவது பெரிய உமிழ்வைக் கொண்ட இந்தியா நிகர பூஜ்ஜிய இலக்கை எட்ட எந்தக் காலக் கெடுவையும் அறிவிக்கவில்லை. தவிர, பாரிஸ் ஒப்பந்தத்தின் படி, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப் பட்ட கார்பன் குறைப்பு இலக்குக்கான திட்டத்தையும் சமர்ப் பிக்கவில்லை.

ஒப்பந்தத்தில் பங்கேற்றுள்ள 191 நாடுகளில், இதுவரை 113 நாடுகள் மட்டுமே திருத்தப்பட்ட உறுதிமொழிகளை அறி வித்துள்ளன என்று ஐ நா தெரிவித்துள்ளது.

இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட காலநிலைத் திட்டங்களின் பகுப்பாய்வில், 2030ஆம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வு 16% உயரும் என காட்டுகிறது. இது தொழில் புரட்சிக்கு முந்தைய நிலைகளை விட 2.7C (4.9F) வெப்பநிலை உயர்வுக்கு வழிவகுக்கும்.

பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் உலகளாவிய சராசரி வெப்பநிலை உயர்வை இரண்டு டிகிரிக்கு குறைவாக வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் ஆபத்தான காலநிலை மாற்றத்தைத் தவிர்க்கும் நோக் கில், தொழில் புரட்சிக்கு முந்தைய காலத்தை விட 1.5 டிகிரி உயர்வைப் பராமரிக்க முயற்சிக்கிறது.

ஏற்கனவே 1.1 டிகிரி வெப்பமடைந்துள்ளதாகவும், பாரிஸ் இலக்கு எட்டப்படுவதற்கு, 2030 ஆம் ஆண்டுக்குள், உலக கார்பன் உமிழ்வை 45% குறைக்க வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக் கிடையிலான குழுவின் (ஐபிசிசி) சமீபத்திய அறிக்கை, வெப்பநிலை அதிகரிப்பால் பூமியின் சில காலநிலை அமைப்புகள் ஏற்கனவே அபாயகட்டத்தை எட்டியிருக் கலாம் என்று எச்சரித்துள்ளது.

கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள முக்கியமான கால நிலை உச்சி மாநாடான COP26 க்கு முன்,



தேசியரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு, Nationally Determined Contribution (NDCs) எனப்படும் புதுப்பிக்கப்பட்ட திட்டங் களை உறுப்பு நாடுகள் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதில் அனை வரது கவனமும் இந்தியாவை நோக்கி இருப்பது குறிப் பிடத்தக்கது.
இந்தியாவில் பெய்த அசாதாரண மழை


கடந்த வாரம் தனது டெல்லி வருகையின் போது, கெர்ரி இந்தப் பிரச்னையில் இந்தியாவின் மீதான சிறப்பு கவனத் தை, குறைந்தபட்சம், பொது வெளியில், வெளிப்படுத்த வில்லை. ஆனால் அவர் நிகர பூஜ்ஜிய இலக்கை வலியுறுத்தினார்.

"நண்பர்களே, புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன் படுத்துவது மட்டுமல்லாமல், நிகர பூஜ்ஜிய இலக்கை எட்டத் தேவையான புதிய தொழில்நுட்பங்களை நாம் உரு வாக்கி, செயல்படுத்தி, மேம்படுத்தவும் வேண்டும் என் பதை நான் வலியுறுத்துகிறேன்" என அவர் CAFMD துவக்க நிகழ்ச்சியில் கூறினார்.

அந்த நிகழ்ச்சியின் போது, இந்தியாவின் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், நிகர பூஜ்ஜிய இலக்கு குறித்தோ, அல்லது புதிய கார்பன் குறைப்பு இலக்கு குறித்தோ குறிப்பிடவில்லை என்பதும் கவனிக் கத்தக்கது.

மாறாக, இந்தியாவின் தற்போதைய காலநிலைத் திட் டத்தை அவர் நியாயப்படுத்தினார். "இந்தியாவின் கால நிலை நடவடிக்கைகள் பல சுயாதீன மதிப்பீடுகளில் முன்னிலை பெற்றுள்ளன... இந்தியாவின் NDC இரண்டு டிகிரி செல்சியஸ் இணக்கமாக மதிப்பிடப்பட்டுள்ளது." என்றார்.

2030க்குள் தன் கார்பன் உமிழ்வை 2005ல் இருந் ததை விட 33 - 35% வரை குறைக்க இந்தியா உறுதி பூண்டுள்ளது, எதார்த்தத்தில் இந்தியா அந்த இலக்கை கடக்கவிருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள்.



வெப்பநிலை உயர்வு கணிப்பு வரைபடம்

நாடுகள் அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளில், நாடுகளின் கார்பன் குறைப்பு உறுதிமொழிகளுக்கும் பாரிஸ் காலநிலை இலக்கை அடைய என்ன தேவை யானதற்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பதாக விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

எனவே குறுகிய கால இலக்காக, கூடுதல் கார்பன் குறைப்பும் நீண்ட கால இலக்காக, நிகர பூஜ்ஜிய உமிழ்வும் இருக்க வேண்டியது அவசியமாகிறது.


ஆனால் வளர்ந்த நாடுகளைப் போல அதிக கார்பன் குறைப்பு நடவடிக்கைகளை, இந்தியா போன்ற வளரும் நாடுகளிடம் எதிர்பார்க்கப்படக்கூடாது என்று இந்தியா தனது வாதத்தை முன்வைக்கிறது. ஏனெனில், இந்தி யா இன்னும் வறுமையை எதிர்த்துப் போராடும் நாடாகவே இருப்பதாகவும், தன் எரிசக்தி தேவைக்கு புதைபடிவ எரிபொருட்களையே பெரிதும் நம்பியிருப் பதாகவும் கூறுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, குறிப்பாக சூரிய மின்சக்தித் துறையில் பெரிய அளவில் முன்னேறிச் செல்லும் அதே நேரத்தில், கொரோனாவுக்குப் பிந்தைய பொருளாதார மீட்சியின் ஒரு பகுதியாக, நிலக்கரி உற்பத்தியை கணிசமாக அதிகரிக்கும் திட்டங்களையும் இந்தியா அறிவித்துள்ளது.

"கால நிலை குறித்த கூட்டத்தில் ஜான் கெர்ரியைச் சந் திப் பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. காலநிலை நடவடிக் கை மற் றும் காலநிலை நீதி குறித் த விவாதங்களைத் தொடர்ந்தோம்" என்று கடந்த வாரம் திரு கெர்ரியைச் சந்தித்த பிறகு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ட்வீட் செய்தார்.

தனது பயணத்தின் முடிவில், கெர்ரி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த இந்தியாவின் சாதனையைப் பாராட் டினார், ஆனால் நிகர பூஜ்ஜிய இலக்கு மற்றும் உமிழ்வு - குறைப்பு இலக்கு ஆகியவற்றை எட்ட இந்தியா பூண் டுள்ள உறுதி குறித்து எங்கும் குறிப்பிடப்படவில்லை.

"COP26- கூட்டத்துக்கு செல்வதற்குள் ஏதோ ஒன்றை நிச்சயமாக இந்தியா அறிவிக்கும் என உறுதியாக, பல நாடுகளிடம் இருந்து இன்னும் அறிவிப்புகள் வெளியாக வில்லை. ஆக நான் கூடுதலாக திருத்தப்பட்ட இலக் குகளை பல இடங்களிலிருந்து எதிர்பார்க்கிறேன்" என்று அவர் கூறியதாக இந்திய செய்தித்தாள்கள் கூறுகின்றன.



சீனா

கெர்ரி நினைத்ததை இந்தியா உண்மையிலேயே நிறைவேற்றினால், சீனா- அமெரிக்கா இடையே இந்த விவகாரத்தில் சுமுகப் போக்கு இல்லாத சூழலில், உலகளாவிய காலநிலை நடவடிக்கையில் மீண்டும் தலைமை வகிக்கும் முயற்சியில் அமெரிக்காவுக்கு அது உதவக்கூடும்.

ஆனால் இந்தியா அவ்வாறு செய்யாவிட்டால், சீனாவும் தன் ஒத்துழையாமையை வெளிப்படுத்தினால் என்ன ஆகும் என்கிற கேள்வி எழுகிறது.

தங்கள் இருவருக்கும் இடையே மோதல்கள் இருந் தாலும், வளர்ந்த நாடுகளை இந்த விஷயத்தில் எதிர்க்க இந்தியா, சீனா கைகோர்க்குமா என்றால் அதற்கு எளிதாக விடை கூற முடியாத நிலை தான் நிலவுகிறது.

ஆனால் இந்தியாவும் சீனாவும் எடுக்கும் முடிவுகள், உலகளாவிய பருவநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நன்றி — பிபிசி தமிழ்



உலக கட்டிடக்கலை வல்லுனர்களால் வடிவமைக்கப்படும் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம்

(13 ஆம் பக்க தொடர்ச்சி...) போன்ற இனப்படுகொலை இனிமேல் உலகின் எப்பகுதியிலும் நடக்காதிருக்கச் செய் யும் செயல் பாடுகளுக் கு உந் துதல் தரும் வகையில் இந்த நினைவுத்தூபி இருக்கும்.

இதற்கமைய "கடைசி இனப்படுகொலை நினைவுச் சின்னம்" என்ற போட்டித் தலைப்பில் கட்டடக்கலை வடிவமைப்பாளர்களுக்கிடையே போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. 3.7 மீட்டர் விட்டம் மற்றும் 5.5 மீட்டர் உயரம் கொண்டதொரு இனப்படுகொலை நினைவுத் தூபி சின் னத்தை கட்டடக் கலை வடிவமைப்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். வெற்றி பெற்றதாகத் தேர்ந்தெடுக் கப்படும் வடிவமைப்பிற்கு 10,000 யூரோ பரிசாகத் தரவும் Bee Breeders அமைப்பு முடிவு செய்துள்ளது. இப்போட் டியின் மூலம் பெறப்படும் ஆகச்சிறந்த வடிவமைப்புகள் கட்டுமானத் திற்காகப் பரிசீலனைக்கு முன்வைக்கப்படும், இதற் காக சர்வதேச அளவில் மதிக்கப்படும் கட்டடக்கலை விற்பன்ர்கள் ஆறுபேர் நடுவர்களாக பணியாற்ற நியமிக் கப்பட்டுள்ளனர்.

போட்டியை நடத்தும் டீநந டீசநநனநசள அமைப்பு ஐரோப்பாவைத் தளமாகக் கொண்டதாக இருந் தாலும், போட்டி வட அமெரிக்கா, ஆசியா உட்பட உலகின் அனைவருக்குமானது. வடிவமைப்பை சமர்ப்பிப்பதற்கு தொழில்முறைத் தகுதி தேவை யில்லை. வடிவமைப்பினை தனியாராக அல்லது அதிகபட்சம் 4 குழு உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களாக இணைந்து உருவாக்கவும் முடியும். பங்கேற்பாளர்கள் சமர்ப்பிக்கும் அனைத்து தகவல் களும் - கடிதப் பரிமாற்றங்கள் உட்பட - ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். போட்டியில் கலந்து கொள்வதற்கு Bee Breeders அமைப்பு நுழைவுக் கட்டணத்தை அறவிடுகிறது. அதைச் செலுத்த முடியாத நிலையில் வடிவமைப்பில் ஆர்வம்கொண்ட யாராவது இருப்பின் contact@tamilgenocidememorial.org என்ற மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவு செய்வதற்கான கடைசித் திகதி 2021 நவம்பர் 12ந் திகதியாகும். போட்டி சம்பந்தமான தகவல் களுக்கு The Last Genocide Memorial / Architecture Competition என்ற இணைப்பிற்குச் செல்லவும்.

The Last Genocide Memorial / Architecture Competition
Bee Breeders

The Last Genocide Memorial, Registration open until November 12, prize fund 10,000 €

நினைவுத்தூபி குறித்த மேலதிக தகவல்களை அறிய விரும்புவோர் www.tamilgenocidememorial.org என்ற இணைப்பக்கத்திற்கு செல்லவும். இவ்முன் னெடுப்புக்கும், இனப்படுகொலைக்கான நினைவுச் சின்னத்தை சிறப்பான முறையிலும் விரைவாக நிறுவ தாயகத்திலும் புலம்பெயர் உறவுகளிடமும் முழுமை யான ஆதரவை அமைப்பாளர்கள் எதிர்பார்க்கின் றார்கள்.



மேலதிக தொடர்புகளுக்கு: 647 8730732
www.tamilgenocidememorial.org
https://architecturecompetitions.com/genocidememorial/

With Best Wishes From

KENNEDY LAW OFFICE

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....

கெனடி சட்ட அலுவலகம்

- ☑ REAL ESTATE LAW காணி, வீடுகள் - வாங்கல், விற்றல், அடமானம்
- ☑ BUSINESS LAW வணிகச் சட்டம்
- ☑ CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
- ☑ FAMILY LAW குடும்பச் சட்டம்
- ☑ IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
- ☑ ODSP APPEALS
- ☑ SMALL CLAIMS
- ☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- ☑ NOTARIZING & COMMISSIONING





W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC


Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com

2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)

WEXFORD
WELLNESS CARE INC.







We treat all car accident injuries!

- ✶ Massage Therapy
- ✶ Physiotherapy
- ✶ Orthopaedic
- ✶ Acupuncture
- ✶ Chiropractic
- ✶ Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

பிரமந்தனாற்றுப் படுகொலை 02.10.1985

02.10.1985 அன்று அதிகாலை வேளை பொழுது புலர்ந்தும் புலராத நிலமை. அதிகாலை வானில் ஓர் உலங்கவானூர்தி முதலில் சுற்றி வட்டமிட்டு சுட்டுக்கொண்டே இருந்தது. அதனைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவை குண்டுகளை வீசவில்லை. இவை மூன்றும் இத்தாலியத் தயாரிப்பான சிறியராக சியாமா செட்டி விமானங்களாகும்.

இந்த வேளையிற் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் தெற்கு எல்லை ஓரமாக வுள்ள காட்டுப்பகுதிக்குள் சிறீலங்கா இராணுவ அணிகள் உலங்கு வானூர்தி மூலமாகத் தரையிறக்கப்பட்டன. தரையிறக்கப்பட்ட படைகள் படிப்படியாக முன்னேறி கிராமத்தினைச் சுற்றிவளைத்து கொண்டன. வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடைபெறுகின்றது எனப் பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்களுக்கு அந்த ஊரைச்சேர்ந்த மயிலர் கந்தசாமி என்பவர் ஒழுங்கைகளுக்கூடாக காட்டுக்குள்ளால் ஆமி வருகிறான் என்று சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டே ஓடி வந்தார். அவர் கூறுவதைக்கேட்டு அக்கிராம மக்கள் விழிப்படைந்தார்கள்.

அந்தச்சம்பவத்தினை நேரில் பார்த்த திருமதி உமாமகேஸ்வரன் கமலாம்பிகை (வயது 45) அன்றையநாள் நடந்த அனர்த்தம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காட்டுக்குள்ளால் ஆமி நடந்து வருகிறான் என்று மயிலர் கந்தசாமி சொல்லக் கேட்டவுடனேயே நான் எனது ஆறு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டக்குள் ஓடிவிட்டேன். எனது கடைசிக் குழந்தை தீபன் அப்போது ஆறுமாதக் குழந்தை. அன்றைய நாள் முழுவதும் எனது பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும்தான் இருந்தார்கள். எந்த உணவும் கிடைக்கவில்லை. முழுநாளும் பட்டினிதான். தாகம் எடுத்தபோது குளம் குட்டைகளில் தங்கி நின்ற தண்ணீரைத்தான் எடுத்துக் குடித்தோம்.

மேற்படி நாளன்று இக்கிராமத்திலிருந்த சிவபாதம் என்பவருடைய கடை கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக் கடையிலிருந்த நகை, பணம். என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்குறித்த சிவபாதத்தின் கடையைக் கொள்ளையடித்த சிறீலங்கா இராணுவத்தினர் அவருக்குப் புலியெனச்சாயம் பூசிக்கைது செய்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். போகும் போது ஓலை வீடுகளுக்குத் தீவைத்துவிட்டுச் சென்றார்கள். பல வீடுகள், பொது மக்களுடைய உடைமைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டன.

அன்றையநாள் ஐந்து உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிங்களச் சிப்பாய்கள் செய்த அடாவடித்தனங்களால் இக் கிராமத்தினைச்சேர்ந்த பலர் புகலிடம் ஏதுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டனர்.

இப்படுகொலை பற்றிய மேலும் சில விபரங்கள்

மேற்படி சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் போது பதின்நான்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் சுட்டும் வெட்டியும் படுகாயப் படுத்தப்பட்டார்கள். பல அப்பாவிப் பொதுமக்கள் ஏறக்குறைய இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொது மக்கள் கிட்டிணர் சிவபாதசுந்தரம் என்பவரினது கடையில் நீண்ட நைலோன் கயிற்றால் கைகள் பின்பக்கமாகப் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை நைலோன் கயிற்றினால் கட்டி வைத்த சிங்களப் படைகள் போதை யேறிய நிலையில் காணப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வந்து கவனித்துக்கொள்வதாகக் கூறிவிட்டு மனிதவேட்டைக்குச் சென்று விட்டார்கள். நல்லவேளையாக ஒரு சிறுவன் கத்தியைக் கொண்டுபோய் அவர்களது கைகள் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றை வெட்டிவிட்டுச் சென்றமையால் அவர்கள் யாவரும் காப்பாற்றப் பட்டார்கள்.

உடன் பிறந்த தம்பியைப் பறி கொடுத்த அக்காவின் துயரம்

மேற்படி 02.10.1985 அன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது தனது உடன்பிறந்த சகோதரனான வாரித்தம்பி பாக்கிய நாதன் என்பவரைப் பேரினவாதக் கொடுமைகளுக்குப் பறிகொடுத்த அவரது சகோதரியான திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) என்பவர் இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

சம்பவநாள் காலை வேளை தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் எனது வீட் டைச் சுற்றி வளைத்தார்கள். எனது கணவர் அப்போது அங்கே இருக்க வில்லை. எனது தம்பியார் தான் அங்கே இருந்தார். அவருக்கு அப்போது இருபத்தொரு வயதுதான் இருக்கும். எமது வீட்டைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவத்தினர் முதலில் எங்கள் எல்லோரையும் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே நாங்கள் நின்றோம். எங்கள் வீட்டக்குள் தாங்கள் தேடுதல் மேற்கொள்ளப்போகின்றோம் என்றார்கள். அவ்வாறு சொல்லியவாறே எங்கள் வீட்டக்குள் அடாவடித்தனமாக நுழைந்தார்கள். எனது தம்பியின் இரு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டினார்கள். வீட்டுக்குள் வந்தவர்களிற் சிலர் நான்றாகத் தமிழிற் கதைத்தார்கள். இவர்களுள் ஒரு வெள்ளைத் தோலுடைய நன்கு உயரமான தோற்ற முடைய ஒருவரும் காணப்பட்டார். அவர் ஒன்றுமே பேசவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாக இவதானித்தபடி இருந்தார். அன்றைய நாள் அவரை வேறு பல தமிழ் மக்களும் கண்டிருக்கிறார்கள். அவரைப் பொதுமக்கள் மொசாட் என்று அழைத்தார்கள். மொசாட் என்றால் என்னவென்று எனக்கு முதலில் விளங்கவில்லை. பின்னர்தான் மொசாட் என்பவர்கள் வெளிநாட்ட வெள்ளைக்காரர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

சிறீலங்காப் படையினர் செய்த கொடுமைகள்

மேற்குறித்த திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) தொடர்ந்து கூறுகையில்,

மேலும் சிறீலங்கா இராணுவத்தினர் எனது தம்பியிடம் துவக்கைக் கொடுத்துப் படமெடுத்தார்கள். வேறு சில சிறீலங்கா இராணுவத்தினர் உலங்குவானூர்திக்கு முன்னால் எனது தம்பியை நிறுத்தி வீடியோப் படம் எடுத்தார்கள். எனது தம்பிக்குக் காலால் உதைத்தார்கள், அடித்தார்கள். எனது தம்பிக்கு அடிக்கவேண்டாம் என்று நான் கதறி அழுதேன். அவரை எல்.ரி.ரி.இ என்று சொல்லி அடித்தார்கள். நான் இல்லை அவருக்கும் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சொல்லி அழுதேன். அவர்கள் என்னிடம் எனது தம்பியை எல்.ரி.ரி.இ என்று சொன்னால் விட்டு விடுவதாகச் சொன்னார்கள். நான் அவர்களிடம் இல்லாத ஒன்றைச் சொல்லமாட்டேன் என்றேன். அவர்கள் எனது தம்பியை உதைத்துக் கொண்டும், அடித்த படியும் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் பின்னால் அழுதுகொண்டு போனேன். சிறீலங்காப்படையினர் என்னை வழிமறித்த அடித்து உதைத்துத் தள்ளி விழுத்திவிட்டார்கள். என்னால் தொடர்ந்து செல்ல முடிய வில்லை. இந்தவேளை எனது கணவர் எனது வீட்டில் இருக்க வில்லை. அவர் புளியம்பொக்கணைக்குச்சென்றுவிட்டார். சிங்கள இராணுவத்தினர் எனது வீட்டைத் தீமூட்டி எரித்தார்கள். இவற்றைக் கேள்விப்பட்ட கணவர் ஊருக்கு வந்தார். அக்கால கட்டத்தில் முல்லைத்தீவு நகரில் முகாமைத்திருந்த சிங்கள இராணுவச் சிப்பாயகள் தான் எங்கள் வீட்டைக் கொளுத்தினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதோடு, எனது தம்பியையும் அவர்கள் இழுத்துச் சென்றமையால் அங்கு போய் எனது தம்பியைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர்கள் தாம் எங்களுடைய ஊருக்கு வரவில்லை என்றும் இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மறுத்து விட்டார்கள்.

இதன் பின்னர் நான் சிறீலங்காச் சிப்பாய்கள் எனது தம்பியைக் கொன்றிருப்பார்கள் என்று எண்ணிக் காட்டுப் பக்கங்களில் அவரைத்தேடினேன். இச்சம்பவம் இடம்பெற்று ஆறாம் நாள் தான் எனது தம்பியின் இறந்த உடலைக் காட்டுப்பக்கம் கண்டேன். அவரது உடலில் பலத்த கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. கைகள் பின்னுக்குக் கட்டப்பட்டிருந்தன. இறந்த அவரது உடல் நன்றாகப் பழுதாகிப் போயிருந்தது. அதனால் அதனை அந்த இடத்தியேயே எரித்த விட்டோம். எனது தம்பியைப் பலவந்தமாக உலங்குவானூர்தியில் ஏற்றிய சிங்களப் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மேலே எழும் பியபோது அதிலிருந்து தள்ளிவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். இப்போது நான் கூலிவேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த இன்னொரு பெண்ணின் சாட்சியம் "இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற நாள் அன்று பிரமந்தனாற்றுக் கிராமத்தில் வாழ்ந்த திருமதி குலஅரியேஸ்வரி (வயது 46) இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

"இப்படுகொலைத் நாள் அன்று ஐந்து உலங்குவானூர்திகள் வானத்தில் வட்டமிட்டதைப் பார்த்தேன். விமானங்களும் வானத்தில் சுற்றிச் சுழன்றடித்து வட்டமிட்டுக் கொண்டன. சிறீலங்கா இராணுவச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் எல்லோருமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டோம். காட்டுக்குள் தரையிறக்கப்பட்ட இராணுவம் வீடுகளை எரித்துக் கொண்டே வந்தது. தமிழ்மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த டிஸ்கோ என்பவர் முகத்தில் பெயின்ரைப் பூசிக் கொண்டு உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு சிங்கள இராணுவத்திற்கு வழிகாட்டிக்கொண்டு சென்றதைக் கண்டேன். டிஸ்கோவால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் பிடிபட்டார். ஆனால் இவர் தந்திரோபாயமாக தப்பிக்கொண்டார். இவர் இராணுவப்பயிற்சி பெற்றிருந்த ஒருவரென்பதை நான் அறிவேன். எனது வீட்டுக்கு அருகில் சிறீலங்கா சிப்பாய்கள் அப்பன் என்பரையும், ஆனந்தராசா என்பவரையும் வாழை மரத்தோடு கட்டிவைத்து அவர்களது நெற்றியில் சுட்டப் படுகொலை செய்தார்கள்."

மேலே கூறப்பட்ட 02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்கா விமானப் படையினரும் நடத்திய தாக்குதலில் உறிரிழந்த அனைவரும் இருபதிற்கும முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

மேலதிகத் தகவல்கள்

பிரித்தானிய கே.எம்.எஸ் (கினிமின இராணுவப் பிரிவைச் சேர்ந்த Tim Smith என்பவர் சிறீலங்கா இராணுவத்திற்கு சிறீலங்காவில் தங்கியிருந்து கே. எம். எஸ் (கினிமினி சேவிஸ்) இராணுவ பிரிவின் சார்பாகப் பயிற்சி கொடுத்தார். பயிற்சி கொடுத்ததோடு, அவர்களோடு இணைந்து பல சந்தர்ப்பங்களில் விமானத் தாக்குதல்களுக்கு விமானியாகவும், Tim Smith கடமையாற்றியுள்ளார். இலங்கையில் கடமையாற்றிய பின் தனது சொந்த நாடான பிரித்தானியாவுக்குச் சென்ற இவர் சிறீலங்காவில் தனது பணிகள் பற்றி ஒரு நூலை எழுதியுள்ளார். "The Reluctant Meunary" (The Recollection of a British Ex Army Helicopter Pilot in the anti Terrorist War in Sri lanka) என்ற அந்த நூலில் அறுபத்தோராம் பக்கத்தில் புதுக்குடியிருப்பு புறச்சூழலில் (பிரமந்தனாறு) சிறீலங்காப் படைகளைத் தான் தரையிறக்கும் போது தனது அனுபவத்தினை எழுதியுள்ளார். இலங்கையின் தரைப்படையும், விமானப்படையும் கூட்டாகத் தரையிறக்கப்பட்ட படை நடவடிக்கைக்கு Flight Lieutant (முதலாவது லெப்றொகான் குணதிலகா தலமை தாங்கியதாகவும், அவர் எவ்வேளையிலும் எத்தகைய முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறியதாகவும் (He is always undecided) குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த நூலில் சிறீலங்காப் படைகளைப் பற்றி விபரிக்கும் போது "சிறீலங்கா இராணுவம் ஒழுக்கம் கெட்ட இராணுவமாகவே இருந்தது என்றும் இவர்களைக் களத்தில் இறக்கிவிட்டால் அவர்கள் கொலைப்பொறி போல (Killing Machinery) செயல்படுவர்"என்றும் கூறியுள்ளார்.

றொகான் குணத்திலக

சிறீலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி ஏயா மார்சல் ரி. குணதிலகாவின் மகன் தான் இந்த றொகான் குணதிலக (Flight Lieutant) ஆவார். இவர் தனது தந்தையாரின் செல்வாக்கால் விமானப் படையினுள் நுழைந்து மிகக் குறுகிய காலத்தில் ஒரு இடைநிலை அதிகாரியானார். இவரே பிரமந்தனாற்றுப் படுகொலைக்குப் பொறுப்பாக அன்றைய நாள் இருந்தார்.

02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்

1. ஸ்லீபன்ராஜாஸ் சத்தியசீலன் (26)
2. நாகப்பன் சத்தியலிங்கம் (21)
3. கந்தசாமி தர்மசிங்கம் (23)
4. கிட்டிணர் சிவபாதசுந்தரம் (33)
5. கறுப்பையா தர்மலிங்கம் (23)
6. கறுப்பையா செல்வராசா (24)
7. பொன்னுத்துரை பாக்கியநாதன் (21)
8. சுப்பையா அருணாச்சலம் (29)
9. சின்னையா சவுந்தரராசன் (24)
10. வன்சநாதகே பியதிலகே காமினி (26)
11. வல்லிபுரம் கணேசமூர்த்தி (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



அடம்பன் படுகொலை 12.10.1986

திருமலை மூதூரில் 18.07.1986 அன்று அதிகாலை 3:00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் இங்கு நாற்பத்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டுசென்று சுட்டுப் படுகொலை செய்தனர். இதில் அனைவரும் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தல், படுகொலை சம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடம்பன் கிராமம் அமைந்துள்ள விவசாயக் கிராமமாகும். கிராமத்தில் வசித்து வருகின்ற மக்கள் கடந்த இருபது ஆண்டகளுக்கு மேலாக கிராமத்திற்கு அருகேயமைந்துள்ள தள்ளாடி சிங்கள இராணுவ முகாமினால் பலசொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த வருகின்றனர்.

12.10.1986 அன்று அதிகாலை 4:00 மணிக்கு தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து பறப்பட்ட இராணுவத்தினர் மாளிகைத்திடல் கிராமத்தினூடாக வந்து அடம்பன் கிராமத்ததைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அடம்பன் கிராமத்தில் வீடுகளில் உறங்கிகொண்டிருந்த மக்களைச் சுட்டப் படுகொலை செய்ததுடன், அடம்பன் சந்தியிலுள்ள கடைகளையும் எரித்தனர். அதிகாலை 5:00 மணிக்கு கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் மு.ப. 11 மணிவரை அடம்பன் கிராமத்தில் தாக்குதலை நடாத்திவிட்டு இறந்தவர்களின் சடலங்களை வீதிகளிலும் வயல்களிலும் வீசிவிட்டு இராணுவ வாகனங்களில் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இச்சம்பவத்தில் இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பல வியாபார நிலையங்கள், கடைகள் என்பனவும் எரிக்கப்பட்டன.

கதிரன் செளந்தரராஜன்

"1986 ஆம் ஆண்டு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளிக்கிட்டு வந்த இராணுவத்தினர் திருக்கேதீசுவரம் வந்து அதன் வழியாக மாளிகைத்திடல் வந்து அதனூடாக தாமரைக்குளம் வரை வந்து தியாகு மற்றும் கோபாலு என்று குடும்பஸ்தர்கள் இருவரையும் சுட்டுக் கிணற்றுக்குள் போட்டனர். பின்னர் அங்கிருந்து அடம்பன் வந்த இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த நோபோட் என்ற பத்தொன்பது வயதுடைய ஒருவரையும் சீலன் என்ற பதினாறு வயது இளைஞனையும் பசுமை என்பவரையும் சுட்டக் கொன்றார்கள். அந்தவேளை அடம்பன் கடை வீதிவழியால் வந்த இராணுவத்தினர் முத்துவேல் என்ற இளைஞனையும் அந்தோனிச்சாமி என்ற இளம் குடும்பஸ்தரையும் சிறி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் வாழ் நெல் வியாபாரியையும் பிடித்தச் சென்று நெடுங்கண்டல் கோயிலடியில் சுட்டுப் போட்டனர். அதன் பின்னர் அவ் வீதி வழியால் வந்த இராணுவத்தினர் 22 வயதுடைய மனோகரன் என்பவரையும் பத்தென்பது வயது ஜெகதீஸ்வரன் என்பவரையும் மாந்தையைச் சேர்ந்த நெல்லுக்கடை உரிமையாளரான உதயன் என்பவரையும் உலக்கையால் அடித்து சாகாத நிலையில் அடம்பன் கடற்கரையிற் போட்டுச் சுட்டிருந்தார்கள். இவ்வாறு சுடப்பட்ட அனைவரினதும் கழுத்துகளில் நஞ்சைக் கட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றி உள்ளித் தாழ்வுப் பகுதியால் தள்ளாடி முகாமிற்கு ஏற்றிச் சென்றார்கள். பின்னர் சடலங்கள் அனைத்தும் அடையாளங்காண முடியாத நிலையில் இருந்ததால் யாரும் சடலங்களை கையேற்க முன்வராத நிலையில் இராணுவத்தினரே ரயர்களைப் போட்டு எரித்தார்கள். இந்தச் சம்பவத்தில் பதினாறு பேர் வரை இறந்திருந்தார்கள். இச்சம்பவத்தின்போது எந்தவித வயது வேறுபாடின்றி ஆறுபது வயது முதியவர்களிலிருந்து இருபது வயது இளைஞர்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தள்ளாடியிலும், உயிலங்குளத்திலும் இராணுவ முகாம்கள் இருப்பதால், இராணுவத்தினரின் தாக்குதல் நேரங்களில் வேறு பகுதிகளிற்குப் போகமுடியாத நிலை ஏற்படும். அப்படி வெளியேறினால் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடும். இதேபோன்று தான் ஆண்டான்குள மக்களுக்கும் பாதிப்புக்கள் இருக்கிறது. இந்தத் தள்ளாடி இராணுவ முகாமால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தள்ளாடி முகாமிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலிருக்கின்ற நாங்களாகத்தான் இருக்கிறது. பெரும்பாலும் எறிகணைத் தாக்குதலையும் உலங்குவானூர்த்தித் தாக்குதலையும் இம்முகாம் இராணுவத்தினர் மேற்கொள்வார்கள்."

12.10.1986 அடம்பன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. யூலியன் யெஜசீலன் (22)
2. கிறிஸ்தோடு யோவான் (65)
3. ஜயம்பிள்ளை நாகமுத்து (84)
4. தங்கவேல் ராமன் (-)
5. மாமுண்டி செல்வராஸ் (14)
6. அந்தோனி செல்வராஸ் (63)
7. அந்தோனிப் பிள்ளை மெசியாஸ் (28)
8. ஆரோக்கியம் சந்தான் (30)
9. ரோசாய்ஸ் பிலேந்திரன் (32)
10. சபாபதிப் பிள்ளை தங்கம்மா (70)
11. வஸ்தியான் சகாயநாதன் குரூஸ் (-)
12. வீரசிங்கம் மனோறஞ்சிதம் (24)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

பெரியபண்டிவிரிச்சான் படுகொலை 15.10.1986

மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேசசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமைபோல 15.10.1986 அன்று தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற்தோட்டத்தில் காவல்காக்கும் எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக்குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.
இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக் குடிசைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத் தாக்கினர். பின்னர் இராசநாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டுதுண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பி விட்டனர். இராசநாயகத்தின் படுகோரமாக சித்திரவதை செய்யப்பட்ட மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

15.10.1986 அன்று பெரியபண்டிவிரிச்சான் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி (மாணவி)
3. இராசநாயகம் மரிய எனஸ்ரின் (11)
4. ஜோசப் பிரான்சிஸ் (72)

15.10.1986 அன்று பெரியபண்டிவிரிச்சானில் காயமடைந்தவர்களின் விபரம்

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி (மாணவி)

புதுக்காட்டுச்சந்திப்படுகொலை 11.10.1987

கிளிநொச்சி மாவட்டத்தின் வடபகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவில் ஏ-9 நெடுஞ்சாலையில் சோரன்பற்று புதுக்காடட்ச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியானது மருதங்கேணி, பளை, கிளிநொச்சி என்பவற்றை இணைக்கும் முச்சந்தியாக உள்ளது. இச்சந்தியைச் சுற்றி சோரன்பற்று, கரந்தாய் போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன. மேலும் தாளையடி, மருதங்கேணிப் பகுதிக்கான பிரதான வீதி இச்சதந்தியிலிருந்து ஆரம்பிப்பதால் இச்சந்தியில் போக்குவரத்துக்காகப் பொதுமக்கள் அதிகளவில் கூடுகின்ற இடமாகும்.

11.10.1987 அன்று ஞாயிற்றுக் கிழமை 3:30 மணியளவில் ஆனையிறவு இந்திய இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி வாகனத்தொடரணி, கவசவாகனங்கள் சகிதம் வந்த இந்தியப் படையினர் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் திடீரென வாகனங்களிலிருந்து இறங்கி அப்பகுதியில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காகவும், பிரயாணத்திற்காகவும் நின்ற பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் போர் உயிரிழந்ததுடன், நான்கு பேர் படுகாயமடைந்தார்கள்.

இந்தச் சம்பவத்தின் போது தன்னுடைய இரண்டு பிள்ளைகளை இழந்தவரும் சந்தியில் கடை வைத்திருந்தவருமான இளையதம்பி பேரம்பலம் பின்வருமாறு கூறினார்.

"வாகனங்களில் வந்த இந்திய அரசபடையினர் திடீரென இறங்கி பஸ்தரிப்பு நிலையத்திற் காத்து நின்ற மக்கள்மீதும் கடைகளில் நின்றவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினார்கள். அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் கடையில் எனது மூத்த மகனும் இளையமகளும் நின்றனர். அத்துடன ஊழியர் ஒருவரும் நின்றார். இவர்கள் மூவரையும் இராணுவம் கடையுடன் சேர்த்து எரித்தது. இவர்களின் உடல்கள் எரிந்த நிலையில் பின்னர் என்னால் மீட்கப்பட்டது. இந்தச் சந்தியிலிருந்த நான்கு கடைகளும் டாங்கிகளால் இடிக்கப்பட்டன. அத்துடன் சந்தியில் நின்ற காரும் எரிக்கப்பட்டது." என தன்னுடைய சோகக்கதையைக் கூறினார்.

11.10.1987 அன்று புதுக்காட்டுச் சந்திப்படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. கனகரத்தினம் (35)
2. குழந்தைவேலு செல்வராசா (22)
3. பொன்னையா நவரத்தினம் (34)
4. பொன்னையா சுப்ரமணியம் (40)
5. பேரம்பலம் மகேஸ்வரன் (10)
6. பேரம்பலம் கோகிலாதேவி (14)
7. வேலாயுதம் செந்தில் நாதன் (14)
8. சின்னத்தம்பி பசுபதிப் பிள்ளை (41)

காயமடைந்தவர்களின் விபரம்

1. கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் (14)
2. சுப்பிரமணியம் ஏகாம்பரம் (45)
3. சின்னக்குட்டி சிவரூபன் (16)
4. ஆறுமுகம் பாலசிங்கம் (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



எங்கள் தாயகம் எத்தனை அழகு!

எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தாயின் மடிச்சுகத்தையும்
தாயகமண்ணின் தனிச்சுகத்தையும்
எழுதத் தொடங்கினால்...
ஏன் பேனா வற்றுவதில்லை?
“அமுதசுரபி” போலவும்
“அட்சயபாத்திரம்” போலவும்
ஏன் அள்ள அள்ளக் குறைவதில்லை?
எந்தையர் பூமி எத்தனை அழகு!
கள்ளிச்செடி படர்ந்த கலடுத் தரையானாலும்
பச்சை போர்த்த படுக்கைபோல
பார்க்கும் போது கண்ணில் காதல் வழிகிறதே!
ஒழுங்கில்லாத ஒற்றையடிப் பாதைகள் கூட
உச்சி வகிடெத்த பேரழகியின் தலையைப்போல
உன்னத அழகோடு ஓடிவருகின்றனவே
ஏன்?
தொட்டளைந்த பூமியின் சுகமும், மணமும்
எட்ட இருக்கும் நிலத்தில் ஏற்படாது.
எங்கள் அன்னைமண் எத்தனை எழில்
பிஞ்சுப் பிள்ளைகளின் பூவிரல்கள்போ்...
வைகாசி மாதத்து மாமரங்கள்போல...
துள்ளிக் குதிக்கும் பிள்ளைக் கன்றுகள்போல...
பெள்ளலைகள் கரையொதுக்கும்
நுரைப்பூக்களைப் போல...
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தமிழீழம் சந்தனக்காடு
இதிகாசத்தில் படித்த இந்திரன் பூமி.
“தால்எரி” காலெடுத்து நடக்கும் “காஷ்மீரை”
காணக் கண்கோடி வேண்டுமாமே.
“ஹவாய்” தீவின் கடற்கரையில்
ஒருநாள் நடந்துவிட்டு இறந்தாலே
பிறந்தபலன் பூரணப்படுமாமே!
யார் சொன்னது?
தென் தமிழீழத்தைத் தெரியாத ஒருவன்
சொல்லியிருக்கலாம்.
மஞ்சள் வெயில் மேனிதழுவும் மாலைநேரம்
கோணமலையில் நின்று கீழே பாருங்கள்;
கோட்டை வாசலில் நிமிர்ந்து நின்று
பாதாளமலையின் பக்கமாக வழிகளை வீசுங்கள்.
உவமையற்ற அழகை உணர்வீர்கள்.
வார்த்தைகள் தோற்றுப்போகும்.
பேற்றுக்கால தாய்மை அழகோடு
நெற்பயிர்கள்
பால்மணிக் கதிர்கள் தள்ளும் பருவத்தில்
தம்பலகாமத்து வயல் வரம்புகளில்
காலாற நடந்து பாருங்கள்
காலமழை பொய்க்காத காலத்தில்
கந்தளாய் குளம் நிறைந்திருக்கும் நேரத்தில்
உயர்ந்த அணைக்கட்டில் உட்கார்ந்து கொண்டு
தாள்அசைவுக்குச சதிராடும் பெண்களைப் போல
நீளப்பறக்கும் வெண் கொக்குகளை நிமிர்ந்து பாருங்கள்
கந்தளாயின் காலடியில்
காஷ்மீர் கைகட்டி நிற்கும்.
நிலம் வெளிக்காத புலரிப் பொழுதில்
“வெருகல்” வேலன் திருவிழாக் காலத்தில்
மாவலி கங்கையின் மடியிலே விழுங்கள்.
கொட்டியாரக் குடாக்கடல் தேடி
கைநீட்டி வந்து கட்டித் தழுவும்
ஆற்றின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தென்தமிழீழம் சுந்தரப் பூமி.
கன்னங்குடா,
பட்டித்திடல்
இன்னும் இன்னும் எத்தனை ஊர்கள்
அத்தனையும் அழகு.
வெள்ளிநிலா விளக்கேற்றிக் கொள்ளும்
நள்ளிரவில்
புளியந்தீவில் பொன்னாவரசு பூத்திருக்கும் காலத்தில்
மட்டு நகர் வாவிக்கு வாருங்கள்
மேலே பெண்ணுருவும், கீழே மீனுருவும் கொண்ட
“நீரரமகளிர்”
குரலெடுத்துப் பாடிக் குளிப்பார்கள்.
படகெடுத்துப் பக்கத்தில் போனால்
முகம் மறைத்து முக்குளித்து விடுவார்கள்.
கற்பனை யென்றாலும் எத்தனை சுகம்!
மட்டக்களப்பு புல்வெளிகளில்
மேய்ச்சல் முடிந்து வீடு திரும்பும் பசுக்களின்
மடிசுரந்து வீதியெங்கும் வெள்ளமாகும்;
கன்றை நினைத்து கால்களை நனைக்கும்.
வண்டு துளைபோட்ட மூங்கில் காடுகள்
வாத்தியம் இசைக்கும்.
வாழைச்சேனை கரும்புக் காட்டில்
நிலத்துநீரைத் தண்டுகள் உறிஞ்சுவதில்லை
கரும்புச் சாறை நிலம்தான் குடித்துக் கொள்கிறது.
இலங்கை இந்து சமுத்திரத்தில் மிதக்கும்
ஒரு தீவு;
ஆனால் இரண்டு நாடுகள்.
தமிழீழம் பருவநிலை மாறுபடும் பகுதிகள் அடங்கிய
பரந்த தேசமல்ல...
ஒரேநாளில்
உதயத்தை காங்கேசன் துறையிலும்
அஸ்தமனத்தை அக்கரைப்பற்றிலும்
பார்த்துவிட்டு படுக்கைக்குப் போகலாம்.
மட்டக்களப்பின் முட்டித்தயில்
புளிக்க முன்னர்
புங்குடுதீவுத் திருமணமொன்றின்
பந்தியிலே பரிமாறப்படும்.
யாழ்ப்பாணத்துக் “கறுத்தக் கொழும்பான்”
அழுக முன்னர்
திருக்கோவில் தெருக்களில் விற்பனைக்கிருக்கும்.
வடதமிழீழம் வரண்டது;
வரண்டதே தவிர சுருண்டதல்ல...
தென்தமிழீழம் செழிப்பானது;
செழிப்பானதே தவிர செருக்கானதல்ல...
திருமலை தமிழீழத்தின் தலைநகர்.
எங்கள் வானத்துக்கு நிலவு ஒன்றுதான்;
தலைவனும் ஒருவன்தான்.
இன்று,
மனங்களை அடைத்து நின்ற மலைகளெல்லாம்
விடுதலை அதிர்வால்
வெடித்துச் சிதறுகின்றன.
பிரதேசப் பிரிவுகள்
போராட்டத் தீயால் பொசுங்கி எரிகின்றன.
தென்தமிழீழம்
எங்கள் தாயகத்தின் தலைவாசல்;
தானியக் களஞ்சியம்;
பாலும் தயிரும் பயிருக்கும் பாய்ச்சும் நிலம்.
இன்று —
தமிழரின் குருதி பாயும் நிலம்.
அவர்களின் கண்ணீரைத் துடைக்க
கைகளை நீட்டுவோம்;
எதிரியைக் கலைத்து எல்லையைப் பூட்டுவோம்!

உலகக்களம் – வியாசன்

திலீபனின் நினைவால் தகர்ந்த யாழ் கோட்டையும் ஈழத்தமிழர்களின் தொல்லியல் சான்றுகளும்

அ.மயூரன்



தமிழ்ச்சமூகத்தில் திலீபன் என்ற ஒரு தனி மனிதனுடைய தீர்க்கமான கருத்துக்கள் சமூக ஆழ்மனக் கருத்துக்களாக நிலைத் திருப்பதை இன்று அவதானிக்க முடிகிறது.

இன்று திலீபன் தன்னை உருக்கி 34 ஆண்டு கடந்துவிட்டது. இன்றும் திலீபனின் கனவுகள் அப்படியேதான் நடைபோடுகிறது. ஆனால் அவன் மூட்டிய தீ இன்றும் தமிழர்கள் மத்தியில் கனன்று கொண்டே இருக்கிறது.

ஈழமக்களின் மக்களின் ஆழமான நேசிப் புக்குரிய நாயகனாக தியாக தீபம் திலீபன் விளங்குகிறார் என்பதை திலீபனின் தியாக வேள்வி நடந்த நாட்களில் நிகழ் கின்ற சம்பவங்களும் அதன் பின்னான கடந்த 34 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் நடக்கின்ற ஏதோ ஒரு வகை யான தமிழ் மக்கள் எழுச்சிகள் ஒரு நினைவுகள் எதிர்பாராத சாதக நிகழ்வுகள் நடந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அந்தவகையில் திலீபன் கூறிய வாசகங் களில் ஒன்றான யாழ் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்று தான் தமிழீழ விடுதலையின் முதல் நாள் என்றும் யாழ் கோட்டையில் புலிக்கொடி பறப்பதை வானிலிருந்து 601 வது ஆளாக நான் பார்ப்பேன் என்றும் கூறிய வாசகங் கள் இந்திய இராணுவம் இருந்த சூழலில் இக்கருத்தை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



போர்த்துக்கேயர்கள் பண்ணைப்பாலத் தருகில் பிலிப் தே ஒலிவேரா தலைமை யில் சதுர வடிவில் கட்டப்பட்ட யாழ்க் கோட்டையை அதன்பின்னர் வந்த ஒல் லாந்தர் புதுப்பித்து ஐங்கோண வடிவில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் மிகவும் பலமான கோட்டையாக 1792 இல் கட்டி முடித்தனர். இதை என். டபிள்யூ ஏ நெல்சன் அவர்களே குறிப்பிட்டிருந்தார். இப்படிப்பட்ட பலமான கோட்டை ஒல்லாந் தரின் பின் பிரித்தானியரிடமும், இலங்கை இராணுவத்திடமும், இந்திய இராணுவத் திடமும், புலிகளிடமும் என கைமாற்றப் பட்டிருக்கிறது.

ஏற்கனவே யாழ்க்கோட்டையை 1984 ஆம் ஆண்டு ஈழத்தமிழ் போராளிகள் ஒன்றிணைந்து முற்றுகையிட்டிருந்தனர். இம்முற்றுகைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்டத்தளபதி கேணல் கிட்டு அவர்கள் தலைமை தாங்கினார்.

10.07.1984 முற்றுகைக்குள் உள்ளான யாழ் கோட்டை இந்திய இராணுவம் யாழ் கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை அதாவது 03.08.1987 வரை மூன்று ஆண்டுகள் 23 நாட்கள் தொடர்ந் திருந்தன.

கோட்டையின் வெளிப்புற வீதியில் புலிகளின் அரண்களோடு புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய இயக்கக் குழுக்களின் கண்காணிப்பு அரண்களும் ஆரம்பத்தில் அமைந்திருந்தன. பின்னர் அவ்வாயுதக் குழுக்கள் முரண்பட்டுக் கொண்டு வெளியேற அதாவது இம் முற்றுகைத்தாக்குதலில் இருந்து புளொட் முதலில் வெளியேற அதனைத்தொடர்ந்து ரெலோ ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய இயக்கக் குழுக்களும் வெளியேறினர். இதன் பின் னர் விடுதலை புலிகள் மட்டும் இக்கோட் டையைச் சுற்றி கன்னிவெடி விதைத்து இறுதிவரை முற்றுகையிட்டிருந்தனர். 03.08.1987 இந்திய இராணுவம் கோட்டைக்குள் நுழைய அப்போதைய தளபதி கேணல் கிட்டு தலைவருக்கு பின்வருமாறு செய்தி அனுப்பினார்.

“ அன்பான தலைவரே! இந்திய அமை திப்படையின் கோட்டைப்பிரசவத்துடன் தாங்கள் எனக்கிட்ட பணியை முடித்துக் கொள்கிறேன். மூன்று ஆண்டுகள் 23 நாட்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையில் எமக்கிட்டபணி செவ்வனே நிறை வேற்றப் பட்டது. என அறிக்கை அனுப்பிவிட்டு படையணிகளை விலக்கிக் கொண்டார். இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறும் வரை கோட்டைக்குள் இருந்தனர். இதன்பின்னர் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட முறுகல் நிலையால் 10.10.1987 மீண்டும் கோட்டையை சூழ விடுதலைப்புலிகளின் படையணிகள் தடுப்பரண்கள் அமைத் தனர் அது நீண்ட காலம் நிலைக்க வில்லை.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்ப மானதன் பின்னர் 11.05.1990 யாழ் கோட்டை இராணுவ முகாமை மீண்டும் முற்றுகைக்குள் கொண்டுவந்தனர். சரி யாக 107 நாட்கள் தொடர் முற்றுகையின் பின்னர் திலீபன் ஆகுதியான 26.09. 1990 யாழ்க்கோட்டை புலிகளின் வச மானது.



கோட்டையின் உட்புற வாசலில் புலிக்கொடி பறக்கின்றது

இம்முற்றைகை பல இழப்புக்களுக்கும் மத்தியில் கோட்டையை கைப்பற்றுவது என்ற உறுதியில் புதுப்புது உத்திக ளுடனும், முயற்சிகளுடனும் புலிகள் மேற்கொண்டனர். கோட்டைக்குள் இருந்த இலங்கை இராணுவமும் ஒப்பரேசன் போர்ட், வோட்டர் கேற், என பல இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டது புலிகளின் தரப்பில் பிரிகேடியர் பாணு ஒருங்கிணைத்தார்.

இங்கே கோட்டையின் வரலாற்றை திரும்பி பார்போமானால் போர்த்துக்கேயப் படைகளை யாழ்க்கோட்டைக்குள் ஒல் லாந்த தளபதி அட்மிரல் கொமுசாறி றைக்ளொவ் வன்ஹான் தலைமையில் 16.03.1658 முற்றுகை இட்டு போர்த்துக் கேயர்களுக்கு வளங்கள் எதுவும் செல் லாது 21.06.1958 வரை 101 நாட்கள் முற்றுகையின் பின்னர் கைப்பற்றினர்.

விடுதலைப் புலிகளும் இந்த ஒல்லாந்த தளபதி கொமுசாறி றைக்ளொவ் வன்ஹான் உத்தியையே நடைமுறைப்படுத்தினர். இங்கு ஒரு வித்தியாசம் போர்த்துக் கேயரை ஒல்லாந்தர் முற்றுகையிடும் போது யாழ் கோட்டை அவ்வளவு பலமாக இல்லை ஆனால் விடுதலைப் புலிகள் முற்றுகையிடும் போது ஆசியாவிலேயே மிகப் பலம்வாய்ந்த கோட்டையாக இருந்த தோடல்லாமல் நவீன ஆயுதப்பாவனை யும் காணப்பட்டதாகும்

இவ்வாறு கோட்டை முற்றுகையை 107 நாட்கள் புலிகள் மேற்கொண்டிருந்தனர். 26.09.90 அதிகாலை 12.15 மணிக்கு திலீபனின் 3வது நினைவு நாளில் எப்படியாவது கோட்டையை கைப்பற்று வது என்ற உறுதியில் பசீலன் எறி கணைகள் சரமாரியாக முழங்க இறுதிக் கட்ட முற்றுகை தாக்குதல் ஆரம்பமானது. இதனால் நிலை குலைந்தவர்கள் கோட் டைக்குள் உணவும் இல்லாது போனதால் பெண்கள் சிறைச்சாலைக்கு அருகில் உள்ள ஒல்லாந்தர் அமைத்த நீர்வழியால் மண்டைதீவுக்குத் தப்பிச் சென்றனர். அதிகாலை 04.30ற்கு கோட்டை புலி களின் வசமானது.

சரியாக திலீபன் தியாகியான நேரமான 10.48 ற்கு அப்போதைய யாழ் மாவட்ட தளபதியாக இருந்த பிரிகேடியர் பாணு அவர்களால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இதனுடன் 400 ஆண்டு கள் ஆதிக்கச் சின்னமாக விளங்கிய கோட்டையில் தமிழன் கொடி பறந்தது.

உலக வரலாற்றில் ஒரு கோட்டை இரண்டு படையினரால் (ஒல்லாந்தப்படை, தமிழர் படை) 100 நாட்களுக்கு மேல் முற்றுகை யிடப்பட்ட வரலாறு எங்குமில்லை. இது ஈழமண்ணிலேயேதான் நடந்திருக்கிறது. இது உலக வரலாற்றில் ஒரு பதிவாகும்.

யாழ் கோட்டை கைப்பற்றப்பட்டதன் பின் னர் அதை தகர்க்கின்ற முயற்சியில் புலிகள் ஈடுபட்டனர். இதற்கு பல காரணங் கள் கூறப்பட்டாலும் இக்கோட்டையினை போர்த்துக்கேய கப்பித்தான் மேஜர் பிலிப் தே ஒலிவேரா கட்டும்போது யாழ்ப்பாணத் தில் இடிக்கப்பட்ட ஆலயங்களின் கற்களை யாழ் மக்களினை வரிசையில் கோட்டை வரை நிறுத்தி அவர்களின் கைகளினால் கைமாற்றி கோட்டைக்கு எடுத்துச்சென்றே கோட்டையினைக் கட்டியிருந்தான்.

இந்த நிகழ்வு தலைவரை பாதித்ததன் விளைவு தமிழர்களை அடிமைகளாக்கி அவர்கள் இரத்தத்தில் கட்டப்பட்ட இந்தக் கோட்டை ஒரு அவமானச்சின்னமாகவே நான் பார்கிறேன் என்று செவ்வி வழங்கியிருந்தார்.



அத்துடன் யாழ்க் கோட்டை இடிக்கப்படும் போது அங்கிருந்து கோயில்களின் கற்கள் கண்டெடுக்கப்பட்டன. அப்போது ஈழநாதம் பத்திரிகைக்கு பேட்டி வழங்கிய கல்விக் கழகப் பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் போர்த்துக்கேயர் இக்கோட்டை கட்டும் போது ஆலயங்களை இடித்து கட்டினர் ஆனால் இக்கோட்டைக்குள் தமிழர்களின் அடையாளச்சின்னங்கள் புதைந்து கிடக் கிறது என்றார். இந்த உண்மை 2011 கோட்டைக்குள் டர்காம் பல்கலைக்கழக பேராசிரியர் கொன்னிங்காம் அவர்களின் தலைமையில் யாழ் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவும் இணைந்து மேற் கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் வெளிக் கொணரப் பட்டது. அதாவது இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் கோட்டை ஒரு துறைமுக நகரமாக விளங்குகிறது என்பதுதான் அத் துடன் அங்கு உரோம சீன மட்பாண் டங்களும் கிடைத்துள்ளன இது கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தமிழர்களின் கடல் கடந்த வர்த்தக உறவையும் ஆட்சிப்பரப் பையும் காட்டுகிறது

என்னைப் பொறுத்தவரை யாழ் கோட்டை புலிகளினால் கைப்பற்றப்பட்டு தகர்க்கப்பட் டதனாலேயே அங்கு அங்கு அதை மீள உருவாக்கும் பணியும் அகழாய்வும் மேற் கொள்ளப்பட்டது. இக்கோட்டையை தகர்க் காது போயிருந்தால் கி.மு முற்பட்ட கால தமிழனின் தடயங்கள் வெளிக்கொணரப் பட்டிருக்காது இது திலீபனின் தியாகத்தினா லேயே இவை நிகழ்ந்தது என்பேன்.



சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302

Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

Aruvucholai Boys Child Development Center
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483

Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427

Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095

Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721

St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049

Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685

Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494

Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

உலகப்பரப்பில் ஈகைச்சுடர் திலீபன் நினைவு நாள் நிகழ்வு 26.09.2021














AFFORDABLE REFRIGERATION SERVICES INC

Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers

We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer



Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com



ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE

C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai



Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4



உணவும் உடல்நலமும்: சமையல் முறையில் கவனம் தவறினால் புற்றுநோய் ஆபத்து

மருத்துவ அறிவியல் ஆய்வு



உணவு பொருள்களை சில முறைகளில் சமைக்கும்போது நச்சு ரசாயனங்களை உருவாக்கி நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தலாம் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. அவற்றைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

"நாம் பரிணாம வளர்ச்சி பெற்று மனிதர்களாக உருவெடுத்ததற்கான முழுக் காரணமே நாம் உணவைச் சமைக்கத் தொடங்கியதுதான்" என்கிறார் ஜென்னா மேசியோச்சி.

"சமைக்காத உணவை மட்டுமே நாம் உட்கொண்டபோது, தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டியிருந்தது. ஏனென்றால் அதில் இருந்து ஊட்டச் சத்துக்களைப் பெற நமது உடல் போராட வேண்டியிருந்தது."

சஸ்ஸெக்ஸ் பல்கலைக்கழகத்தில் ஊட்டச் சத்து மற்றும் வாழ்க்கை முறை எப்படி நோய் எதிர்ப்பு மண்டலத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது என்பது பற்றி ஆய்வு செய்தவர் மேசியோச்சி. அவரது கருத்துடன் உயிரியலாளர்கள் உடன்படுகின்றனர்.

உண்மையில் நெருப்புடன் மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு நேரடியான தொடர்பு இருக்கிறது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

உணவைச் சமைத்து உண்ணத் தொடங்கியபோது அதில் இருந்து கலோரிகள் மற்றும் கொழுப்பைப் பிரித்தெடுப்பது எளிதானது. ஜீரணிப்பதற்காக எடுத்துக் கொளளப்பட்ட ஆற்றலின் அளவைவிட அதன் மூலம் கிடைக்கும் ஆற்றலின் அளவு அதிகமாக இருந்தது. நாம் குறைவாக மெல்ல வேண்டியிருந்தது என்பதையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

அது நமது தாடைகளின் அளவைக் குறைக்க உதவியதுடன் மூளையைப் பெரிதாக்கவும் பயன்பட்டது. பல தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களைக் கொன்று, நச்சுத் தன்மையிலிருந்து நம்மைப் பாதுகாக்கவும் சமையல் உதவுகிறது.

இப்படிச் சமைப்பதால் பல நன்மைகள் இருந்த போதிலும், உணவை அதிக வெப்பநிலையில் தயாரிப்பதால் மறைமுகமான சில ஆபத்துகளும் இருக்கின்றன.

சமைக்காத உணவுகளை உண்ணும் வழக்கம் வளர்ந்து வரும் நிலையிலும், மாறுபட்ட வகையில் உணவைச் சமைக்கும் வழக்கம் அதிகரித்திருக்கும் நிலையிலும் சமையல் மீது விஞ்ஞானிகள் பார்வையைக் குவித்திருக்கின்றனர்.

அக்ரிலாமைடு: அளவுக்கு அதிகமாகச் சமைப்பதால் புற்றுநோய் ஆபத்து

ஒரு உணவைத் தயார் செய்யும் போது அனைத்து வகையான சமையல் முறைகளும் ஒன்றாக இருக்காது. சில உணவுப் பொருள்களுக்கு அதிக வெப்ப நிலையைப் பயன்படுத்த வேண்டும். சிலவற்றுக்கு குறைந்த வெப்பநிலை போதுமானதாக இருக்கும்.

குறிப்பாக மாவு சத்துள்ள உணவுகளால் அக்ரிலாமைடு என்ற ரசாயனம் உடலில் சேருவதாக பிரிட்டன் உணவுத் தர நிலை நிறுவனம் எச்சரிக்கை விடுக்கிறது. இந்த ரசாயனம் காகிதம், சாயங்கள் மற்றும் பிளாஸ்டிக்குகள் தயாரிக்க பயன்படுகிறது. உணவு நீண்ட நேரமோ அல்லது அதிக வெப்பநிலையிலோ வறுக்கப்படும் போதும் இது உருவாகிறது.

உருளைக் கிழங்கு போன்ற கார்போ ஹைட்ரேட் நிறைந்தவை, வேரில் உருவாகும் காய்கறிகள், சுடப்படும் ரொட்டி, காபி, கேக்குகள், பிஸ்கட் போன்றவை கவனிக்கப்பட வேண்டியவை. அவற்றில் உள்ள ஸ்டார்ச் கருமையாகத் தொடங்கும் போது எதிர்வினையை கவனிக்க முடியும்.

அக்ரிலாமைடு புற்றுநோயை உருவாக்கும் சாத்தியமுள்ள காரணியாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேசியோச்சி போன்ற ஊட்டச்சத்து நிபுணர்கள் அதிக அக்ரிலாமைடு கொண்ட உணவுகளை பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது என்று கூறுகின்றனர்.

"இது தொடர்பான பெரும்பாலான சோதனைகள் விலங்குகளுடன் ஆய்வகத்தில் செய்யப்படுகின்றன, ஆயினும் அக்ரிலாமைடு மனிதர்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தும் சாத்தியம் இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம்," என்கிறார் அவர்.



அக்ரிலாமைடு உருவாவதைத் தவிர்க்க, அதிக வெப்பநிலையில் உருளைக்கிழங்கை சமைக்கும் போது தங்க நிறத்தை இலக்காக வைத்துக் கொள்ள வேண்டும், அதிக வெப்ப நிலையில் சமைக்க வேண்டுமெனில் குளிர் சாதனப் பெட்டியில் உருளைக் கிழங்குகளை வைக்கக் கூடாது என்பன போன்ற பரிந்துரைகளை எஃப்எஸ்ஏ வழங்கியிருக்கிறது.

குளிர்ச்சியான உருளைக்கிழங்கு சமைக்கும் போது சர்க்கரையை விடுவிக்கிறது. இது அமினோ அமிலங்களுடன் சேர்ந்து அக்ரிலாமைடை உருவாக்குகிறது. இதைத் தடுக்க, இந்த பொருட்களை உயர் வெப்பநிலையில், அளவுக்கு அதிமாகச் சமைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

ஆனால், இதுமட்டுமே தீர்வல்ல. அக்ரிலாமைடு என்பது நவீன கால உணவுப் பழக்கங்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் பல்வேறு காரணிகளில் ஒன்றுதான். வேறு பல காரணிகளும் இருக்கின்றன.

சமையலறை புகையும் நுரையீரல் புற்றுநோயும்

சமையலின் விளைவுகள் நாம் சாப்பிடுவதன் மூலம் மட்டுமல்லாமல், நாம் சுவாசிப்பதன் மூலமும் நம்மைப் பாதிக்கின்றன. வளரும் நாடுகளில் பல நோய்களுக்கு சமையல் அடுப்புகளே முக்கிய காரணம். மரம், பயிர் கழிவுகள் மற்றும்



கரி போன்ற திட எரிபொருட்களைப் பயன்படுத்தும் போது, புகை உருவாகும். உலக சுகாதார அமைப்பின் புள்ளி விவரங்களின்படி, இது ஒவ்வொரு ஆண்டும் 38 லட்சம் இறப்புகளுக்கு காரணமாகிறது..

நாம் சமைக்கும் உணவில் உள்ள சில பொருட்கள் வீட்டுக்குள் காற்று மாசுபாட்டுக்கும் வழிவகுக்கும்.

புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் மருத்துவ புற்றுநோயியல் இதழில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில், சமையல் எண்ணெயிலிருந்து வரும் புகையைச் சுவாசிப்பதால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து அதிகரிப்பதாகத் தெரியவந்துள்ளது.

சமையல் எண்ணெயிலிருந்து வரும் புகையில் "ஆல்டிஹைடு" எனப்படும் புற்றுநோயை உருவாக்கும் ரசாயன் இருப்பதை தை வானைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

சமைத்த இறைச்சியும் நிரிழிவும்

இறைச்சி உண்பவர்கள், அதைச் சமைக்கும் விதம் குறித்தும், எத்தனை முறை சாப்பிடுகிறோம் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும். தீயில் நேரடியாகச் சமைப்பது, பார்பிக்யூ, அதிக வெப்பநிலைப் பயன்பாடு போன்றவை பெண்களுக்கு நீரிழிவு நோய்க்கான வாய்ப்பை அதிகப்படுத்தும் என அமெரிக்காவில் எடுக்கப்பட்ட பல ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் இது ஆண்களுக்கு ஏன் ஏற்படுவதில்லை என்பது பற்றி தெளிவுபடுத்தப்படவில்லை.

அதிக வெப்பநிலையில் அல்லது நேரடியாக தீயில் சமைக்கப்பட்ட சிவப்பு இறைச்சி, கோழி மற்றும் மீன் போன்றவற்றை மாதத்தில் 15 நாள்கள் சாப்பிடுபவர்களுக்கு இரண்டாம் வகை நீரிழிவு ஏற்படுவதற்கான தொடர்பு இருப்பதாக மற்றொரு ஆய்வு கூறுகிறது.

உடற்பயிற்சி அல்லது சர்க்கரை எடுத்துக் கொள்வது உள்ளிட்ட உணவின் மற்ற அம்சங்கள் எதுவும் இதில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நீர் மற்றும் நீராவியில் வேகவைப்பது போன்ற மாற்று வழிகளில் சமைப்பது நீரிழிவுடன் தொடர்புடையாகவத் தெரியவில்லை.



மாற்றுச் சமையல் முறைகள்

கடந்த நூறாண்டுகளில் சமையல் நுட்பங்கள் விரிவடைந்திருக்கின்றன. பழைய வெப்பப்படுத்தும் முறைகள் இப்போது அருகிவிட்டன. மைக்ரோவேவ், எலெக்ட்ரிக் அடுப்பு, டோஸ்டர்கள் போன்றவை பரவலாக இருக்கின்றன.

மைக்ரோவேவை ஆரோக்கியமான சமையல் முறை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். காளான்களை சமைக்கும் ஆரோக்கியமான வழிகளில் ஒன்று மைக்ரோவேவ் என ஸ்பெயின் ஆராய்ச்சி ஒன்று கண்டுபிடித்தது.

குறைந்த நீர் மற்றும் குறைவான நேரத்தைப் பயன்படுத்திச் சமைப்பதன் மூலம் காய்கறிகளில் ஊட்டச் சத்துகளைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

" காய்கறிகளை நீரில் வேக வைப்பதை விட நீராவியில் வேகவைப்பது மிகவும் சிறந்தது. அதிக வெப்பநிலையில் நீண்ட நேரம் சமைப்பது எதுவுமே ஆபத்தான தாகத் தோன்றுகிறது. ஒன்று ஊட்டச் சத்தைக் குறைக்கிறது. அல்லது அக்ரிலாமைடு போன்ற ரசாயனங்களை உருவாக்குகிறது" என்கிறார் மேசியோச்சி.

இதேபோல் சில எண்ணெய்கள் அதிக வெப்பத்தில் சூடாகும்போது அவை உடலுக்கு ஆபத்தாக மாறுகின்றன.

அதே நேரத்தில், சில சமையல் முறைகள் ஆபத்தானவை என்றாலும் சமைக்காத உணவுகளைச் சாப்பிடுவது கூடுதல் ஆபத்தை கொண்டிருக்கின்றன. சமைக்காத உணவுகளைச் சாப்பிடுவதால் பெண்களுக்கு மாதவிடாய் குறைபாடு ஏற்படுவதற்கும் வாய்ப்பிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஆக, இறைச்சியோ, காய்கறியோ சமைத்துச் சாப்பிடுவதுதான் நல்லது. ஆனால் எப்படிச் சமைக்கிறோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நிபுணர்கள் வலியுறுத்துகிறார்கள்.

நன்றி - பிபிசி தமிழ்

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

2022 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

www.itouchcarwash.com
I TOUCH CAR WASH LTD
Professional Auto Detailing
HAND CAR WASH

WE SPECIALIZE IN:
. Interior / Exterior
. Wash & Vacuum
. Interior Shampoo
. Leather Treatment
. Engine Shampoo
. High Speed Buff
. Waxing / Polishing
. Headlight Restoration
. Auto Tinting
. Ceramic Pro
. Insurance Approved

HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end
products on all our vehicles

புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca
ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்
Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us


Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6

BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

GTA CHIROPRACTIC CENTRE

We are specialized in

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



Health is Wealth

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஒரு விராட் விஸ்வப் பிரம்மனே முயலு

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

FRONTLINE COMMUNITY CENTRE

குடிவரவாளர்களுக்கான சேவைகள்

பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு

வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை

பொதுவான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்

முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்

தன்னார்வத் தொண்டாற்றல்

(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9

Frontline Community Centre
frontlinecommunitycentre
http://fcccanada.org/

Nickon Photo & Video
நிக்கோன் போட்டோ & வீடியோ
Digital Album
டிஜிட்டல் அல்பம்





உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...



Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio

துயர் பகிர்வு



மண்ணில்
05.11.1968

விண்ணில்
25.09.2021

திரு இராமேஸ்வரன் வர்ணகுலசிங்கம்

(வர்ண ராமேஸ்வரன்)

தமிழிழ எழுச்சிப் பாடகர்

சிறுவிளான் கிராயட்டி – அளவெட்டி (பிறந்த இடம்), தமிழிழம், Toronto, CA

யாழ். அளவெட்டி சிறுவிளான் கிராயட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களை வதிடமாகவும் கொண்ட இராமேஸ்வரன் வர்ணகுலசிங்கம் அவர்கள் 25-09-2021, சனிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சங்கீதயூஷணம் வர்ணகுலசிங்கம், மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும்,

நயினாதீவைச் சேர்ந்த சதானந்தன் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சபர்மதி(மதி) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,

இளங்குமரன் (குமரன்), காயத்ரி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

ஜெயேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கலைஞானசிங்கம், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்வு இடம்: Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 Canada

பார்வைக்கு: ஞாயிறு, 10.10. 2021 நேரம்: மாலை 6:00 மணி – 9:00 மணி
திங்கள், 11.10.2021 நேரம்: காலை 08:00 மணி – 08:30 மணி

கிரியை: திங்கள், 11.10.2021 நேரம்: காலை 8:30 மணி – காலை 10:00 மணி

தகனம்: திங்கள், 11.10.2021 நேரம்: காலை 10:30 மணி – காலை 11:00 மணி

தகன இடம்: Highland Hills Crematorium
12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

தொடர்புகளுக்கு

வீடு – குடும்பத்தினர்: 416.269.8443

சகோதரி: 647.297.2381

– நண்பர்கள் –

தமிழீழ எழுச்சிப் பாடகர் திரு. வர்ண ராமேஸ்வரன் அவர்கள் சாவடைந்தார்.



நெஞ்சை உருக்கும் மாவீரர் நாள் பாடலான **"மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி"** என்ற பாடல் உட்பட தாயகப்பாடல்களைப் பாடிய பாடகர், சங்கீத, மிருதங்க கலாவித் தகரும், இசைக்கலாமணியுமான வர்ண ராமேஸ்வரன் அவர்கள் இன்று (25.09.2021) சனிக்கிமை பி.ப 02:30 மணியளவில் கனடாவில் சாவடைந்துள்ளார். கொரோனா தொற்றி னால் ரொறோன்ரோ மருத்துவமனையில் சிகிற்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிட மாகக் கொண்டவர் வர்ண ராமேஸ்வரன் அவர்கள். ஆரம்பக் கல்வியை அளவெட்டி சீனன்கோட்டை ஞானோதய வித்தியா சாலையிலும், பின்னர் உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றார்.

சிறுவயதிலேயே வாய்ப்பாட்டு, பண்ணிசை, வீணை, வயலின் எனும் கலைகளைத் தமது தந்தையாரான "கலாயூஷணம்" "சங்கீதரத்தினம்" வர்ணகுல சிங்கம் அவர்களைக் குருவாகக்கொண்டு கற்கத் தொடங்கியவர். பின்னர் மிருதங்கம், பியானோ அகிய வாத்தியக் கருவிகளையும் முறையாகக் கற்றுத்தேறிய பெருமைக்குரியவர்.

வடஇலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட வாய்பாட்டு, மிருதங்கம் ஆகியவற்றுக்கான பரீட்சைகளில் ஆசிரிய தரம் வரை கற்றுத்தேறி சங்கீத, மிருதங்க கலாவித்தகர் என்ற பட்டம் பெற்ற பின்னர், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுன்கலைக் கல்லூாயீல் இசைக்கலாமணி பட்டம் பெற்று, அங்கு ஐந்து ஆண்டுகள் இசை விரிவுரையாளராகவும் பணியாற்றி யவர்.

இலங்கை வானொலி மற்றும் தொலைக்காட்சிச்சேவைகளின் நிகழ்ச்சிகளில் இசைக்கலைஞராக இருந்து பல சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு இசையமைப்பாளராகவும் பணியாற்றியிருந்தார்.

இலங்கை இந்து கலாசார அமைச்சினால் இசைநடன ஆசிரியர்களுக்கு என நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளை தலைமை தாங்கி நடத்தியிருந்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசை மேற்படிப்பை மேற்கொண்ட வர்ண ராமேஸ்வரன், தமிழகத்தின் முதன்மைக் கலைஞர்களில் ஒருவரான திருவாரூர் பக்தவத்சலம் அவர்களிடம் மிருதங்கத்தையும் இசை மேதை ரி.எம். தியாரகராஜன், கல்கத்தா கிருஷ்ணமூர்த்தி, ரி. வி. கோபாலகிருஷ்ணன் ஆகியோரிடம் இசை நுணுக்கங்களையும் கற்றுத்தேறி, தமிழ் நாட்டில் பல இசைக்கச்சேரிகளையும் நடத்திப் பலரதும் பாராட்டைப்பெற்றவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து பல போராட்டத்திற்காக விடுதலைப் பாடல்களைப்பாடியிருக்கின்றார். அதில் மாவீரர் நாளில் மட்டும் ஒலிப்பரப்பாகும் பாடலான 'மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி' என்ற பாடல் வர்ண ராமேஸ்வரானால் பாடப்பட்டது. அத்துடன் பல மாவீரர்கள் நினைவுப் பாடல்கள், போராட்ட வெற்றிச் சமர் பாடல்கள், நல்லை முருகன் பாடல்கள் என அவரால் பாடப்பட்ட பாடல்கள் பல எம்முன்னே இருக்கின்றன.

1997 ஆம் ஆண்டு தமிழர்களின் போராட்ட குணத்தை வெளிப்படுத்தும் புற நானூறு பாடல்கள் பலவற்றை நவீன இசையில் இசையமைத்து (இவருடன் வேறு நபர்களையும் இணைந்து) இசைநாடகமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள் முன் அரங்கேற்றி பாராட்டைப் பெற்றிருந்தார். இதில் அன்று இம்ரான் - பாண்டியன் படையணியின் போராளிகள் குறித்த இசை நாடகத்தில் பாடல்களைப் பாடி நடித்திருந்தார்கள்.

புதுவை இரத்தினதுரை அவர்களின் வரிகளில் வர்ண ராமேஸ்வரன் அவர்கள் பாடிய மாவீரர் நாள் பாடல் வரிகள் கீழே பார்வையிடலாம்:

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!
வழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!

சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!

அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்ளின் நினைவுடன் வென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்ளின் நினைவுடன் வென்றிடுவோம்!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனைப்பேழைகளே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனைப்பேழைகளே!

கனடாவுக்குப் ரொறன்ரோவுக்குப் புலம் பெயர்ந்த வர்ண ராமேஸ்வரன் அவர்கள் மிருதங்க, நடன அரங்கேற்றங்களுக்கு முன்னணிப் பாடகராக விளங்கினார். வர்ணம் இசைக் கல்லூரியை அவர் அங்கு உருவாக்கி பல நகரங்களில் இசை வகுப்புக்களை நடாத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக வர்ணம் ஒன்லைன் இணைய இசைக்கல்லூரியை உருவாக்கி அதனை நிர்வகித்து வந்திருந்தார்.
இத்துடன் கனடாவில் தாயப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் தாய் அமைப்புடன் இணைந்து அன்றைய காலகட்டத்தில் நடத்தப்பட்ட பல போராட்டங்களுக்கான பல பாடல்களை இசையமைத்துப் பாடியுள்ளார் என்பது இங்கு நினைவூட்டத்தக்கது.

அவர் வாழ்ந்த காலத்தில் தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடனும் புலம் பெயர் நாட்டில் தாயகம் நோக்கிக் கனடாவில் செயற்பட்ட தாய் அமைப்புடனும் இறுதிவரை நின்று போராட்டத்தை வலுவாக்கும் இசைத்துறை ஊடான தனது கடமைகளை முடிந்தளவு செய்து தனது இசைப்பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். இந்தவகை



யில் எம்முன்னே வாழ்ந்த அந்த தேசப்பற்றாளனை நாமும் ஒரு கணம் நெஞ்சில் நிறுத்தி வணக்கம் செலுத்துவதே அவருக்கும் நாம் செய்யும் இறுதி மரியாதையாகும்.

நன்றி: புனிதபூமி

2022 ஆம் ஆண்டின்

உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை

விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203





thamilarvanikam@gmail.com



ஆதி இருப்புக்கால 2700 ஆண்டு பழமையான யாழ்ப்பாணக்கோட்டையின் அண்மைக்காலத்தொல்லியல் ஆய்வுகள் – ஓர் புதிய பார்வை

சிரேஸ்ட பேராசிரியர் - ப.புஸ்பரட்ணம், வரலாற்று, தொல்லியல் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

உலக நாடுகளின் பலவற்றின் வரலாறு பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் அந் நாடுகளில் நிலவிய வரலாற்று வாய் மொழிக் கதைகள், வட்டார வழக்கில் உள்ள மரபுவழிச் செய்திகள், ஐதீகங்கள், பாரம்பரிய சடங்குகள், நம்பிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. இவற் றின் அடியாகக் தோன்றி வளர்ந்த வர லாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய் வதில் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்ந்த தொல்லியல், மானிட வியல், வரலாற்று மொழியியல் முதலான ஆய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு. இது இலங்கைக்கும் பொருந்தும் என்பதை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலி ருந்து வெளிவரும் புதிய வரலாற்று ஆய்வுகளின் முடிவுகளும், அரச வரலாற் றுப் பட நூல்களில் ஏற்பட்டு வரும் மாற்றங் களும் கோடிட்டுக் காட்டுகின்றன. பௌத்த மதத்தின் பரவலைத் தொடர்ந்து தென் னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. இவ் வரலாற்று இலக்கியங்களில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் பிருந்து அநுராதபுரத்திற்கு வடக்கே திருகோண மலை உள்ளிட்ட பிரந்தியத்தை நாகதீபம் என்ற பெயரால் தனித்து அடையாளப் படுத்திக் கூறுவது சிறப்பாகக் சிறப்பாக நோக்கத்தக்கது. இப்பெயரே பழந் தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்கள், செப்பேடுகளில் நாக நாடு எனக்குறிப் பிடப்படுகின்றன. இவ்விரு பெயர்களுமே பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்து வடஇலங் கையின் பெருநிலப் பரப் பு வன்னி, வன்னிப்பற்று எனவும் பதினைந் தாம் நூற்றாண்டில் இருந்து தற்போதைய யாழ்ப்பாணம் யாழ்பாணயன்பட்டினம் எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளன. வடஇலங்கையின் இத்தனித்துவம் பௌ திக அடிப்படையில் மட்டுமன்றி பண்பாட்டு அடிப்படையிலும் ஏற்பட்டிருக்கலாம் என் பதை தொல்லியல், இலக்கிய மூலாதாரங் களும் உறுதி செய்வதாக உள்ளன.

பாளி இலக்கியங்களில் பண்டு தொட்டு வடபிரதேசம் தனித்து அடையாளப்படுத் திக் கூறப்பட்ட போதிலும் அநுராதபுரம், பொலநறுவை அரச தலைநகரங்களுக்கு தெற்கே மிகத் தொலைவிலுள்ள பிராந் தியத்தியங்களுடன் கொண்டிருந்த அரசி யல், பொருளாதார, பண்பாட்டு உறவு களை விரிவாகக் கூறும் போது இத்தலை நகரங்களுக்கு வடக்கே மீகக் கிட்டிட தொலைவிலுள்ள வடஇலங்கையுடனான உறவுகள் பற்றி மிக அரிதாகவே கூறுகின் றன. இதனால் பாளி இலக்கியங்களை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு எழுந்த இலங்கை வரலாற்றில் வடபிராந் தியத்தின் வரலாறானது கி.பி.13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது புகைபடர்ந்த தாகவே காணப்படுகின்றது. இந்நிலை யில் இந்நிலையில் 1970 களில் கந்த ரோடையில் பென்சில்வேனியப் பல் கலைக்கழக அரும்பொருள் ஆய்வார் விமலா பேக்கிளையின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான தொல்லியல் அகழ்வாய்வும், 1980 காலப் பகுதியில் கலாநிதி இரகுபதி மேற் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் பூர்வீக மக்கள் பற்றிய தொல்லியல் அகழ்வாய்வுகளும், மேலாய்வுகளும், அவரைத் தொடர்ந்து 1990 களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல் லியல் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து வடஇலங்கையில் பூநகரி, சாட்டி, முள்ளியான், பெரியபுளியங்குளம், செட்டிக்குளம், கட்டுக்கரை, நாகபடுவான் முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் வடஇலங்கைகும் இலங்கை யின் ஏனைய பிராந்தியங்களைப் போல் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு



உண்டு என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. அந்த உண்மைகளை மேலும் உறுதிப் படுத்துவதில் 2010 தில் இருந்து யாழ்ப் பாணக் கோட்டைப் பகுதியில் மேற்கொள் ளப்பட்டு வந்த தொல்லியல் ஆய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு.

வட இலங்கையில் 327 ஆண்டுகள் ஐரோப்பியர் மேலாதிக்கம் நிலவியதன் அடையாளமாக காணப்படும் நினைவுச் சின்னங்களில் யாழ்ப்பாணக் கோட் டைக்கு தனித்துவமான வரலாற்றுச் சிறப் புண்டு. யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு தெற் கே கடல் நீரேரியுடன் இணைந்துள்ள இக் கோட்டை இலங்கையில் உள்ள இரண்டா வது மிகப்பெரிய கோட்டையாகக் காணப் படுகின்றது. கி.பி 1621 அளவில் மண், கல்லைப் பயன்படுத்தி வட்ட வடிவில் போத்துக்கேயரால் இக் கோட்டை கட்டப் பட்டாலும் 139 ஆண்டுகள் (1658-1796) யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த ஒல்லாந் தரால் மீளக் கட்டப்பட்ட தோற்றத்துட னேயே தற்போதைய கோட்டை காணப் படுகின்றது. அக்கோட்டையில் சில மாற் றங்களை பிரித்தானியர் தமது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தியிருந்தாலும் அவை ஒல்லாந்தர் காலக் கோட்டையின் அடிப் படைத் தோற்றத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. அதனால் தான் இக் கோட்டை ஒல்லாந்தர் காலக் கோட்டை யென அழைக்கப்படுகின்றது.


போர்த்துக்கேயரால் நான்கு பக்கச் சுவர் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கோட் டையை ஒல்லாந்தர் நட்சத்திர வடிவில் ஐந்து பக்கச் சுவர்களைக் கொண்டதாக மாற்றியமைத்தனர். இந்த வடிவில் இலங் கையிலுள்ள ஒரேயொரு கோட்டை இது வாகும்.62 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் ஒவ்வென்றும் கீழ்ப்பகுதி 40 அடி அகல மும், மேற்பகுதி 20 அடி அகலமும், 30 அடி உயரமும் கொண் டவையாகக் காணப்படுகின்றது. இக்கோட்டைமீது படையெடுத்து வரும் எதிரிகளை இலகு வாக அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் சுவரின் உயரம் மேலிருந்து கீழ்நோக்கிப் பதிந்து காணப்படுகின்றது. கோட்டையின் வெளிப்புறச் சுவர்களைச் சுற்றி 20 அகலத்தில் ஆழமான அகழிகள் காணப்படுகின்றன. நான்கு பக்கமும் பாரிய பீரங்கித் தளங்களையும், பாதுகாப்பு அரண்களையும், காவற்கோபுரங்களை யும், சுரங்கங்களையும், சுடுதளங்களை யும் கொண்ட இக்கோட்டையைச் சுற்றி இரண்டு மைல் தொலைவில் 200 போர்த்துக்கேயப் படைவீரர்களும், உள் ளூர் படைவீரர்களும் பாதுகாப்பிற் காக நிறுத்தப்பட்டிருந்ததாக போர்துக்கேய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. 34 ஏக்கரில் அமைந்த கோட்டையின் உட்பகுதியில் நிர்வாக மையங்கள், படை வீரர்களின் இருப்பிடங்கள், ஆயுதக் களஞ் சிய அறைகள் (Tunnels), ஒல்லாந்தர்

மீளக்கட்டிய கிறிஸ்தவ தேவாலயம், இந்து ஆலயம், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஆளுநர் மாளிகை (Queen's House), சிறைச்சாலைகள், பிற நிர்வாகக் கட்டிடங்கள் என்பன காணப்படுகின்றன. ஒல்லாந்தர் ஆட்சியில் கொழும்பு, காலி முதலான இடங்களில் உள்ள கோட்டைகள் அந்தந்த மாவட்டங்களின் நிர்வாக மையமாகச் செயற்பட்ட போது யாழ்ப்பாணக் கோட்டை மட்டும் இராணுவ பாதுகாப்பு மையமாகவே செயற்பட்டு வந்துள்ளது.

இந்து சமுத்திர நாடுகளில் உள்ள கோட்டைகளில் யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமும், அழகும், சிறந்த தொழில்நுட்பத் திறனும், ஐரோப்பியர் காலக் கலை மரபும் கொண்ட கோட்டை என்ற சிறப்பிற்குரியது. 1984 இல் இலங்கையிலுள்ள ஒல்லாந்தர் காலக் கோட்டைகள் பற்றி ஆய்வு மேற்கொண்ட நெல்சன் என்வர் சம காலத்து சிறந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையை இங்கிலாந்திலுள்ள தலைசிறந்த கோட்டைகளுடன் ஒப்பிடும் அளவிற்கு சிறந்த வடிவமைப்புக் கொண்டதெனப் புகழ்ந்து கூறுகின்றார் (Nelson 1984). இத்தகைய சிறப்புக்குரிய இக் கோட்டை இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர், அதிலும் குறிப்பாக கடந்த மூன்று சகாப்த கால அனர்த்தத்தால் அதன் பொழிவையும், சிறப்பையும் இழந்து காணப்படுகின்றது. இக்கோட்டையை வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு சுற்றிவர அமைந்துள்ள பெரிய அரண்கள் கோட்டை என்பதனைப் புலப்படுத்தினாலும் உள்ளே இருந்த கட்டிடங்கள் பெருமளவிற்கு அழிவடைந்து பல இடங்களில் கற்குவியலாகவே காட்சியளிக்கின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்களில் யாழ்ப்பாணக் கோட்டை கட்டிய வரலாறு விபரமாகக் கூறப்பட்டுள்ளது. அதில் கோட்டை கட்டுவதற்கு வேண்டிய கோறல் கற்கள் அயலில் உள்ள வேலணை, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு முதலான இடங்களில் இருந்து பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் காங்கேசன்துறையிலிருந்து கோட்டை வரையில் உள்ளூர் மக்களை வரிசையாக நிற்கவைத்து காங்கேசன்துறையில் இருந்தும் கோட்டை கட்டுவதற்கான கற்கள் கொண்டுவரப்பட்டன. கோட்டையைச் சுற்றியுள்ள கடல்களில் இருந்து கோறல் கற்களைக் கொண்டுவந்த தோணிகள் ஒவ்வொன்றுக்கும் அக்காலத்தில் மூன்று பணம் கூலியாக வழங்கப்பட்டது. கடலில் இருந்து கற்களை சேகரித்து தோணியில் ஏற்றுவதற்கு அரைப்பணம் வழங்கப்பட்டது. தோணிகளுக்கு பாதுகாப்பாகச் செல்லும் அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 13 பணம் சம்பளமாக வழங்கப்பட்டது. கோட்டையைக் கட்டுவதில் போர்த்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மாரும் பங்கு கொண்டனர். அவர்களுள் தலைமை மேசனுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு பணமும், அவனுக்கு கீழே வேலை செய்யும் மேசனுக்கு நாள் ஒன்றுக்கு அரைப் பணமும், சிற்றாள்களாக வேலை செய்யும் ஒவ்வெருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 70 கரண்டி சாமி அரிசியும், கோட்டை கட்டுவோரை மேற்பார்வை செய்யும் பண்டாரத்திற்கு மாதம் ஒன்றுக்கு 8 பணமும் சம்பளம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும் கோட்டை கட்டுவதற்கு சுதை தயாரிக்கும் சுண்ணாம்புக் கால்வாய்கள் குடா நாட்டின் பல இடங்களில் உருவாக்கப்பட்டன. அவை சுண்ணக்கற்களைப் பதமாக்கி பண்ணைக் கரைக்கு கொண்டு செல்லப்பட்டன. அவற்றோடு கலப்பதற்கான சக்கரை மூட்டைகள் இந்தியாவில் கோவாவில் இருந்து தருவிக்கப்பட்டன. இவற்றோடு கலப்பதற்கான களிமண் குளங்களிலிருந்து பெறப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் யாழ்ப்பாணக் கோட்டை முழுக்க முழுக்க கோறல் கற்களைக் கொண்டே கட்டப்பட்டதென்ற கருத்தை புலப்படுத்துகின்றன.

ஆனால் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும், அழிவடைந்து காணப்படும் கிறிஸ்தவ ஆலயப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்விலும் கோறல் கற்களுடன் பல அளவுகளிலும், பல வடிவங்களில் அமைந்த சுண்ணாம்பு மற்றும் கருங்கற்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் அவதானிக்க கூடிய முக்கிய வேறுபாடு கோறல் கற்கள்குறிப்பிட்ட அளவுகளில் (10" x 6") வெட்டப்பட்டு பொழியப்பட்டு கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ள போது கருங்கற்களும், சுண்ணக் கற்களும் வேறுபட்ட அளவுகளிலும், வடிவங்களிலும் ஒழுங்கற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அக் கற்களில் பெரும்பாலானவை ஏற்கனவே இந்து ஆலயங்களுக்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் என்பதற்கு அவற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், அலங்காரங்கள், கற்களின் வடிவ அமைப்புக்கள் சான்றாகக் காணப்



படுகின்றன. இக்கற்கள் எங்கிருந்து பெறப்பட்டதென்பதற்கு போர்த்துக்கேய ஒல்லாந்த ஆவணங்களில் விபரமாகக் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அவர்கள் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் பெரிதும், சிறிதுமாக இருந்த ஏறத்தாழ 500 ஆலயங்களும், பெரிய வசிப்பிடங்களும் இடிக்கப்பட்டு அவற்றிலிருந்த கற்கள் கோட்டை கட்டப் பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக நல்லூர் இராசதானியை 1519 இல் வெற்றி கொண்ட போர்த்துக்கேயர் அங்கிருந்த ஆலயத்தை தமது பாசறையாகப் பயன்படுத்திவிட்டு பின்னர் அவ்வாலயத்தையும் இடித்தழித்து அக்கற்களைக் கோட்டை கட்டப் பயன்படுத்தியதாக போர்த்துக்கேய ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இதனால் கோட்டையில் கோறல் கற்கள் கலந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலயங்களின் கற்களின் முக்கியத்துவத்தை இக்கோட்டை கட்டிய வராலாற்று நிகழ்ச்சிகளின் பின்னணியில் நோக்கப்படுவது பொருத்தமானதாகும்.

இந்நிலையில் இலங்கை-நெதர்லாந்து அரசுகளின் நிதி உதவியுடன் மூன்று ஆண்டுகால திட்டத்தில் இக்கோட்டையை பழைய நிலைக்கு கொண்டு வரும் புனர்நிர்மானப் பணியை தற்போது இலங்கை தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக தொல்லியல் திணைக்கள அறிஞர்கள், யாழ்ப்பாண தொல்லியல் பட்டதாரி மாணவர்கள் பலதரப்பட்ட தொழில்நுட்பவியலாளர், தொழிலாலர்கள் என நூற்றுக்கணக்கான பணியாளர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் தமது ஆரம்ப புனர்நிர்மாணப் பணிகளாக கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மாதிரி அகழ்வாய்வுகளையும், இடியுண்ட கட்டிடப்பகுதிகளில் தொல்லியல் மேலாய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வுகளின் போது கிடைத்துவரும் தொல்லியல் ஆதாரங்கள் கோட்டையின் வரலாற்றுக்கு மட்டுமல்ல இப்பிரதேச பூர்வீக வரலாற்றுக்கும் புது வெளிச்சம் ஊட்டுபவையாக அமைந்துள்ளன.

கோட்டைப் பிரதேசத்தின் தொல்லியல் ஆய்வுகள்

கோட்டைப் பிரதேசத்தில் இதுவரை நான்கு இடங்களில் மாதிரிக் குழி அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2011 இல் கோட்டை வாசல்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வின் போது போத்துக்கீசர் காலத்திற்குகு முந்திய சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவ் ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு கோட்டை வாசல் தொடங்கும் இடத்திற்கும் கடற்கரைப் பக்கமாக உள்ள வீதிக்கும் இடையில் தற்போதைய கிறிஸ்தவ ஆலயத்திற்கருகில் முதலாவது அகழ்வாய்வு நடாத்தப்பட்டது. இவ் இடத்தில் 10x6 அடி நீள அகலத்தில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழியில் ஏறத்தாழ 2.5 அடி ஆழம் வரை நடாத்தப்பட்ட அகழ்வின் போது மூன்று வேறுபட்ட கலாசார மண் அடுக்குகளை அடையாளம் காணமுடிந்தது. இக்கலாசார மண் அடுக்குகளில் பல்வேறு வடிவங்களில் அமைந்த பலதரப்பட்ட மட்பாண்ட ஓடுகள் கிடைத்தாலும் மூன்றாவது கலாசாரப் படையில் மனித எலும்புக் கூடுகளுடன் பெருமளவு சீன மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மட்பாண்டங்களின் காலம் கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதால் மூன்றாவது கலாசாரப் படையின் காலம் போத்துக்கீசர் யாழ்ப்பாணம் வருவதற்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது உறுதியாக தெரிகின்றது. ஆயினும் இவ் வாய்வுக் குழியில் இயற்கை மண்ணை அடையாளம் காணும் வரை தொடர்ந்து அகழ்வாய்வு நடாத்தப்படாததால் அவ் வாய்வுக் குழியில் இருந்திருக்கக் கூடிய தொன்மையான ஆதாரங்களை வெளிக் கொண்டு வர முடியவில்லை.

இரண்டாவது அகழ்வாய்வு கோட்டையின் உட்பகுதியில் ஆயுதக் களஞ்சிய அறைக்கு முன்னால் நடாத்தப்பட்டது. தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா தலைமையில் நடாத்தப்பட்ட இவ்வகழ்வாய்வில் 6 X 6 அடி நீள அகலத்தில் இயற்கை மண்ணை அடையாளம் காணும் வரை அகழ்வு நடாத்தப்பட்டது. இவ்வகழ்வாய்வின் முழுமையான பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படாவிட்டாலும் இவ்வகழ்வாய்வுக்கு பொறுப்பாக இருந்த தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா பத்திரிகைகளுக்கு வழங்கிய செய்திக் குறிப்பில் இவ்வகழ்வாய்வுக் குழியில் கிடைத்த தொடக்க கால ஆதாரங்கள் கி.பி 5ஆம் நூற்றாண்டை அதாவது போத்துக்கீசர் யாழ்ப்பாணம் வருவதற்கு 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவது அகழ்வாய்வு ஐரோப்பியப் படை வீரர்கள் தங்கியிருந்த கட்டிடத்திற்கு முன்னால் நடாத்தப்பட்டது. இவ்வகழ்வாய்வு முன்கூட்டியே திட்டமிடப்பட்டதல்ல. இவ்விடத்தில் பிற தேவைக்காக 6x6 அடி நீள அகலத்தில் 7 அடி ஆழம் வரை குழி ஒன்று வெட்டிய போது வெளிவந்த அரிய தொல்லியல் சின்னங்கள் பின்னர் அவ்விடத்தில் அகழ்வாய்வு செய்ய காரணமாக அமைந்தது. இக் குழியில் கலாசார மண் அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்பட்டாலும் இவற்றிடையே காணப்பட்ட ஆதாரங்கள் பூர்வீக குடியிருப்புக்களைத் தொடர்ந்து உரோமர், அரேபியர், சோழர், சீனர் யாழ்ப்பாண இரசதானி மற்றும் ஐரோப்பியர் காலத்திற்கு உரியவை என்பதை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

நான்காவது அகழ்வாய்வு இவ்வாய்வுக் குழிக்கு அருகே 2017ஆண்டின் பிற்பகுதியில் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல் திட்டத்தின் அனுசரணையுடன் பிரித்தானிய டர்காம் (Durham) பல்கலைக் கழகமும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் பிரிவும் இணைந்து மேற்கொண்டிருந்தது. இவ்வகழ்வாய்வு சமகால தொல்லியல் அறிஞர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான பேராசிரியர் கொனிகாம் வழிகாட்டலில் நடைபெற்றமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதன் போது நவீன தொழில் நுட்பக்கருவிகளைப் பயன்படுத்தி விஞ்ஞானபூர்வமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டதால் இங்கு கிடைத்த தொல்பொருட்ச் சின்னங்களின் காலம், அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பான கணிப்பீடுகள் நம்பகத் தன்மை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வுக் குழியில் இயற்கை மண்படைவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் ஒன்பது வேறுபட்ட கலாசார மண் அடுக்குகள் அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் இயற்கை மண்ணோடு ஒட்டிய கலாசார மண் அடுக்கில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப்பண்பாட்டிற்குரிய கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் (Black and RedWare) கி.மு.700க்கும் கி.பி.100 நூற்றாண்டுக்கும், நரைநிற மட்பாண்டங்கள் (Grey Ware) கி.மு. 500க்கும் கி.பி. 200க்கும் இடைப்பட்டதெனவும் கணிப்பிடப்பட்டுள்ளன. இக்காலக்கணிப்புகள் போத்துக்கேயர் வருகைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னரே கோட்டைப் பிரதேசம் முக்கிய குடியிருப்புகளைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளதை உறுதி செய்கின்றன.

மேலும் இவ்வகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு காலகட்டத்திற்குரிய தொல்பொருட்ச் சின்னங்கள் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட கோட்டைப் பிரதேசத்தின் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. அவற்றுள் பல்வேறு காலத்தை சேர்ந்த பல நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள் கிடைத்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்கள் போத்துக்கேயர் வருகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தற்போதைய யாழ்ப்பாண நகரம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கால அடிப்படையில் உறுதிப்படுத்த உதவுகின்றன. பேராசிரியர் கொனிங்காம் அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களை முக்கிய ஆதாரமாகக் கொண்டு கோட்டைப் பிரதேசத்துடன் கடசார் வாணிபத்தில் ஈடுபட்ட நாடுகளையும், அவற்றின் காலங்களையும் கணித்துள்ளார். அவற்றுள இந்திய Northern Black Polished Ware (500 BC to 100 BC), உரோம நாட்டு Rouletted Ware (200 BC to 200AD), தமிழக Arikkamdu Type- 10 (200 BC to 200 AD), Arikkamdu Type- 18(300 BC to 200AD), உரோம கிரேக்க நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்ட Omphalos Ware (200 BC to 100AD), உரோம நாட்டு Arretine Ware (100 BC to 100AD),

Amphora (200 BC to 100AD), இந்திய Red Polished Ware (100 BC to 800AD), தமிழகத்திலும் இலங்கையிலும் பயன் பாட்டிலிருந்த White Slipped with Red Paint (600 AD to 1100AD), Appliqué Ware (1300 AD to 1400AD), ஈரான் ஈராக் நாடுகளுக்குரிய Sasanian Islamic Ware (200 BC to 700AD), Buff Ware (400 AD to 800 AD), Lustre Ware (800 AD to 1000 AD), Imitation Lustre Ware (800 AD to 1000 AD), White Tin - Glazed Ware (800 AD to 1000 AD), Lead- Glazed Ware (800 AD to 1000 AD) மற்றும்சீன நாட்டுக்குரிய Changsa Painted Ware (800 AD to 900 AD), Xing Ding White Wares (800 AD to 1000 AD), Yue green Ware (800 AD to 1000 AD), Coarse Stone Ware (700 AD to 1100 AD), Green Splashed White Ware (800 AD to 1000 AD), Chinese Porcelain (1400 AD to 1700 AD) முதலான நாடுகளுக்குரிய மட்பாண்டங் கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

மேற்கூறப்பட்ட அகழ்வாய்வைத் தவிர 1995 இற்கு முன்னர் கோட்டையை மையப்படுத்தி நடந்த போரில் பெரிதும் அழிவடைந்த கோட்டையின் உட்பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் பெறுபேறுகள் இங்கு சிறப் பாகக் குறிப்பிடத்தக்கதாகும். வெளித் தோற்றத்தில் காணப்படும் அரண்கள், பீரங்கித் தளங்கள் முழுமையாக கோட் டையின் அடையாளமாக இருப்பினும் கோட்டையின் உட்பகுதியில் 35 ஏக்கரில் அமைந்திருந்த கிறிஸ்தவ தேவாலயம், போர் வீரர்களுக்கு, நிர்வாக அதிகாரி களுக்கு அமைக்கப்பட்ட கல்லறைகள், நினைவிடங்கள், இராணி மாளிகை, படை வீரர் தங்கியிருந்த இடங்கள், நிர்வாக அலுவலகங்கள், சிறைச்சலை கள், ஆயுதக் களஞ்சியங்கள், பாதுகாப்பு அரண்கள் என்பன பெருமளவுக்கு அழி வடைந்த நிலையில் காணப்பட்டன. இந் நிலையில் 2010 இல் இருந்து இக்கோட் டை மீள் புனரமைப்பு செய்வதற்காக புதையுண்டிருந்த கட்டிட அழிபாடுகள் அகற்றப்பட்டு அவ்விடங்களில் களவாய் வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வின் போது ஐரோப்பியர் கால கட்டிட எச்சங்கள், பலவகை மட்பாண்டங் கள், நாணயங்கள் என்பவற்றுடன் ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட கால உள்நாட்டு வெளிநாட்டு மட்பாண்டங்கள், பலவகை நாணயங்கள், சிலைகள், சிற்பங்கள், ஆலயங்களின் கட்டிட எச்சங் கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ் ஆதாரங்கள் கோட்டை அமைந் துள்ள இடங்களிற்கு 2000 ஆண்டு களுக்கு குறையாத வரலாறு உண்டு என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன.

கோட்டைப் பிரதேசத்தின் பூர்வீக மக் கள்.யாழ்ப்பாண நகரின் தொன்மையும் சிறப்பும் பற்றிய வரலாற்று ஆய்வில் அந் நியரான போர்த்துக்கேயர் கட்டிய கோட் டையுடன் முதன்மைப்படுத்திப் பார்க்கும் மரபு நீண்ட காலமாக இருந்து வருகின் றது. ஆனால் 2010 இல் இருந்து இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் ஆதாரங்கள் கோட்டை அமைந்த இடத்திற்கு தொன்மையான தொடர்ச்சியான நீண்ட பாரம்பரிய வர லாறு உண்டு என்பதும், அவ்வரலாற்றுப் பின்புலம் தான் இவ்விடத்தை கோட்டை கட்டுவதற்குப் பொருத்தமான இடமாக போர்த்துக்கேயர் தெரிவு செய்திருக்கலாம் என்பதும் தெரியவருகின்றது. கோட்டைக் கு மிக கிட்டிய தொலைவில் கிழக்கே அரியாலை, பூம்புகார், தென்கிழக்கே மண்ணித்தலை, கல்முனை, தெற்கே சாட்டி, மேற்கே ஆனைக்கோட்டை முதலான இடங்களில் யாழ்ப்பாணத்தின் தொடக்க கால மக்களான பெருங்கற்கால அல்லது ஆதி இரும்புக்காலப் பண்பாட்டுக் குரிய மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங் கள் கிடைத்துள்ளன. இதனால் அப்பண் பாட்டுக்குரிய மக்கள் கோட்டை அமைந் துள்ள பிரதேசத்திலும் வாழ்ந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. கந்தரோடையில் 1970களில் இப் பண்பாடு பற்றி ஆய்வு நடாத்திய அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய் வாளர் விமலாபேக்கிலே கந்தரோடைப் பண்பாடு தமிழகப் பெருங்கற்காலப் பண் பாட்டுடன் கொண்டுள்ள நெருங்கிய ஒற்று மையைச் சுட்டிக்காட்டி கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டு மக் கள் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்திருக்கலாம் அல்லது கந்தரோடையில் வாழ்ந்த மக்கள் தமிழகத்துடன் நெருங் கிய தொடர்புகளைக் கொண்டிருக்கலாம் எனக் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

கோட்டைக்குள் ஐரோப்பியர் பயன்படுத்



திய இருப்பிடங்களுக்கு முன்னால் நடாத் தப்பட்ட அகழ்வாய்வில் ஏறத்தாழ கி.பி 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோம மட்கலன்களைத் தொடர்ந்து அதன் கீழ் உள்ள கலாசாரப் படை கோட்டைப் பிர தேசத்தில் வாழ்ந்த தொடக்க கால குடியிருப்புகளுக்கு உரியதாகக் காணப் படுகின்றது. ஆயினும் இவ் அகழ்வாய் வின் போது பெருமளவு உரோம மட் கலன்களை கண்டுபிடித்த போதும் அதன் கீழ் அமைந்த கலாசாரப் படையை ஆய்வு செய்வதற்கு ஆய்வுக் குழிக்குள் கடல் நீர் உட்புகுந்தமை பெரும் தடையாகக் காணப்பட்டது. ஆயினும் இக் கலாசாரப் படையில் இருந்தும், உரோம மட்கலன் களுடன் கலந்த நிலையிலும் பலவகை மட்கலன்களைக் கண்டறிய முடிந்தது. அவற்றுள் சில பெருங்கற்காலப் பண் பாட்டுக்குரிய கறுப்பு சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகளாகும். அவ் மட்பாண்ட ஓடுகளில் மென்மைத் தன்மை பெருங்கற்கால மட் பாண்ட ஓடுகளை விடக் குறைவடைந்து காணப்படுகின்றது. ஆயினும் இதன் மேற்படையிலுள்ள உரோம மட்கலன் களின் (Raulatted Wares) காலம் கி.பி 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததால் அதற்கு முட்பட்ட குடியிருப்புக்களுக்குரிய கலாசார காலம் கி.மு 3 ஆம் அல்லது கி.மு 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. ஆயினும் பேராசிரி யர் கனிங்காம் தலைமையில் மேற்கொள் ளப்பட்ட கோட்டை அகழ்வாய்வில் கண்டு பித்த கறுப்பு – சிவப்பு நிற மட்பாண்டத்தின் காலம் கி.மு 700 எனக் கணிப்பிடப்பட்டுள் ளது. இதிலிரிருந்து இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னரே கோட்டைப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இக்குடியிருப்புக்கள் தொடர்ந்தும் இங்கு நிலைத்திருந்ததை இப்பிராந்தியத்தில் கிடைத்த சற்றுப் பிற்பட்ட காலத் தொல் லியல் ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. அவற்றுள் இங்கு கிடைத்த நாட்டுப்புற தெய்வங்களுக்குரிய சுடுமண் சிற்பம் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இச்சிற்பம் கோட்டையின் மேற்குப் புறத்தில் அமைந் துள்ள (Site-08) கோட்டை அரணின் (Rampart) அத்திவாரத்தின் கீழ் நிலமட்டத் திலிருந்து 4.5 அடி ஆழத்தில் கண்டெடுக் கப்பட்டதாகும். முற்றாக அழிவடைந்த இவ்வரணின் அத்திவாரம் இயந்திரத்தின் உதவியோடு தோண்டியெடுக்கப் பட் டதனால் அதன் கீழ் அமைந்திருந்த கலாசார அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்பட்டன. ஆயினும் இச்சிற்பத்துடன் பலவகை மட்பாண்டங்களும், செங்கட்டி களும் வெளிவந்ததனால் இக்கோட்டை அரண் கட்டப்படுவதற்கு முன்னர் அவ் விடத்தில் குடியிருப்பு அல்லது ஆலயம் இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. மண்ணோடு மண்ணாகக் காணப்பட்ட இச்சிற்பத்தின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்த இவ்விடத்தின் புனரமைப்புக்கு பொறுப்பாகவிருந்த ஆய்வு மேற்பார்வை யாளர் திருமதி ராகினி இச்சிற்பத்தை சரிவர அடையாளம் கண்டு உரிய முறை யில் துப்பரவு செய்து அதைத் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார். சுடுமண்ணால் அமைந்த இச்சிற்பம் 6.3 செ.மீ உயரமும் 6.6 செ.மீ அகலமும் 2.5 செ.மீ சுற்றளவும் கொண்டது. இது அச் சினால் வடிவமைக்கப்பட்ட புடைப்புச்சிற் பம் என்பதை அதன் வடிவமைப்பும், அதன் உருவங்களும் உணர்த்து கின்றன. பெருமளவுக்கு வட்டவடிவில் அமைந்த இச்சுடுமண் தட்டின் ஒரு பக்கத்தில் மூன்று உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு பெண் உருவங்கள் என்பது தெளிவாகக் காணப் படுகின்றன. மூன்றாவது உருவம் ஆணுக்குரியதெனப் பேராசிரியர் இரகுபதி கூறுகின்றார். இச்சிற்பத்தை ஒரு இடத்தில் வைத்து வழிபடுவதற்கு ஏற்ற வகையில் அதன் கீழ்ப்பகுதியில் தட்டையான பீடம் காணப்படுவதுடன் அதன் மேற்பகுதி திருவாசி போன்ற வடிவில் செதுக்கப்பட்டு அதன் மேற்பகுதியில் சிறிய முடியொன் றும் காணப்படுகின்றது.

தமிழகத்தில் கி.பி 7ஆம் நூற்றாண்டி லிருந்து ஆகம மரபில் கற்களைப் பயன் படுத்தி ஆலயங்கள், தெய்வச் சிலைகள், சிற்பங்கள் வடிவமைப்பதற்கு முன்னர் சுடுமண்ணால் செய்யப்பட்ட சிலைகள், சிற்பங்களை அக்கால மக்கள் வழிபட்டு வந்தனர். இதற்கு தமிழகத்தில் மாளிகை மேடு, அரிக்கமேடு, மாமல்லபுரம் முத லான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கிடைத்த சுடு மண் சிற்பங்கள் சான்றாகும். இதற்குப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இம்மரபு சமகால இலங்கை இந்துக் கலை மரபிலும் பின்பற்றப்பட்டதற்கு பல ஆதாரங்கள் உண்டு. அண்மையில் வவுனியா மாவட் டத்தில் சாஸ்திரி கூழாம் குளத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்விலும் இது போன்ற சிற்பங்கள் கிடைத்துள்ளன. இதனால் யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த இச்சிற்பத்தை அக்காலத்தில் கோட்டைப் பகுதியில் வாழ்ந்த மக்களால் வழிபடப்பட்ட நாட்டுப்புறத் தெய்வங்களாகக் கருத இட முண்டு.

இலங்கையில் புராதன குடியிருப்பு மையங்களில் காணப்பட்ட சான்றுகளுள் பெண் உருவம் பொறித்த நீள் சதுர நாணயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பல அளவுகளிலும், பல வடிவங்களிலும் அமைந்த இந்நாணயம் கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. வட இலங்கையின் புராதன குடியிருப்பு மையங்களில் இவ்வகை நாணயங்களே அதிக அளவில் கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் இலங்கையில் வெளியிடப்பட்டதென்பதற்கு அந்நாணயங்களை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்கள் புராதன குடியிருப்பு மையங்களில் கிடைத்திருப்பது சான்றாகும். இந் நாணயங்களை இலங்கையின் குறுநில அரசர்கள், வணிக குழுக்கள் வெளியிட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. 1917 இல் கந்தரோடையில் களவாய்வினை மேற்கொண்ட போல் பீரிஸ் இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து அதில் உள்ள பெண் உருவம் தாமரை மலரில் நிற்பது போல் பொறிக்கப்பட்டுள்ளதை ஆதாரமாகக் காட்டி அதற்கு லக்சுமி நாணயம் என முதன் முதலாகப் பெயரிட்டுள்ளார். அவரால் இடப்பட்ட பெயரே இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் கிடைத்துள்ளன. இவ்வாதாரம் இங்கு புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கு மேலும் சான்றாகும்.

கோட்டைப் பிரதேசமும் அயல் நாட்டுத் தொடர்புகளும்

யாழ்ப்பாணக் கடல்நீரேரியுடன் இணைந்துள்ள யாழ்ப்பாணக் கோட்டையின் அமைவிடம் தென்னிந்தியாவின் தென் பகுதியில் குறிப்பாக தமிழகத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளது. இலங்கை வரலாறு இந்தியப் பண்பாட்டுச் செல்வாக்கிற்குட்பட்டு வந்தாலும் அதன் ஆதி கால, இடைக்கால அரசியல் பொருளாதார பண்பாட்டு வரலாறு பெருமளவுக்கு தமிழகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்ததற்கே அதிக சான்றுகள் காணப்படுகின்றன. அதில் இலங்கைத் தமிழக உறவின் குறுக்கு நிலமாக வட இலங்கை சிறப்பாக யாழ்ப்பாணம் காணப்படுவதனால் தமிழகத்தில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்க வாயிலாக இப்பிராந்தியம் இருந்துள்ளது எனலாம். ஆதியில் யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள பிரதேசத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலுள்ள தீவுகள் ஓர் இணைப்பு பாலமாக இருப்பதனால் தமிழகச் செல்வாக்கு இப்பிராந்தியத்திலும் அவ்வப்போது ஏற்பட்டிருக்கும் எனக் கூறலாம்.

இலங்கையின் ஆதிகால வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் இலங்கையின் அயல்நாட்டு உறவுகள் வட இலங்கையிலுள்ள மாதோட்டப்பட்டினம், ஜம்புகோளப்பட்டினம் ஊடாக நடந்ததாகக் கூறுகின்றன. இலங்கையின் ஏனைய துறைமுகங்களை “தொட்ட” எனப் பாளி மொழியில் கூறும் போது இவ்விரு துறைமுகங்களையும் பட்டின எனக் கூறியிருப்பதும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இந்த அயல் நாட்டு உறவில் குறிப்பாக வணிக உறவில் கோட்டையின் அமைவிடத்திற்கும் முக்கிய பங்குண்டு என்பது தெரியவருகின்றது. இதன் அமைவிடம் மேற்கே இந்திய உரோம, அரேபிய நாடுகளுடனும், கிழக்கே தென்கிழக்காசியா, கிழக்காசிய நாடுகளுடனும் நடைபெற்ற கடல் சார் வாணிபத்தில் முக்கிய பரிவர்த்தனை மையங்களில் ஒன்றாக இருந்துள்ளது. அதனையே கோட்டைப் பகுதியில் கிடைத்து வரும் தொல்லியல் ஆதாரங்களும் உறுதி செய்கின்றன.

இலங்கையின் நிலையமும் இங்கு இயற்கையாகக் கிடைத்த வணிகப் பொருட்களும் பண்டுதொட்டு அயல்நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்த காணரமாக அமைந்தது. ஆதியில் வட இலங்கையின் வணிகத் தொடர்புகள் பெருங்கற்கால பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதை மாந்தை, பூநகரி, கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்த சிலவகை மட்கலன்கள், கல்மணிகள், உலோகப் பொருட்கள் என்பன உறுதிசெய்கின்றன. இவ்வர்த்தகத்தில் தென்னிந்தியா சிறப்பாகத் தமிழ் நாடு முக்கிய பங்கு வகித்தள்ளது. கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த விலையுயர்ந்த மட்பாண்ட வகைகள் பெருங்கற்காலப் பண்பாடுகாலத்தில் இருந்து தமிழகத்திற்கும் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்திற்கும் இடையே வணிக உறவு இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. கி.பி 1 ஆம் நூற்றாண்டுக்குரிய பெரிப்பிளஸ் எனும் நூலில் உரோம வணிகர்கள் இலங்கைக்கு வராமலே ஆரம்பத்தில் தென்னிந்திய தறைமுகங்களில் இலங்கைப் பொருட்களைப் பெற்று திருப்தி



அடைந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சகாப்தத்தில் உரோமப் பேரரசில் ஏற்பட்ட அமைதியும் உட்பலஸ் பருவக் காற்றின் உதவியைக் கண்டுபிடித்த மையும் உரோம அரசின் செல்வமும் அரசியல் அமைதியையும் கீழைத்தேய வாசனப் பொருட்களுக்கு மேற்கு நாடுகளில் மதிப்பை ஏற்படுத்தியது. அதனால் உரோம வர்த்தகர்களின் வருகை தமிழ் நாடு, ஆந்திரம், இலங்கை முதலான பிரதேசங்களில் அதிகரித்தது. உரோம ரோடு தமிழ்நாடு கொண்ட வர்த்தக உறவை பட்டினப்பாலையும், மதுரைக் காஞ்சியும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதை அரிக்கமேடு, உறையூர், கரூர், காவிரிப் பூம்பட்டினம், காஞ்சிபுரம் முதலான இடங்களிற் கிடைத்த உரோம நாட்டுத் தொல்லியல் சின்னங்களும் உறுதி செய்கின்றன. தொலமி, பிளினி ஆகிய மேற்கு நாட்டவரது குறிப்புகளிலும் இவ்வர்த்தக உறவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

தொடக்க காலத்தில் தமிழ்நாட்டு வணிகர்கள் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து ஏலம், கறுவா, மிளகு போன்ற வாசனைப் பொருட்களையும் முத்து, இரத்தினம், யானை, யானைத்தந்தம் முதலான பொருட்களைப் பெற்று தென்னிந்தியத் துறைமகங்கள் ஊடாக உரோமுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். அதேபோல் இலங்கைக்குத் தேவையான குதிரை சில உணவுப் பொருட்கள், பலதரப்பட்ட மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், மது வகைகள் என்பன தென்னிந்திய துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டு பின்னர் அங்கிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. இந்நிலை கி.பி 1 ஆம் நூற்றாண்டளவில் மாற்றமடைந்தது. உரோம நாட்டு வர்த்தகர்களே இலங்கை யில் நேரடியாக வணிக நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவ்வணிக நடவடிக்கை கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந் திருந்ததை அனுராதபுரம், பொம்பரிப்பு, மாந்தை, திரகோணமலை, கந்தரோடை, பூநகரி, பொலநறுவை போன்ற இடங் களில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாட்டுக் குரிய நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. சமகாலத்தில் இவ்வர்த்தகத் தொடர்பு யாழ்ப்பாணக் கோட்டைப் பிராந்தியத்திலும் ஏற்பட்டிருந்ததை அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தகின்றன.

கோட்டைப் பிரதேசத்தில் உரோமரின் வரத்தகத் தொடர்புகள் கி.பி 1ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்டிருக்கலாம் என்பதனை இங்கு மிகச் செறிவாக கிடைத்த உரோம மட்கலன்கள் உறுதிப்படுத்துகின்றன. கொற்றிங்டன் 1924 வெளியிட்ட தனது நூலில் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் மட்குடம் ஒன்றில் சில பொன் நாணயங்களைக் கண்டு பிடித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். உரோமர் பொன் நாணயங்களைத் தொடர்ந்து வெளியிட்ட செப்பு நாணங்கள் பெரும் பாலும் கி.பி 2ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதால் கோட்டைப் பிரதேசத்தில் கிடைத்த பொன் நாணயங்கள் இப் பகுதியில் உரோமருக்குள்ள தொடர்பு கி.பி 1ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டிருக் கலாம் எனக் கருத இடமுண்டு.

கோட்டையின் உட்பகுதியில் மெற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் உரோம மட்பாண்ட சிதைவுகள் அடையாளம் காணப்பட்டாலும் ஜரோப்பியரின் இருப்பிடங்களுக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்த உரோம மட்பாண்டங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஆய்வுக் குழியில் ஐந்தாவது கலாசாரப் படையில் செறிவாகக் காணப்பட்ட மட்கலன்களில் சில அதற்கு முற்பட்ட குடியிருப்புக்களுக் குரிய மட்பாண்டங்களுடன் கலந்த நிலையிலும் காணப்பட்டன. இங்கு கிடைத்த மட்பாண்டங்களில் ரௌலடட் மட்பாண்டங்கள் (Roulette Ware), அரிட்டைன் மட்கலன்கள் (Arretine Ware), ஆம்போராச் சாடி (Amphorae Jar) என்பன சிறப் பாகக் குறிப்பிடத்தக்கன. உரோம வர்த்தகத்தில் மதுபானம், எண்னை போன்ற திரவப் பொருட்களைப் பாதுகாக்க ஒருவகைச் சாடி பயன்படுத்தப்பட்டது. இவை ஆம்போராச் சாடிகள் என அழைக்கப்பட்டது. இவை மிருதுவான களிமண்ணால் வனையப்பட்டு பழுப்பு நிறத்தினை உடையனவாக விருக்கும். இவற்றின் அடிப்பகுதி கூராகவும், வாய்ப்பகுதி மூடியதாகவும், கழுத்துப் பகுதியின் இருபுறமும் கைப்பிடிகள் உடையதாகவும் காணப்படும். இதிலே கைபிடிகள் இருப்பதால் ஓரிடத்திலிருந்த இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் கூர்மையான அடிப்பகுதி இருப்பதால் நிலத்தில் ஊன்றி வைப்பதற்கும் வசதியாக இருந்தது. இவை தமிழ்நாட்டில் அரிக்கமேடு, வசவ சமுத்திரம், கரூர் அகிய இடங்களில் கிடைத்துள்ளன. கோட்டை அகழ்வாய்வில் இவ்வகைச் சாடிகள் முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் சாடியின் உடைந்த பாகங்களும், அவற்றின் காற்பகுதிகள் சிலவும் கிடைத்துள்ளன. இவை உரோம நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதால் இலங்கையில் உரோமரின் நேரடி வர்த்தகம் நடைபெற்ற இடங்களில் கோட்டைப் பகுதியும் ஒன்று எனக் கருத இடமுண்டு.

இலங்கைத் தொன்னிந்திய வர்த்தகத்தில் உரோமரின் செல்வாக்கு கி.பி 5ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படையாக வீழ்ச்சியடைய மேற்காசியாவில் ஏற்பட்ட அராபியரின் வர்த்தக எழுச்சி இப்பிராந்தியங்கள் செல்வாக்குப் பெறக் காரணமாகியது. இவற்றை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்கள் வட இலங்கையில் மாந்தை, பூநகரி, கந்தரோடை போன்ற இடங்களிலும் தமிழகத்தில் அரிக்கமேடு மாழிகைமேடு போன் இடங்களிலும் கிடைத்துள்ளன. இவ்வராபியரின் வர்த்தக எழுச்சியில் மாதோட்டம் முக்கிய துறைமுகமாக மாறியதை அங்கு கண்டுபிடிக்கப்பட்ட செறிவான மட்கலன்கள் உறுதி செய்கின்றன. சமகாலத்தில் அராபியரின் வர்த்தக நடவடிக்கைகள் கோட்டைப் பகுதியிலும் ஏற்பட்டிருந்ததை அகழ்வாய்விலும், தொல்லியல் மேலாய்விலும் கிடைத்த சிலவகை மடபாண்டங்கள் உறுதிசெய்கின்றன.

கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால இலங்கை வரலாற்றின் அயல்நாட்டு உறவுகளில் கோட்டைப் பிரதேசம் வட இலங்கையில் அதிக முக்கியத்தவத்தைப் பெற்றிருக்கலாம் என்பதனை இங்கு கிடைத்த நாணயங்கள், மட்பாண்டங்கள், கல்வெட்டுக்கள் என்பன உறுதி செய்கின்றன. கோட்டையில் கிடைத்த அயல்நாட்டு நாணயங்களில் சோழ நாணயங்கள் எண்ணிக்கையில் அதிகமாகும். இங்கு சோழ நாணயங்களுடன் சோழரைத் தொடர்ந்து தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சேர, பாண்டிய நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்துடன் களவாய்விலும், அகழ்வாய்விலும் கிடைத்த சிலவகை மட்பாண்டங்கள் சோழர் கால மரபைச் சார்ந்தவையாகவுள்ளன. இம்மட்பாண்டங்கள் தமிழகத்தில் தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற இடங்களில் கிடைத்த சோழர்கால மட்பாண்டங்களை நினைவு படுத்துவதாக உள்ளன. 1970 களில் கோட்டைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராஜேந்திர சோழனது கல்வெட்டு நல்லூரில் இருந்த ஆலயம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுகின்றது. இந்நல்லூர் தற்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரைக் குறித்ததா அல்லது சோழர் காலத்தில் கோட்டைப் பகுதியில் ஓர் இடம் நல்லூர் என்ற பெயரில் இருந்ததைக் குறிப்பிடுகின்றதா என்பது தெரியவில்லை. பேராசிரியர் இந்திரபாலா மற்றும் பேராசிரியர் வி.சிவசாமி இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட காலப்பகுதியில் கோட்டை அரணில் தெற்குப் பகுதியில் கி.பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரந்தக் கல்வெட்டை அவதானித்தாகக் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாதாரங்களை நோக்கும் போது கோட்டைப் பிரதேசம்

சோழரின் வணிக மையமாக மட்டுமன்றி அவர்களின் குடியிருப்பு மையமாகவும் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் கி.பி 993 இல் இருந்து கி.பி 1070 வரை இலங்கையில் சோழரின் தலைநகராகப் பொலநறுவை இருந்த போது அவர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டச் செல்வாக்குக்கு பெருமளவு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே காணப்பட்டன. பேராசிரியர் க.இந்திரபாலா கி.பி 993 இல் முதலாம் இராஜராஜ சோழன் அனுராதபுர அரசை வெற்றி கொள்ள முன்னர் அவர்களின் ஆதிக்க மையம் யாழ்ப்பாணத்தில் அல்லது திருகோணமலையில் இருந்துள்ளது எனக் கூறியுள்ளார். இககூற்றைக் கோட்டையில் கிடைத்து வரும் சோழர் கால ஆதாரங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமளிக்கின்றது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கி.பி 5 அம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்ட வணிக கலாசார உறவுகள் பற்றிச் சீன இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றில் வட இலங்கையுடனான உறவுகள் பற்றிக் குறிப்புக்கள் தெளிவற்றதாக இருப்பினும் வட இலங்கை முக்கிய பங்கு வகித்ததை மாந்தை, பூநகரி, கந்தரோடை முதலான இடங்களில் கிடைத்த சீன நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் உறுதி செய்கின்றன. இவ்வணிக கலாசார உறவுகள் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் அல்லது இப்பிரதேசத்தினூடாகவும் நடைபெற்றிருக்கலாம் என்பதனை இங்கு கிடைத்து வரும் ஆதராராங்கள் உறுதி செய்கின்றன. அவற்றுள் அதிகளவான வை சீன மட்பாண்டங்களும், கண்ணாடிப் பொருட்களும் கோட்டை அகழ் வாய்வில் மட்டுமன்றி களவாய்வின் போதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றிடையே கண்டுபிடிக்கப்பட்ட சீன நாணயங்களின் காலம் கி.பி 10ஆம் நூற்றாண்டக்கும் 13 அம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகக் கணிப்பிடப்பட்டதனால் இக்காலப் பகுதியில் சீன நாட்டவர்



கோட்டைப் பிரதேசத்தடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் எனக் கூறலாம்.

சமகாலத்தில் பொலநறுவை அரசு வட இலங்கையில் உள்ள ஊர்காவற்றுறை துறைமுகம் ஊடாக தென்னிந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் அரசியல், பொருளாதார தொடர்புகளை ஏற்படுத்தியதாக பாளி இலக்கியமான சூளவம்சம் கூறுகின்றது. இது உண்மையென்பதனை நயினாதீவில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ் கல்வெட்டும் உறுதி செய்கின்றது. இக்கல்வெட்டு ஊர்காவற்றுறைமுக நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரிகள், வெளிநாட்டு வணிகருக்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும், அவர்களிடம் பெறவேண்டிய வரிமுறைகளையும் குறிப்பிடுகின்றது. இந்நிலையில் கோட்டைப் பகுதியில் பொலநறுவை அரசு கால நாணயங்கள் பல கிடைத்திருப்பது பொல நறுவை அரசு கால வெளிநாட்டு வர்த்தகத்தில் கோட்டைப் பிரதேசமும் முக்கிய பங்கு வகித்திருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

நகரமயமாக்கம்

தென்னாசியாவில் நகரமயமாக்கத்தின் தோற்றமும், அதற்கான வரலாற்றுப் பின்னணியும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. பொதுவாக நிலையான குடியிருப்புகள், நிரந்திர பொருளாதாரக்கட்டமைப்பு, மிகை உற்பத்தி, சிறுதொழில் நுட்பவளர்ச்சி, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் என்பன நிகழ்ந்தற்கான ஆதாரங்கள் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோன்றியதன் தொடக்ககாலமாகக் கூறபடுகின்றது. தமிழகத்தில் சேர நாட்டின் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன உரோம நாட்டு வணிகத் தொடர்பால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பாண்டி நாட்டிலும், சோழ நாட்டிலும் இவை விவசாய உற்பத்தியால் தோன்றியதாகக் கூறப்படுகிறது. வடஇந்தியாவில் நகரமயமாக்கத்தின் தோற்ற காலம் கி.மு.500-400 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்திலும் இலங்கையிலும் இதன் தோற்ற காலம் ஏறத்தாழ கி.மு. 200 எனக் கூறப்படுகிறது. இலங்கையில் புராதன நகரங்கள் தோன்றிய இடங்களாக அநுராதபுரம், மகாகமை, கந்தரோடை, மாதோட்டம் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு இவ்விடங்கள் பிற நாடுகளுடன் குறிப்பாக உரோம நாட்டுடன் கொண்டிருந்த கடல்சார் வணிபத் தொடர்புகள் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொண்ட மேலாய்வில் கிடைத்த பண்டைய நாணயங்கள், பலவகை மட்பாண்டங்கள் இப்பிரதேசம் தொடக்கத்தில் உள்நாட்டு வர்த்தகத்திலும் பின்னர் இந்தியாவுடனும் இவற்றைத் தொடர்ந்து உரோம அரேபிய, சீனா முதலான நாடுகளுடன் கடல்சார் வர்த்தகத்தில் ஈடுபட்டதை உறுதிசெய்கின்றன. இவற்றை அகழ்வாய்வில் கிடைத்த ஆதாரங்கள் மேலும் உறுதி செய்கின்றன. இவ்விடத்தில் கொட்றிங்ரன் என்ற அறிஞர் கோட்டைப் பிரதேசத்தில் இருந்து 20 உரோம நாட்டு தங்க நாணயங்களைச் கண்டுபிடித்ததாகக் கூறியிருப்பதும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது யாழ்ப்பாண நகர உருவாக்கம் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கந்தரோடை, அநுராதபுர, மகாகமை முதலான நகரங்கள் தோன்றியதன் சமகாலத்தில் ஏற்பட்டதெனக் கூறலாம்.

கோட்டைக்குள் மறைந்து காணப்பட்ட ஆலயங்களின் அழிபாடுகள்


கோட்டை மீள் புனரமைப்பு பணிகளின் போது கிடைத்து வரும் வரலாற்றுப் பெறுமதி மிக்க ஆதாரங்களுள் 16 ஆம் நூற்றாண்டில் தற்போதைய கோட்டை கட்டப்படுவதற்கு முன்னர் வழிபாட்டிலிருந்த இந்து ஆலயங்களின் அழிபாடுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இக்கோட்டையைக் கட்டுவதற்கு கோட்டைக்கு அயலில் உள்ள தீவுகளிலும், கடலிலிருந்து கொண்டுவரப்பட்ட கோறல் கற்கள் பயன்படுத்தியதை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் கோறல் கற்களுடன் எந்தவித அளவுப் பிரமாணமம் இன்றி ஏற்கனவே பிற கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட கருங்கள் மற்றும் சுண்ணாம்புக் கற்றூண்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதைக் காணமுடிகின்றது. இக்கற்கள் இந்து ஆலயங்களுக்குரியவை என்பதை அக்கற்களின் வடிவமைப்புக்களும் அவற்றில் செதுக்கப்பட்டுள்ள கலைவடிவங்களும் உறுதிசெய்கின்றன. அக்கற்கள் காணப்படும் இடங்களுள் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு ஒல்லாந்தரால் மீள்ளுருவாக்கம் செய்யப்பட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் அழிபாடுகளிடையே கிடைத்த கற்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

1730 இல் ஒல்லாந்தர் ஆட்சியில் மீளக் கட்டிமுடிக்கப்பட்ட இவ்வாலயத்தின் அமைப்பு சிலுவை போன்ற வடிவத்தில் அமைந்திருந்தது. ஏறத்தாழ 600 அடி சுற்றளவு கொண்ட இவ்வாலயத்தில் 50 அடி அகலமான இரு வாயில்கள் இருந்துள்ளன. வெளியில் சிறிதாக தோற்றமளித்த இவ்வாலயத்தின் உள்ளே மிக அலங்காரமான ஒல்லாந்தர் கால கலை மரபின் அமைந்த போதனை மண்டபமும், கலையரங்கும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இங்கு ஒல்லாந்தர் கால தேவாலய மணியோடு போர்த்தக்கேய மணியும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் இவ்வாலயத்தில் பல்வேறு கால கட்டத்திற்குரிய கல்லறைகளும் போர்த்தக்கேய கல்லறைகளும், போர்த்தக்கேய ஒல்லாந்து, ஆங்கிலேய கால போர் வீரர்கள், உயர் அதிகாரிகள் என்போருக்காக எழுப்பப்பட்ட நினைவுக் கற்களும், சாசனங்களும் கண்டபிடிக்கப்பட்டுள்ளன. இவ் ஆதாரங்கள் போர்த்துக்கேயர் கட்டிய கத்தோலிக்க தேவாலயத்தையே பின்னர் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றினர் என்பதை உறுதி செய்கின்றன. ஆயினும் தற்போது இவ்வாலயத்தின் முழுமையான அமைப்பையே அல்லது அவற்றின் தொழில்நுட்பக் கலை மரபினையோ தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவ்வாலயம் முற்றாக அழிவுண்டு கல் மேடாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வாலய அழிபாடுகளிடையே கிடைத்த சான்றுகளைக் கொண்டு முருகைக் கல், செங்கட்டி, சுதை என்பவற்றைப் பயன்படுத்தி இவ்வாலயத்தைக் கட்டியுள்ளனர் என்பது தெரிகின்றது. ஆயினும் இவ்வாலயக் கட்டிடக் கலை மரபுக்கு பொருந்தாத வகையில் சில கருங்கற் தூண்களும், சுண்ணாம்புக் கற்றூண்களும் இங்கு காணப்படுகின்றன. இவை அழிவடைந்த ஆலயத்தின் மேற்படையில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். இவ்வழிபாடு முழமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படுமானால் மேலும் பல கற்கள் கிடைக்க வாய்ப்புண்டு. இங்கு கிடைத்த கற்களில் கருங்கல் மற்றும் முருகை கற்றூண்கள் சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும். அதில் இரு கருங்கற்றூண்களும் இந்து ஆலயத்தின் கற்பக்கிருகம் அல்லது முன் மண்டபத்திற்குப் பயன்படுத்தப்பட்டனவாக இருக்கலாம். சற்சதுர வடிவில் நன்கு பொழிந்து வெட்டப்பட்ட தூண்களின் நடுப் பாகத்தில் தாமரைப் "பூ" வடிவம் அழகாக செதுக்கப் பட்டுள்ளது. ஒரு கருங்கற்றூணின் மேற் பாகத்தில் காணப்படும் தாமரை வடிவம் திராவிடக் கலை மரபிற்குரிய போதிகை வடிவமாகக் காணப்படுகின்றது. மற்றைய தூண் சுண்ணக் கல்லால் ஆனது. ஏறத்தாழ ஐந்து அடி நீளமும் 1' அகலமும் கொண்ட இத்தூண் பலகை போன்ற வடிவில் நன்கு பொழியப்பட்டுள்ளது. இத் தூண் ஆலய முகப்பின் வாசல்படியின் அல்லது கபோதத்திற்கு மேல் வைக்கப்பட்ட கற்பலகையாக இருக்கலாம்.

ஆலயங்களுக்குரிய கற்கள் பயன்படுத்திய இன்னொரு இடம் மீள்புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்ட கோட்டையின் வாசல் பகுதியாகும். சுரங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ள நீண்ட பாதையின் கூரை கோரல் கற்களைப பயன்படுத்தி பிறை வடிவில் கட்டப்பட்ட போதும் அதன் கீழ்த்தள வாசல் பகுதி ஆலயங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள கருங்கல் மற்றும சுண்ணாம்பு கற்றூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நூற்றூக்கு மேற்பட்ட இத் தூண்களின் அளவு, வடிவமைப்பு, அலங்காரம் என்பவற்றின் ஒழுங்கற்ற தன்மைகள் இக்கற்கள் கோட்டை கட்டப்படுவதற்கு முன்னர் வேறுபட்ட கலை மரபுகளில் ஆலயங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டவை என்பதை நன்கு உறுதிப்படுத்துகின்றன.

கோட்டையின் மேல் தளத்திலுள்ள பீரங்கித் தளங்களின் சுவர்கள் குறிப்பிட்ட அளவுகளில் வடிவமைக்கப்பட்ட கோறல் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. ஆயினும் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இடங்களை அமைப்பதற்கு ஆலயங்களுக்குரிய வைரமான



தூண்களும் பிற கற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இப்பீரங்கித் தளங்களில் பீரங்கிகள் பொருத்துவதற்கு அமைக்கப்பட்ட வாசல் பகுதிகள் மீள்கட்டுமானத்திற்காக அகழப்பட்ட போது அதன் கீழ்ப் பகுதிகளிலும் மேல் பகுதிகளிலும் கோறல் கற்களோடு சுண்ணக்கல் மற்றும் கருங்கல் தூண்களும் பயன்படுத்திக் கட்டப்பட்டதற்கான ஆதாரங்களை காணமுடிந்தது. அவற்றில் இரு சுண்ணக் கற்றூண்கள் நடுவில் சற்சதுரமாக வெட்டப்பட்டு ஒரு பக்கத்தில் ஒரு துவாரமும் மறு பக்கத்தில் இரு துவாரமும் இடப்பட்டு இருபக்க நுணிப்பாகங்களும் அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அலங்காரமாகச் செதுக்கப்பட்ட இத்தூண்களில் காணப்படும் துவாரங்கள் இரு தூண்களை ஒன்றாகப்பொருத்தி முன்னர் வேறொரு கட்டடத்திற்கு பயன்படுத்தப்பட்ட தூண்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மேலும் சுடுதளங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சுண்ணக்கற்கள் வளைவாக வெட்டப்பட்டு அவை பிற கற்களுடன் பொருத்திக் கட்டும் வகையில் அவற்றின் உட் பாகம் மூன்று படிகள் கொண்டதாகச் செதக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்கு பயன்படுத்தப்பட்ட இக்கற்கள் தூணின் மேற்புறத்தில் பலகைக்கு மிண்டு போல் அமைந்துள்ள வளைவான கொடுங்கையாக இருக்கலாம். இச்சுடு தளங்களில் சற்சதுர வடிவில் நடுவில் பள்ளமாக அமைந்த கருங்கற் பலகைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் மிகப் பெரிய கருங்கல்லின் நடுப்பகுதியில் பள்ளமிடப்பட்ட கருங்கல் ஒன்று கிடைத்துள்ளது. இக்கல் கர்ப்பக்கிருகத்தில் இருந்த ஆவுடையாக அல்லது தெய்வச் சிலை வைக்கப் பயன்படுத்திய பீடமாக எடுத்துக்கொள்ள இடமுண்டு.

மேற்கூறப்பட்ட கற்களும் கற்தூண்களும் இந்த ஆலயங்களுக்குரியவை என்பதில் ஐயமில்லை. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தால் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்களை முன்னிலைப்படுத்திய அந்நியர் ஆட்சியில் கோட்டைக்குள் இந்து ஆலயங்கள் கட்டியிருக்க வாய்ப்பில்லை. இதனால் இவ்வாலயக் கற்கள் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட ஆலயங்களுக்குரிய கற்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவ்வாலயங்கள் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் கோட்டை இருந்த இடத்தில் கட்டப்பட்டிருந்தவையா அல்லது கோட்டைக்கு வெளியே கட்டப்பட்டிருந்தவையா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

16ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் மேலாதிக்கம் செலுத்திய போர்த்துக்கேயரும் பின் வந்த ஒல்லாந்



தரும் தமது கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதங்களைப் பரப்புவதற்காக சுதேச மதங்களுக்கு எதிரான கலை அழிவுக் கொள்கையை கடைப்பிடித்தனர். இத னால் இந்து ஆலயங்கள் மட்டுமன்றி அவர்களின் இருப்பிடங்களும் அழிக்கப் பட்டன. போர்த்துக்கேயர்தமது ஆட்சியில் யாழ்ப்பாணத்திலிருந்த சிறிதும் பெரிது மான 500 மேற்பட்ட இந்து ஆலயங்களை அழித்தாக தமது நூலில் குறிப்பிட்டுள் ளனர். 1619 இல் நல்லூரை வெற்றி கொண்ட போர்த்துக்கேயப் படை வீரர்கள் அங்கிருந்த பெரிய ஆலயத்தை தமது பாதுகாப்பு மையமாகவும், நிர்வாக மைய மாகவும் பயன்படுத்திவிட்டு பின்னர் அவ் லயங்களை அழித்ததாகவும் கூறியுள் ளனர். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயக் கற்களைப் பயன்படுத்தியே கிறிஸ்தவ ஆலயங்களையும், கோட்டைகளையும் கட்டியதாகத் தெரிகின்றது. இதனால் யாழ்ப்பாணக் கோட்டையில் காணப்படும் கற்களை யாழ்ப்பாண அரசு காலத் தி லிருந்த இந்து ஆலயங்களுக்குரிய கற் களாகக் கருதமுடியும். ஆயினும் தற்போது கோட்டையில் கிடைத்து வரும் ஆதாரங் கள் கிறிஸ்தவ சகாப்த காலத்திலிருந்து இவ்விடம் குடியிருப்பு மையமாகவும், வணிக நகரமாகவும் இருந்துள்ளதை உறுதி செய்துள்ளதால் இப்பிரதேசத்திலும் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் இந்து ஆலயங்கள் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. இதை எதிர் கால ஆய்வுகளே உறுதி செய்யவேண் டும்.

யாழ்ப்பாணக்கோட்டை தோன்றிய வரலாற்றுப் பின்னணி

தற்காலத்தில் கீழைத்தேய நாடுகளிலுள்ள பெரும்பாலான கோட்டைகள் கி.பி 16 ஆம் நூற்றாண்டிலிருந்து வர்த்க நோக்கோடு வந்த போர்த்துக்கேயர், பின்வந்த ஒல்லாந் தர் மற்றும் ஆங்கிலேயரால் கட்டப்பட் டவையாகும். ஆனால் உலகில் நாகரிக உருவாக்கம் நிகழ்ந்த காலத்திலிருந்து ஆட்சியாளரையும், அரச வம்சத்தையும் பாதுகாக்கும் நோக்கில் பல அளவு களிலும், பல வடிவங்களிலும் கோட்டை கள் கட்டப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இவற்றைக் குறிக்கும் பெயர்கள் அந்தந்த நாடுகளின் மொழி வழக்கிற்கு ஏற்ப பல பெயர் கொண்டு அழைக்கப்பட்டன. தென் னாசியாவில் தொடக்க கால கோட்டைகள் சிந்துவெளி நாகரிகத்திலும்,வேதகால நாகரிகத்திலும் இருந்ததற்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் உண்டு. தமிழகத் தில் சங்க காலம் தொட்டு கோட்டைகள் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றது. சோழர் ஆட்சியில் அரசர்கள் கட்டிட ஆலயங்களையே அவர்களின் அரண் மனையாகவும், பாதுகாப்பு அரணாகவும், கோட்டையாகவும் பயன்படுத்தியதை தொல்லியல் ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழில் கோட்டை என்ற சொல்லுக்கு மதிலரண், காடு, பரிவேடம், வீட்டின் உட்புறம் எனப் பொருள் காணப்படுகின் றது. யாழ்ப்பாணப் பேரகராதியில் கோட் டைப் போர் என்பதற்கு வைக்கற் போர் எனப் பொருள் காணப்படுகின்றது. தற் காலத்தில் இலங்கையிலுள்ள கோட்டை களில் பெரும்பாலானவை போர்த்துக் கேயரால் கட்டப்பட்டு பின்னர் அவை ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்களின் கலை மரபில் மாற்றி வடிவமைக்கப்பட்டு பிரித் தானியர் ஆட்சியில் சிறிய மாற்றங்களுக் குள்ளாகின. இக்கோட்டைகள் தென் னிலங்கையில் கொழும்பு, காலி, மாத் தறை, கற்பிட்டி முதலான இடங்களிலும், வட இலங்கையில் யாழ்ப்பாணம், மன் னார், பூநகரி, இயக்கச்சி, ஆனையிறவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இடங் களிலும் காணப்படுகின்றன. போர்த்துக் கேயர் ஆட்சியிலிருந்து இக்கோட்டைகள் மிகப் பெரிய அரண்கள், அகழிகள், பீரங்கித் தளங்கள் கொண்டு அமைக்கப் பட்டாலும் கி.மு 3ஆம் நூற்றாண் டிலிருந்தே மிகச் சிறிய அளவிலான கோட்டைகள் இலங்கையில் பயன் பாட்டிலிருந் ததற்கான ஆதாரங்கள் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.

கி.மு 2ஆம் நூற்றாண்டில் எல்லாள மன்னனுக்கும் துட்டகாமினிக்குமிடையே நடந்த போராட்டத்தில் அநுராதபுரத்திற்கு தெற்கே இருந்த கோட்டை பற்றி மகா வம்சம் கூறுகின்றது. இதன் சமகாலத் தைச் சேர்ந்த கிழக்கிழங்கை பிராமிச் சாசனம் ஒன்றில் கொடவேள் என்ற பெயர் காணப்படுகின்றது. அதைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் "கோட்டை வேள்" எனப் பெயர் கொண்டுள்ளார். இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 21 பிராமிக் கல்வெட்டுக்களில் வேள் எனும் தமிழ்ப் பெயர் காணப்படுகின்றது. இப்பட்டப் பெயர் சங்ககாலத் தமிழகத்தில் குறு நில அரசர்கள் பயன்படுத்திய வேள்" வேளீர்" என்ற பட்டப் பெயர்களை ஒத்த தாகும். பேராசிரியர் ரோமிலா தாபர் வட மொழியில் "ராஜா " என்ற பட்டப் பெயர் என்ன பொருளைக் குறித்ததோ அதே பெருளை தமிழில் "வேள்" என்ற பட்டப் பெயர் குறித்ததாக கூறுகின்றார். மகாவம் சத்திலும் வேள் நாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இதனால் கிழக் கிலங்கைப் பிராமிச் சாசனத்தில் வரும் "கோட்டை வேள்" என்பது வேள் என்ற பட்டத்திற்குரியவனின் கோட்டையாகக் கருத இடமுண்டு.

மேலும் பொலநறுவை அரசு காலத்தி லிருந்து கோட்டைகள் பற்றிய செய்திகள் பாளி, சிங்கள இலக்கியங்களில் காணப் படுகின்றன. 11 ஆம் நூற்றாண்டில் 1 ஆம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் பௌத்த மதத்திற்கு பாதுகாப்பளித்த சோழர் கால வேளைக்காரப் படையினர் நிலை கொண்டிருந்த இடங்களாக வட இலங்கையில் மாதொட்ட, மட்டிகாவாட்ட தீர்த்த ஆகிய இடங்கள் சூளவம்சத்தில் குறிப்பிடப்படகின்றது. அதில் மாதொட்ட என்ற இடம் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாதோட்டம் என்ற இடத்தை குறிக் கின்றது. மட்டிகாவட்ட தீர்த்த என்ற இடம் அடையாளம் காணப்படாது இருந்தாலும் இவ்விடம் பூநகரியிலுள்ள மட்டுவில் நாடாக இருக்கலாம். இதைப் பொருத் தமென முடிவாக எடுத்துக் கொள்ளும் பேராசிரியர் பொ.இரகுபதி பாளி இலக் கியம் கூறும் மட்டிகாவத்த என்பதை களி மண்ணால் வட்டமாக (மட்டி, களி மண், வட்ட, வட்டம்) அமைக்கப்பட்ட கோட்டை எனப் பொருள் கொள்கின்றார். பொலறு வை இராசதானி வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள இராசதானி தெற்கு நோக்கி தம்பதெனியா, யாப்பகூவா, குருநாகல், கோட்டை ஆகிய இடங்களுக்கு இடம் மாறிய போது அங்கெல்லாம் அரசின் பாதுகாப்பு கருதி கோட்டைகள் அமைக்கப் பட்டதை பாளி, சிங்கள இலக்கியங்கள் உறுதிசெய் கின்றன. இந்நிலையில் சிங்கள இராசதானிகள் தென்னிலங்கை யில் தோன்றிய போது வட இலங்கையில் கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தமிழர் சார்பான அரசு தோன்றியது. சூளவம்சம், இராஜாவலிய முதலான பாளி, சிங்ள இலக்கியங்கள் அவ்வரசின் படை வீரர்கள் நிலைகொண்டிருந்த இடங்களாக மன்னார் பட்டினம், மா தோட்டம், கோண, பதி மாவடடங்கள், புலைச்சேரி, வலிகாமம், ஊர்காவற்றுறை முதலான இடங்களைக் குறிப்பிடகின்றன. இவ்விடங்கள் சில சமகாலத்திலும் பிற் காலத்திலும் துறைமுகங்கள், கோட்டை கள் இருந்த இடங்களாக காணப்படுகின் றன. இதற்கு உதாரணமாக இரண்டாம் இராசாதிராச சோழனது 12 ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த பல்லவராயன் பேட் டை மற்றும் திருவாலங்காட்டு கல்வெட்டுக் கள் வட இலங்கை மீது படையெடுத்த சோழப் படை வீரர்கள் மட்டிவாள், ஊராத்தோட்டை, வலிகாமம், மாதோட்டம் ஆகிய இடங்களில் நிலை கொண்டிருந்த படை வீரர்களையும், யானைகளையும் சிறைப்பிடித்து தமிழ்நாட்டுக்கு கொண்டு சென்றதாக கூறுவதை குறிப்பிடலாம். இவற்றுள் ஊர்காவற்றுறை, மாதோட்டம் ஆகிய இடங்களில் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டைகள் உள்ளன. மட்டிவாள் என்ற இடம் தற்போது பூநகரியிலுள்ள மட்டுவில் நாட்டைக் குறிப்பிடுகின்றது. இவ்விடத்தில் போர்த்துக்கேயரால் கட்டப் பட்டு பின்னர் ஒல்லாந்தரால் மீளமாற்றி அமைக்கப்பட்ட பூநகரிக் கோட்டை அமைந்திருப்பது இங்கு சிறப்பாக நோக்கத் தக்கது.

ஆகவே தற்போதைய யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பாணத்தில் அந்நியர் ஆதிக்கம் நிலவியதன் அடையாளமாக இருப்பினும் இவ்விடத்தில் கோட்டை கட்டுவதற்கு பொருத்தமான இடமாக போர்த்துக்கேயர் தெரிவு செய்தமைக்கு அவ்விடத்தின் பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியும் அவர்கள் யாழ்ப்பாணத் தை கைப்பற்றிய போது இவ்விடம் யாழ்ப் பாண அரசின் மேலாதிக்கதிதின் கீழ் இருந்ததையும் முக்கிய காரணங்கள் என் பதில் சந் தேகமில் லை பண் டு தொண்டு கடல் சார் வாணிபத்தில் முக்கிய கேந்திர மையமாக விளங்கிய இவ்விடம் யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கதிற்கு வருவதற்கு முன்னர் சோழர் ஆட்சில் அவர்களின் வணிக மையமாகவும் பாது காப்பு தளமாகவும் இருந்திருக்கலாம் என் பதை அங்கு கிடைத்து வரும் தொல்லியல் ஆதாரங் கள் உறுதிசெய் கின் றன. இலங்கையில் உள்ள புராதன இந்து ஆலயங்கள் பற்றி ஆராந்த பேராசிரியர் சி.பத்மநாதன் சோழர் கால ஆலயங்களில் கருங்கற்களைப் பயன்படத்திய போது யாழ்ப்பாண அரசுகள் சுண்ணாம்புக் கற் களைப் பயன்படுத்தியே ஆலயங்களை அமைத்ததாகக் கூறுகின்றார். யாழ்ப் பாணக் கோட்டைக்குள் இருவகை கற் களையும் பயன்படுத்தி கட்டப்படுவதற் கான அழிபாடுகள் பரந்தளவில் காணப் படுகின்றன. 1980 களில் கோட்டை வாசல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு இங்கிருந்த ஆலயம் ஒன்றுக்கு இரா ஜேந்தி சோழ மன்னன் தானம் வழங்கிய செய்தியைக் கூறுகிறது. கோட்டை அழி பாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்ட கருங் கல்லால் கட்டப்பட்ட இந்து ஆலயங்களின் அடிபாடுகளின் கலைமரபு சோழர் கலை மரபைச் சேர்ந்தவையாகக் காணப்படு கின்றன. கோட்டையின் பழைய பெயரான ஐநூற்றுவன் வளவு இலங்கையில் சுயாட்சி கொண்ட நகரங்களை உருவாக் கிய சோழர்கால ஐநூற்றுவன் என்ற வணிகக கணத் தினை நினைவு படுத் துவதாக உள்ளது. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது சோழர் காலத் தில் கோட்டைப் பிரதேசம் முக்கிய துறை முக நகராக வளர்ச்சியடைந்ததைக் காட் டுகிறது. இப்பின்னணியில் நோக்கும் போது கோட்டையில் கிடைத்து வரும் கருங்கல்லாலான ஆலய அழிபாடுகளை சோழர் காலத்தில் இங்கிருந்த ஆலயங் களாகக் கொள்வது பொருத்தமாக விருக் கலாம்.

பேராசிரியர் புஸ்பரட்ணம் - நன்றி












முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி நினைவும் 10.10.2021

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்

10 அக்டோபர்



2ம் லெப்.
கஸ்தூரி

வீரவேங்கை
ரஞ்சினி

வீரவேங்கை
தயா

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்